பக்கங்கள்: இருபத்துஎட்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 27 வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 11 செவ்வாய்க்கிழமை (27.12.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 031



நைஜீரியாவில் 100 பேர் உடல் சிதறி சாவு 11



21 கேரளா - தமிழகத்தில் விரைவில் இயல்பு நிலை



25 முட்டுக்கொடுக்கிறார் சமர வீர

# டில்லியின் வலியுறுத்தலை சாதகமாகப் பரிசீலிக்குக!

## இந்தியாவின் கருத்தை வரவேற்று அரசிடம் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கோரிக்கை

கொழும்பு, டிசெம்பர் 27

அமைதித்தீர்வு முயற்சிகள் குறித்து இந்தியா வெளியிட்டிருக்கும் கருத்துகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்றிருக்கும் அதேசமயம், புதுடில்லியின் இந்த வலியுறுத்தலை இலங்கை அரசு சாதகமான முறையில் பரிசீலிக்க வேண்டுமெனவும் சுட்டிக்காட்டியிருக்கிறது.



நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளிவந்தபின்னர் இந்தியா வெளியிட்டிருக்கும் கருத்துகள் தொடர்பில் நேற்று உதயனிடம் கருத்து தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இந்த முக்கியமான சந்தர்ப்பத்தில் இந்தியாவின் கருத்துகள் உள்வாங்கப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளரால் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையை நாம் வரவேற்கிறோம். அதில் சில முக்கியமான

பக் 27

## மன்னார் எண்ணெய்க் கிணறுகளில் 2 ஆம் கட்ட அகழ்வாய்வு

கொழும்பு, டிசெ 26

மன்னார் கடல் படுக்கையில் அண்மையில் பெற்றோலிய வளமுள்ளதாகக் கண்டறியப்பட்ட எண்ணெய்க் கிணறுகளில் அடுத்த கட்ட அகழ்வாய்வை மேற்கொள்ளவுள்ளதாக ஆய்வுக்குப் பொறுப்பான 'கரைன் லங்கா' என்ற இந்திய நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த நிறுவனம் மேலும் தெரிவித்ததாவது:-

மன்னாரில் மூன்று எண்ணெய்க் கிணறுகளில் எமது நிறுவனம் ஆய்வுகளை மேற்கொண்டது. இதன்போது அவற்றின் இரண்டு கிணறுகளில் இயற்கை வாயு கண்டறியப்பட்டது. மூன்றாவது கிணற்றில் எந்தவித வளமும் கண்டறியப் படாததால் அது டிசெம்பர் 14 ஆம் திகதியுடன் மூடப்பட்டு விட்டது. ஏனைய இரண்டு கிணறுகளிலும் முதற்கட்ட ஆய்வு வெற்றிகரமாக நடைபெற்றதால் தற்போது பெற்றோலிய வளத்தை தேடியறியும் 2 ஆம்

பக் 27

## குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை நடத்த நாம் தயார்

### இந்தியாவுக்கு இலங்கை பதில்

கொழும்பு, டிசெ.27

அமைதித் தீர்வு தொடர்பாக இந்தியா வெளியிட்டிருக்கும் கருத்துகளை இலங்கை அரசு முழுமனதுடன் ஏற்றுக் கொள்வதாக வெளிவிவகார பிரதியமைச்சர் நியோமால் பெரேரா நேற்றுத் தெரிவித்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் வெளியிட்ட கருத்துகள் தொடர்பாக நேற்று 'உதயனிடம் அபிப்பிராயம் தெரிவித்தபோதே பிரதியமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நியாயமான அரசியல் தீர்வொன்றை ஏற்றுக்கொள்ளக்

பக் 27

## வட, கிழக்குக்கு சூறாவளி எச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ 26

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் புயலாக மாற்றம் அடைந்து வருவதனால் மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் மட்டக்களப்புப் பகுதி மீனவர்களைக் கடற்தொழிலுக்கு செல்ல வேண்டாம் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் எச்சரித்துள்ளது.

நேற்று திங்கட்கிழமை காலை விடுத்த அறிவித்தலிலேயே முகாமைத்துவ மத்திய நிலையம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

வங்களா விரிகுடாவின் தென்மேற்கு பகுதியில் நிலை கொண்டுள்ள தாழமுக்கம் புயலாக மாற்றமடைந்து வருகின்றது. இது நேற்று அதிகாலை 2 மணியளவில் யாழ்ப்பாணத்தில் கிழக்கு கடற்கரையிலிருந்து 750 கிலோ மீற்றர் தொலைவில் நிலை கொண்டிருந்தது. இந்தப் புயலானது தற்போது வடமேற்கு திசையில்நகர்ந்து வருகின்றது.

இதன் காரணமாக மன்னார், யாழ்ப்

பக் 27

## முல்லைத்தீவில் நேற்று கடல்பெருக்கு சுனாமி அச்சத்தில் மக்கள் இடப்பெயர்வு

முல்லைத்தீவு, டிசெ.27

முல்லைத்தீவு பகுதியில் நேற்றிரவு திடீரென குடிமனைகளுக்குள் கடல் நீர் உட்புகுந்ததால் மக்கள் ஆழிப்பேரலை வந்து விட்டதோ என்ற அச்சத்தில் இடம்பெயர்ந்தனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:

நேற்று இரவு 9 மணியளவில் முல்லைத்தீவுக் கரையோரமாக திடுதிபு என கடல் நீர் கரையைக் கடந்து 300 மீற்றர் தூரம் ஊர்மனைக்குள் உட்புகுந்தது. இதனால் மக்கள் பெரும் அச்சம் கொண்டு கையில் கிடைத்த பொருள்களுடன் பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர்ந்து சென்றனர். கள்ளப்பாடு, செம்மலை, அளம்பில், சிலாவத்தை, உப்புமாவெளி, முல்லைத்தீவு நகரம் என்பனவற்றுக்குள் கடல்நீர் உட்புகுந்து கொண்டது. முழங்கால் அளவு உயரத்துக்கு கடல் நீர் கிராமங்களுக்குள் உட்புகுந்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

ஆழிப்பேரலை ஏற்பட்டு ஏழாம் ஆண்டு நிறைவு நாளில் கடல் நீர் பெருக்கெடுத்ததால் சுனாமி ஏற்பட்டு விட்டதோ என்ற அச்சத்தில் ஏராளமான மக்கள் உயரமான பகுதிகளை நோக்கி பாதுகாப்புத் தேடி நகர்ந்து சென்றனர்.

இதேவேளை, ஊர்மனைக் குள் புகுந்த கடல்நீர் இச்செய்தி எழுதப் படும் வரை தொடர்ந்தும் அப் பகுதிகளிலே தேங்கி நின்றது. (ந)

## தீப்பற்றின மோட்டார் சைக்கிள்கள் கல்வியங்காட்டில் நேற்று பரபரப்பு




கொழும்பு, டிசெ.27

எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு பெற்றோல் நிரப்ப வந்த மோட்டார் சைக்கிள்கள் தீப்பிடித்துக்கொண்டதில் இருவர் படுகாயமடைந்தனர். இரு மோட்டார் சைக்கிள்களும் எரிந்து சாம்பராகின.

இந்தச் சம்பவம் கல்வியங்காட்டிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு பெற்றோல் நிரப்பப்பட்டுகொண்டிருந்தது. அப் போது அந்த நிலையத்துக்கு பெற்றோல் நிரப்புவதற்கென இன்னொரு மோட்டார் சைக்கிளும் வந்தது. வந்த மோட்டார் சைக்கிள் இயங்கு நிலையிலேயே இருந்ததால் திடீரென

பக் 27

## 3 'ஏ' சித்தியில் வேம்படி முன்னணிப் பெறுபேறு; வட.இந்து மாணவி கலைப்பிரிவில் முதல்நிலை

யாழ்ப்பாணம்,டிசெ.27

நேற்று முன்தினம் வெளியாகிய உயர்தரப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த 10 மாணவிகள் 3'ஏ' பெறுபேற்றினைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதல் நிலையைப் பெற்றுள்ளனர். இரண்டாவது இடத்தை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பெற்றுக் கொண்டுள்ளது.



எஸ்.சத்தியா

இந்துக்கல்லூரியைச் சேர்ந்த 9 மாணவர்கள் 3 'ஏ' பெறுபேற்றினைப் பெற்றுள்ளனர்.

பக் 27

## உயர்தரப் பெறுபேறுகளின் தர நிலையில் மட்டுமே தவறு

### நேற்றிரவே சீராக்கப்பட்டது

யாழ்ப்பாணம், டிசெ.27

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகளிலும், 'இசற்-ஸ்கோரிலும் எந்த விதமான மாற்றங்களும் இல்லை. மாவட்ட மற்றும் தேசிய ரீதியான தர வரிசைகளிலேயே சிறு தவறுகள் இடம்பெற்றுவிட்டன. இவை சீரமைக்கப்பட்டுப் புதிய சரியான தரவரிசை நேற்றிரவு வெளியிடப்பட்டது.

இவ்வாறு பரீட்சைத்திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் உதயனுக்கு நேற்றுத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வெளியான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் குளறுபடிகள் இடம்பெற்றுள்ளதாக முறைப்பாடுகள் எழுந்துள்ளன.

பக் 27

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்
செய்தி : 021-5678844
விளம்பரம் : 021-5679731
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com

# காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்காமல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது

## ஜனாதிபதிக்கு ஆனந்தசங்கரி கடிதம்

கொழும்பு, டிசெ.27

13 ஆவது திருத்தச்சட்டத்தின் கீழ் காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்காவிட்டால் இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத்தீர்வு காண முடியாது - என்று தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

முதலாவதாக நாட்டை ஒரு கொடியின் கீழ் ஒற்றுமைப்படுத்தியுள்ளேன் எனக் கூறுவதை விட்டுவிடுமாறு வேண்டுகிறேன். ஏனென்றால் அதில் உண்மையில்லை.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சில பகுதிகளிலும் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களிலும் விடுதலைப்புலிகளின் பிரசன்னமும் அவர்களின் அழுத்தமும் இருந்தபோது இந்த நாட்டின் சகல மாவட்டங்களிலும் அன்றும் இன்றும் அரசால் நியமிக்கப்பட்ட அவ்வப்பகுதி மாவட்ட செயலாளர்கள் மற்றும் பல்வேறு திணைக்களங்களின் தலைவர்களின் நிர்வாகத்திலேயே இருந்து வந்துள்ளது. நாடென்றும்இணைந்தே இருந்தது.

மேலும் இந்த அரசு இன்னுமொரு நாட்டுடன் யுத்தம் புரியவில்லை. ஒரு நோக்கத்தோடு மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய போராட்டத்தை அடக்கியது மட்டுமே நிகழ்ந்தது பெருமளவில் உயிர்ச்சேதமும், சொத்தழிவும் ஏற்பட்டன.

ஆனால், வடக்குக் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மக்களே குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் முற்றாகவும் ஏனைய மாவட்டங்களின் சில பகுதிகள் மிக மோசமாக பாதிப்புக்கு உள்ளாகின என்பதை ஒத்துக்கொள்வீர்கள் என நம்புகின்றேன். மூன்று அல்லது நான்கு லட்சம் மக்கள் சமைக்கவோ, அன்று இரவு நேரங்களில் தங்குவதற்கோ போதிய வசதியில்லாத சிறு பிரதேசத்திற்குள் நெருக்கி வைக்கப்பட்டமையால் ஏற்பட்ட துன்பங்கள் சொல்ல முடியாதவையாகும்.

இந்த நிலைமை இரண்டு அல்லது மூன்று மாதங்கள் நீடித்தன. தமது பல்வேறு தேவைகளை மேற்கொள்ள இவர்கள் எவ்வளவுதூரம் கஷ்டப்பட்டிருப்பார்கள் என்பதை கற்பனை பண்ணி பார்க்க முடியாது.

தற்போது சண்டை நின்றுவிட்டது. துப்பாக்கிகள் அமைதியாகிவிட்டன. நீங்கள் வெற்றிகரமாக ஒரு புரட்சியை அடக்கிவிட்டீர்கள். அப்புரட்சி மீண்டும் வெடிப்பதற்கான வாய்ப்பு அறவே இல்லை.

இலங்கை இராணுவத்தினர் யுத்தத்தில் வெற்றிபெறுவதற்கான உதவிகள் பல்வேறு நாடுகளிடமிருந்து கிடைத்தன. பல வகையிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைத்து நாடுகளுக்கும் வெற்றியில் பங்குண்டு. தங்களுடைய புத்திமதிகளை நீங்கள் கேட்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பு அவர்களுக்கு இருக்கக்கூடாதா?

அயல்நாடான இந்தியா உதவாமல் இருந்திருந்தால் அரச படைகள் அழிக்கப்பட்டு புரட்சிக்காரர்கள் வெற்றி பெற்றிருப்பர்.

ஒரு நாட்டுக்கு இன்னொரு நாடு உதவுவதுபோல் ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் யுத்தத்தை வெல்வதற்கான உதவிகளை வழங்கின. அத்துடன் அவை அப்பணியை நிறுத்த வேண்டும். வடக்கில் பல்வேறு இராணுவ முகாம்கள் அமைத்து இராணுவ தளபாடங்கள் வழங்குவதற்கு எதுவித உரிமையும் கிடையாது.

இச் செயல் பிற்காலத்தில் தங்களுடைய அரசையே சுழற்றியடிக்கின்ற வாய்ப்புகளுக்கு வழிகோலும். சீனா, ரஷ்யா போன்ற நாடுகளைப் போல் இலங்கைக்கு உதவிய ஏனைய நாடுகளுக்கு நமது நாட்டின் பிரச்சினைக்கு உரிய தீர்வைக் காண்பதற்கு உதவ தார்மீக கடமை உண்டு. ஆனால் அவர்களுக்கு இலங்கையிலுள்ள ஒரு குறிப்பிட்ட இனத்தை அரசு அடக்குமுறையின் கீழ் கொண்டுவர உதவக்கூடாது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் தற்போது நடைபெறுகின்ற பேச்சு சம்பந்தமாக சில கருத்துக்களைக் கூற விரும்புகின்றேன். 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் காணி, பொலிஸ் அதிகாரப்பகிர்வு புதிய விடயமல்ல. பல தடவைகள் மீண்டும் மீண்டும் பேசப்பட்ட விடயமாகும்.

பதினைந்து சுற்றுப்பேச்சு நடந்து முடிந்தபின் இந்த விடயத்திற்கொரு முடிவு காணாதது ஆச்சரியத்துக்குரிய விடயமாகும். இவ்விரு விடயத்திலும் வடக்குக் கிழக்கில் இராணுவத்தை வாபஸ் பெற வேண்டும் என்ற விடயத்திலும் விட்டுக் கொடுப்புடன் நடந்தால் நீங்கள் உங்கள் கிராமத்துக்கு போக முடியாது என்று நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையை நான் படித்தேன்.

தாங்கள் தயக்கம் காட்டுவதற்கு வேறு விசேட காரணங்கள் இருப்பின் நீங்கள் கொள்கையளவில் இவற்றை ஏற்றுக் கொண்டு தாங்கள் காட்டும் தயக்கத்துக்குரிய காரணங்களையும் கவனத்தில் எடுத்து இரு சாராரும் திருப்தியடையக் கூடிய ஒரு முடிவுக்கு வரலாம்.

ஒன்றை மட்டும் உறுதியாக தெரிவிக்கிறேன். இவ்விரு அதிகாரங்களும் வழங்கப்படாவிட்டால் இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத்தீர்வு காண முடியாது என்பதே - என்றுள்ளது. (த-சி)




அனைத்து மாவட்டங்களிலும் மேக மூட்டத்துடனான அசாதாரண காலநிலை நிலவும் சாத்தியமுள்ளது.

## காலங்கடந்த பிறப்பு பதிவு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.27

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வந்த பதிவு செய்யப்படாத பிறப்புகளைப்பதிவு செய்யும் நடவடிக்கை ஜனவரி முதல் பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 23 ஆம்திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு விஜயம் செய்த மேலதிக பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயர், மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலர்களைச் சந்தித்து இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளார். அத்துடன் ஆலோசனைகள் மற்றும் பயிற்சிகளையும் மேலதிக பதிவாளர் நாயகம் வழங்கியுள்ளார். (த-14)

## வன்னியில் வெள்ளம் பாதித்த மக்களுக்கு இன்று நட்டஈடு

கிளிநொச்சி,டிசெ.27

வன்னியில் அண்மையில் பெய்த அடைமழை காரணமாகக் கடுமையான பாதிப்பைச் சந்தித்த குடும்பங்களுக்கு இன்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் வைத்து நட்டஈடு வழங்கப்படவுள்ளது.

வெள்ளத்தினால் வீடுகள் மோசமாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகளை இன்று கிளிநொச்சிக்கு வருகை தரும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர வழங்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சிக்கு இன்று வருகை தரும் அமைச்சர் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பல்வேறு உதவிகளை வழங்கவுள்ளார் என அனர்த்த முகாமைத்துவ பிரிவின் கிளிநொச்சி மாவட்ட உதவிப் பணிப்பாளர் கே.சுகுணதாஸ் தெரிவித்தார்.

அத்துடன் பாதிக்கப்பட்ட விவசாயிகளில் தெரிவு செய்யப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் 7 பேருக்கும், கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் 8 பேருக்கும் அமைச்சர் தூவல் நீர்ப்பாசனத் தொகுதிகளை வழங்கவுள்ளார்.

மேசன், தச்சுத் தொழில் ஆகியவைகளுக்கான தொழில் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்ட 100 பேருக்கான தொழில் உபகரணங்களும் அமைச்சரினால் வழங்கப்படவுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் மேலும் கூறினார். (த-6)

## கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் முறையாக ஒருங்கிணைப்புக் கூட்டம் நாளைமறுதினம்

கிளிநொச்சி, டிசெ. 27

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முதல் முறையாக கிளிநொச்சி மாவட்டத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதுவரை காலமும் கிளிநொச்சி மாவட்டத்தில் அபிவிருத்தி தொடர்பான மீளாய்வுக் கூட்டமும், யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பான மீளாய்வுக் கூட்டமும் யாழ். மாவட்ட செயலகத்தில் ஒன்றாகவே இடம்பெற்றுவந்தன.

இந்த வருடத்துக்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கடந்த நவம்பர் மாதம் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைக் கிளிநொச்சி மாவட்டத்தில் நடத்துமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

இதற்கு அமைவாக நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கிளிநொச்சியில் இடம் பெறவுள்ளது. இதன்போது, இந்த வருடத் தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகள் தொடர்பாக ஆராயப்படவுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறன்றது. (த-6)

## நிகழ்வுகள் இன்று

**பரிசளிப்பு விழா**

சாவகச்சேரி பிரதேச சபையின் உள்ளூராட்சி வார இறுதி நாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறும்.

சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சி.துரைராசா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்துகொள்வார். (த-122)

***

யாழ்.மாவட்ட வீட்டுத் தோட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றோர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று முற்பகல் 11 மணிக்கு திருநெல்வேலி விவசாயத் திணைக்கள மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்துகொள்வார். (த-313-11)

**சான்றிதழ் வழங்கும் நிகழ்வு**

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் போட்டியில் விருது,பரிசு, சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு கொழும்பு -7, ஜோன் டி சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் அமைச்சர் டீ.பி.ஏக்கநாயக்க தலைமையில் நடைபெறவுள்ளது.(த-313)

**ஒளி விழா**

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை மெதடிஸ் சிற்றாலயத்தின் 16 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், ஒளிவிழாவும் இன்று பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை கட்டைவேலி சேகர முகாமைக்குரு அருட்திரு சி.கே. தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (த-236)

***

பளை,புலோப்பளை புனித இராயப்பர் தேவலாயம், புனித மரியன்னை தேவாலயம் ஆகியன இணைந்து நடத்தும் ஒளிவிழா நிகழ்வு இன்று மாலை 6 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-207)

***

யாழ். மாநகர சபையின் ஏற்பாட்டில் ஜே/93 கிராமசேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட மக்களுக்கான கிராம அபிவிருத்தித் திட்டமிடல் தொடர்பான கூட்டம் இன்று பிற்பகல் 3மணிக்கு அரியாலை சன சமூகநிலையத்தில் நடைபெறவுள்ளது. (த-313)



# "புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெறத் தவறினாலும் விடாமுயற்சியால் தேசியரீதியில் முதலிடம் பெற்றேன்"

"தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெறத் தவறிய போது அதைப் பெரிதுபடுத்தாமல் விடாமுயற்சியுடன் கல்வியில் கருத்தூன்றியதன் மூலமே தேசிய மட்டத்தில் முதலிடத்தை என்னால் எட்டிப் பிடிக்க முடிந்தது.''

இவ்வாறு உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்று சாதனைபடைத்த உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவன் கமலக்கண்ணன் கமலவாசன் உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் தன்னுடைய சாதனைக்கான காரணங்களை விவரித்தார். அவை வருமாறு:

படிப்பதற்கு உகந்த சூழ்நிலையை எனது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஏற்படுத்தித் தந்தனர். எனது கல்விக்கு இடையூறு நேரக் கூடாது என்பதற்காக எனது குடும்பத்தார் பெரும்பாடுபட்டனர். இதனால் எந்தவிதப் பிரச்சினைகளும் இன்றி தனியே கற்றலில் மாத்திரம் எனது கவனத்தைச் செலுத்த முடிந்தது.

எனது தந்தை ஒரு பொறியியலாளர். எனக்கு 5 சகோதரர்களும் உள்ளார்கள். எனது கல்விக்கு தேவையான அரவணைப்பையும் அன்பையும் எப்போதுமே எனது அம்மா அள்ளி வழங்கினார். எனது கற்றலுக்கு என்னென்ன புத்தகங்கள், உபகரணங்கள் தேவை என்பதை உணர்ந்து நான் கேட்காமலேயே அவற்றையெல்லாம் வாங்கித் தந்து என்னை ஊக்கப்படுத்தி எனக்கு இன்னொரு அன்னையைப் போல துணை செய்தவர் எனது அக்கா.

எனது கல்லூரியில் கணிதப் பிரிவுக்கு மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களே அனுமதிக்கப்பட்டிருந்தனர். இதனால் மாணவர்கள் எல்லோர் மீதும் ஆசிரியர்கள் தனிப்பட்ட கரிசனையும் அக்கறையும் எடுத்துக் கற்பிக்க முடிந்தது. அத்துடன் எமது பாடசாலை நூலகத்தில் கற்றலுக்குத் தேவையான சகல நூல்களும் உண்டு. ஆனாலும் ஆய்வுகூடத்தில் வசதி சற்றுகுறைவாகவே உள்ளது. எனினும் அந்தக் குறை தெரியாதபடி ஆசிரியர்கள் வேண்டியளவு கல்வியை பக்குவமாக எமக்கு ஊட்டினார்கள். அத்தோடு "BEACON" கல்வி நிறுவனமும் எனது கற்றலுக்கு உறுதுணை செய்தது.

நான் எனது இடைநிலைக் கல்வியை கம்பர்மலை வித்தியாலயத்தில் கற்று, உயர்தரத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியில் இணைந்தேன். எனக்கு ஆரம்பக் கல்வியை ஊட்டி, இந்த வெற்றிக்கு அத்திபாரமிட்ட கம்பர்மலை வித்தியாலயத்தையும் இந்தக் கணத்தில் என்னால் மறக்கமுடியாது.

இரவு 10 மணிவரை மட்டுமே கற்பேன். அதுபோலவே அதிகாலை 5 மணிக்கெல்லாம் எழுந்துவிடுவேன். பாடசாலையில் எல்லா நண்பர்களும் ஒன்றாகச் சேர்ந்து படிப்போம். நண்பர்கள் கணக்குகளை கொண்டு வந்து தருவார்கள். அதை வீட்டில் செய்து பார்ப்பேன். தொடர்ந்து பயிற்சிகளை மேற்கொள்வேன். சந்தேகங்களை ஆசிரியர்களிடம் கேட்டுத் தெளிந்தபின் மீண்டும் மீண்டும் பயிற்சிகளிலேயே ஈடுபட்டேன். முயற்சி திருவினையாக்கும். 3 ''ஏ'' எடுத்து சித்தி பெறவேண்டும் என்று எண்ணினேன். அதற்கேற்றாற் போல மாவட்ட ரீதியில் நடைபெற்ற பரீட்சைகளில் முன்னணிப் புள்ளிகளை என்னால் பெறமுடிந்தது. இது எனக்குள் இருந்த நம்பிக்கையை இன்னும் அதிகரித்தது. ஆயினும் இவ்வளவு சிறப்பான பெறுபேற்றை அடைந்து தேசிய ரீதியில் முதலிடம் பெற்றுச் சாதனை படைப்பேன் என்று நான் எதிர்பார்த்திருக்கவில்லை.

எனது பாடசாலை ஆசிரியர்கள்,தனியார்கல்வி நிறுவன ஆசிரியர்கள், நண்பர்கள், உறவினர்கள், பெற்றோர் எல்லோருக்கும் இந்த வெற்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

சதாரணதரத்தில் கற்கும் போது ஆங்கில தினப் போட்டி, தமிழ்த் தினப் போட்டி போன்றவற்றில் பங்குபற்றியிருக்கிறேன். எனினும் விளையாட்டுத் துறையில் ஆரம்பம் முதலே எனக்கு ஈடுபாடு கிடையாது. மனதுக்கு ஓய்வு தேவைப்படும் நேரங்களில் கணினியோடு எனது பொழுதைப் போக்குவேன். எதிர்காலத் தில் சிறந்த பொறியியலாளராக மாறி எனது நாட்டுக்கு என்னாலான பணிகளைச் செய்ய வேண்டும் என்பதே எனது ஆசை. கணிதத் துறையில் புகழ்பெற்ற பேராசான் அ.துரை ராஜா பயின்ற கல்லூரியில் இருந்து சாதனை படைத்த நான் அவரைப் போல இத்துறை யில் சிறந்து விளங்க முயற் சிப்பேன்.

கல்வியில் மட்டுமே கவனம் செலுத்தி, விடாமுயற்சியுடனும் ஊக்கத்துடனும் கல்வி கற்றால் எல்லா மாணவர்களும் என்னைப் போல் தேசிய ரீதியில் முதலிடம் பெறலாம்.- என்றார்.

செவ்வி
ஹரிஸ்

## சாதனை மாணவன் கமலவாசன்



# நேற்று வெளியான சில பாடசாலைகளின் முன்னணிப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், டிசெ.27

கடந்த ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் நீண்ட இழுபறிக்குப் பின்னர் நேற்று முன்தினம் இரவு இணையத்தளத்தில் வெளியாகியது. இதனடிப்படையில் நேற்று மாலைவரையில் கிடைக்கப்பெற்ற பெறுபேறுகளின் விபரம் வருமாறு:

**வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

உயிரியல்-புதிய பாடத்திட்டம்- தமிழ்மொழி மூலம் லாகினி நித்தியானந்தன் 3 'ஏ', தர்மிகா சூரியகுமாரன் 3 'ஏ', பிரியவதனி ஜெயபாலன் 3 'ஏ', சிறிசனா கெங்காதரம் 3 'ஏ', ஆரணி பாலசுந்தரம் 3 'ஏ',

ஆங்கில மொழிமூலம் - யூடின் டிலோசனா மரிய குணரட்ணம் 3 'ஏ',

பழைய பாடத்திட்டம் - சாயிபானு ராஜேந்திரம் 3 'ஏ', தாட்சாயினி கணேஸ்வரன் 3 'ஏ', ஜோதிஜி சிவகுருநாதன் 3 'ஏ',

வர்த்தகப்பிரிவு-புதிய பாடத்திட்டம் - நிருபிகா குமாரவேல் 3 'ஏ',

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசலையில் ஏனைய பிரிவுகளில் 3 'ஏ', பெறுபேறு பெறப்படவில்லை.

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**

கணிதம்- தமிழ்மொழி மூலம்- புவனேந்திரன் நிருஷன் 3 'ஏ', நமசிவாயம் பிரணவரூபன் 3 'ஏ', சண்முகக்குமரன் சஜீவன் 3 'ஏ',

ஆங்கில மொழி மூலம்- இளங்குமரன் கௌசிகன் 3 'ஏ',

உயிரியல் - தமிழ்மொழி மூலம்- செல்வராஜன் சிந்துஜன் 3 'ஏ', மேரியோசப் அருள் செல்வதீசன் 3 'ஏ', சண்முக வடிவேலு துசீபன் 3 'ஏ',

ஆங்கில மொழி மூலம் - சிவகுமரன் கோபிநாத் 3 'ஏ',சிறிஸ்கந்தராஜா யசோதரன் 3 'ஏ',

வர்த்தம் மற்றும் கலைப்பிரிவில் 3 'ஏ', பெறுபேறுகள் கிடைக்கவில்லை.

**யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி**

உயிரியல் - கவிதா தவசேகரசிங்கம் 3 'ஏ',

கணிதம் - நிலாசினி திருநாவுக்கரசு 3 'ஏ',

கலைப்பிரிவு - பவித்திரா பாலசிங்கம் 3 'ஏ', சோபியா பரலோகராஜ் 3 'ஏ', சம்ஷிகா சிறிதரன் 3 'ஏ', தர்க்கா கணேசலிங்கம் 3 'ஏ',

வர்த்தகப் பிரிவில் 3 'ஏ', பெறுபேறுகள் இல்லை.

**தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி**

கலைப்பிரிவு- செ.தர்மிலா 3 'ஏ', நி.ஷர்மி 3 'ஏ',

ஏனைய துறைகளில் 3 'ஏ', பெறுபேறுகள் இல்லை

**மானிப்பாய் இந்துக் கல்லூரி**

கலைப்பிரிவு- பாலசுப்பிரமணியம் மோகனராஜ் 3 'ஏ', ஏனைய துறைகளில் 3 'ஏ', பெறுபேறுகள் இல்லை.

**கலாகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்**

வர்த்தகப்பிரிவு - அ. சிவாஜினி 3 'ஏ',

**கொக்குவில் இந்துக் கல்லூரி**

கணிதப் பிரிவு- உமைப்பிரியை லட்சுமிநாதன் 2 'ஏ', 'பி', பாலகிருஸ்ணன் கஜானன் 2 'ஏ', 'பி', பிந்துஜா குலசிங்கம் 2 'ஏ', 'பி',

உயிரியல் பிரிவு- சிறிராசா சரவணன் 'ஏ','பி','சி', நிலேதிகா ஜீவானந்தம் 'ஏ','பி','சி',

வர்த்தகப்பிரிவு- இராசரட்ணம் கணாதரன் 'ஏ',2'பி', தர்மிகா செல்வரட்ணம்'ஏ',2'பி', டினோஜா தவராஜா'ஏ',2'பி', தபேந்திரம் அகில் 'ஏ',2'பி',

கலைப்பிரிவு- தச்சாயினி மகேஸ்வரன் 2'ஏ','பி', சரண்யா தேவி பாஸ்கரசர்மா 2'ஏ','பி', அமிர்தா உதயகுமாரன் 2'ஏ','பி',

**யாழ். பரியோவான் கல்லூரி**

உயிரியல் பிரிவு- தமிழ் மொழி மூலம்- ஜே.நிலோஜன் 3'ஏ', ஆ.சர்சயன் 3'ஏ',

இதேவேளை இந்த வருடம் முதன் முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட தகவல் தொழில்நுட்பப் பாடத்தில் யாழ்.பரியோவான் கல்லூரி மாணவன் ரவீந்திரகுமாரன் சங்கரன் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும் தேசிய மட்டத்தில் 37 ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.

(ந-15-14-319-313)

# ஆணைக்குழு அறிக்கையை வரவேற்கிறது ரஷ்யா

## நல்லிணக்கத்தை விரைவுபடுத்த, சமாதானத்தை பலப்படுத்த உதவும் எனவும் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.27

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தேசிய நல்லிணக்கத்தை விரைவுபடுத்துவதற்கும் சமாதானத்தைப் பலப்படுத்துவதற்கும் பெரிய பங்களிப்பை வழங்கும் என்று ரஷ்ய வெளிவிவகார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அது விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நல்லிணக்க ஆணைக் குழு, இலங்கையின் நீண்ட கால யுத்தத்தின் நோக்கங்களை நல்ல முறையில் ஆராய்ந்து சிறந்த அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கை இலங்கையில் நல்லிணக்கத்தை விரைவுபடுத்துவதற்கும் சமாதானத்தைப் பலப்படுத்துவதற்கும் பாரிய பங்களிப்பை வழங்கும் என்று நாம் நம்புகிறோம்.

தேசத்தின் இறைமை, இன மற்றும் மதக் குழுக்களின் உரிமைகள் தொடர்பான சர்வதேச அக்கறை மற்றும் மதிப்புப் போன்றவற்றை அடிப்படையாகக்கொண்டு யுத்தத்தின் பின்னரான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசு அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகின்றது. அதற்கு நாம் எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை கொண்டுள்ள உண்மையான அக்கறையையிட்டு நாம் மிகுந்த ஆறுதல் அடைகின்றோம்.

-இப்படி அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மன்னாரில் பலத்த காற்று

மன்னார், டிசெ.27


மன்னாரில் தற்போது பலத்த காற்று வீசிக் கொண்டிருக்கின்றது.

இங்கு தொடர்ந்து பெய்து வந்த கடும் மழையைத் தொடர்ந்து தற்போது கடலில் பலத்த காற்று வீசுவதால் பேரலைகள் தோன்றியுள்ளன. இதனால் மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவர்கள் தமது படகுகளைப் பாதுகாக்கும் பொருட்டு, தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இடத்திலிருந்து வேறு இடத்துக்கு மாற்றுவதையும் அவதானிக்க முடிகின்றது.

(க-601)

## நெடுங்கேணியில் பன்னக் கண்காட்சியும் பனை, தென்னை வள சங்கங்களின் மாநாடும்





நெடுங்கேணி,டிசெ.27

நெடுங்கேணிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மதியாமடுக் கிராமத்தில் பன்னக் கைப்பணிப் பயிற்சி நிறைவு விழாவும் கண்காட்சியும் இடம்பெற்றுள்ளன.

கடந்த 22 ஆம் திகதி காலை 9 மணியளவில் நெடுங்கேணி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பயிற்சி நிலையத்தில் இது இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வுக்குத் தேசிய அருங்கலைகள் பேரவையின் அலுவலரான எஸ். பொன்கரன் தலைமை தாங்கினார். வவுனியா மாவட்ட பனை அபிவிருத்திச் சபையின் இணைப்பாளர் வி.தர்மகுலசிங்கம், நெடுங்கேணி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் வெளிக்கள உத்தியோகத்தர் திருமதி ஆர். பிரேமலோஜினி மற்றும் போதனாசிரியர்கள் இதில் பங்குபற்றினர்.

பயிற்சி பெற்ற மாணவர்களின் கைப்பணிப் பொருள்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டன.

இந்தக் கண்காட்சியைப் பொதுமக்களும், உத்தியோகத்தர்களும் பார்வையிட்டதுடன் சிறந்தவற்றைப் பெற்றுச் சென்றுள்ளனர்.

இதேவேளை வன்னியிலுள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர், பொது முகாமையாளர்களுக்கான மாதாந்த மாநாடு கடந்த 22 ஆம் திகதி நெடுங்கேணி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. சங்கத்தின் பேரிணையத் தலைவர் ஞா.செல்வரத்தினம் இதற்குத் தலைமை தாங்கினார்.

முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த சங்கங்களின் தலைவர் மற்றும் பொது முகாமையாளர்களும், முல்லைத்தீவு இணையத்தின் பொது முகாமையாளரும் இதில் கலந்து கொண்டனர்.

இங்கு அடுத்த ஆண்டுக்கான பல்வேறு செயற்திட்டங்கள் தொடர்பாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(க-435)

## துணுக்காய் மல்லாவிப் பிரதேசத்தில் நிறைகுறைந்த பாண் விற்பனை

அக்கராயன், டிசெ.27

துணுக்காய் மல்லாவிப் பிரதேசத்தில் நிறைகுறைந்த பாண் விற்பனை செய்யப்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆகக் குறைந்தது 450 கிராமாக இருக்க வேண்டிய பாண் 300 கிராம் கூட இருப்பதில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மல்லாவியில் ஐந்து வெதுப்பகங்கள் உள்ளன. இவற்றிலிருந்தே பாண் விநியோகிக்கப்படுகின்றது. இவற்றுள் தேறாங்கண்டலில் அமைந்துள்ள வெதுப்பகத்தால் விநியோகிக்கப்படும் பாணின் நிறையே மிகவும் குறைந்து காணப்படுவதாக இங்குள்ள மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தேறாங்கண்டலில் மீள் குடியமர்ந்த 231 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இந்த நிலையில் இங்குள்ள வெதுப்பகத்தால் நிறைகுறைந்த பாண் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை தொடர்பாக மக்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

(க-410)

## வாழைப்பழத்துக்கு நிலவிய தட்டுப்பாடு நீங்கியது

முல்லைத்தீவு,டிசெ.27

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வாழைப்பழத்துக்கு நிலவிய தட்டுப்பாடு நீங்கியுள்ளதோடு அதன் விலையிலும் வீழ்ச்சி காணப்படுகின்றது.

யுத்தம் மற்றும் இடப்பெயர்வு காரணமாக ஒட்டுசுட்டானில் செய்கை பண்ணப்பட்டிருந்த வாழைப் பயிர்கள் முற்றாக அழிவடைந்தன. இதனால் மக்கள் மீள்குடியமர்ந்தபோது வாழை இலைக்கே பெரும் தட்டுப்பாடு நிலவியது.

இந்த நிலையில் சேவாலங்கா நிறுவனம் ஒவ்வொரு குடும்பத்துக்கும் வாழைக் கன்றுகளை வழங்கி உதவியது. இதனால் வாழைப் பயிர்கள் பல்கிப் பெருகிக் காணப்படுகின்றன. ஆரம்பத்தில் ஒரு கிலோ வாழைப் பழம் 70 ரூபாவாக விற்கப்பட்டது. சாதாரண அளவுள்ள வாழைக் குலையொன்றை ஆயிரம் ரூபாவுக்கு விற்கக் கூடியதாக இருந்தது. இதனால் நல்ல வருமானமும் கிடைத்தது.

தற்போது இதன் விலை ஒரு கிலோ 40 ரூபா தொடக்கம் 50 ரூபாவுக்கு இடைப்பட்ட விலையில் உள்ளது. மேலும் விற்பனைக்கென அதிகளவில் வாழைக்குலைகள் வருவதால் வாழைப்பழத்துக்கான தட்டுப்பாடு நீங்கியுள்ளதோடு விலையிலும் வீழ்ச்சியேற்பட்டுள்ளது.

(க-500)

## உர விநியோகம் தாமதம் விவசாயிகள் கவலையில்

அக்கராயன்,டிசெ.27

கிளிநொச்சி மாவட்டம் வன்னேரிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு இதுவரை இரண்டாம் கட்ட உர விநியோகம் வழங்கப்படாததால் அவர்கள் நெற்பயிர்ச் செய்கையில் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வன்னேரிக்குளத்தில் இந்தக் காலபோகத்தில் 500 ஏக்கருக்கும் அதிகமான நிலப் பரப்பில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

முதலாவது கட்ட உர விநியோகம் நடைபெற்று முடிவடைந்துள்ளது.

ஆனால் இரண்டாம் கட்டத்தில் இதுவரை வழங்கப்படவில்லை. இதனால் பயிர்களுக்கு உரிய வேளையில் விவசாயிகளால் உரத்தை இட முடியவில்லை. உரம் இடாததன் காரணமாகப் பயிர்ச் செய்கையில் பாதிப்பு ஏற்படக் கூடிய வாய்ப்புக்களும் உண்டு.

மேலும் அக்கராயன் கமநல சேவை நிலையத்திலிருந்து ஏனைய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு இரண்டாம் கட்ட உர விநியோகம் நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பல்வேறு வகையிலும் கடன்களைப் பெற்று ஆர்வத்துடன் விவசாய முயற்சிகளில் ஈடுபட்ட விவசாயிகள் மழை வெள்ளத்தால் தமது பயிர்கள் அழிவுகளுக்கு உள்ளான நிலையில் எஞ்சிய பயிர்களுக்குரிய உர விநியோகமும் தமக்கு மட்டும் வழங்கப்படவில்லையென வன்னேரிக்குளம் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

(க-410)

### வசந்தம் வீசாதா?...



*இதுவுமொரு வீதி!: வவுனியா வடக்கு மாமடு - நெடுங்கேணி வீதியில் வெள்ளம் தேங்கியுள்ளதால் பிரதேச மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.* (435)

## நெடுங்கேணி மக்கள் குறை தீர்க்க மையத்தில் பெரும் நீர்த்தாங்கி அமைப்பு

நெடுங்கேணி,டிசெ.27

வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பிரதேசத்தின் மையப் பகுதியில் மிகப்பெரிய நீர்த்தாங்கியொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

சுமார் 38 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் இந்த நீர்த்தாங்கியின் கட்டுமானப் பணிகள் பிரதேச செயலர் க.பரந்தாமனின் கண்காணிப்பில் நடைபெற்று வருகின்றன.

[illegible]த நீர்த்தாங்கி 2 லட்சத்து 25 [illegible]ம் லீற்றர் நீர்க் கொள்ளளவைக் கொண்டதாக அமைக்கப்பட்டு வருகின்றது.

இதன் மூலமாக நெடுங்கேணிப் பிரதேசத்திலுள்ள அனைத்துக் கிராமங்களும் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ள முடியுமென தேசிய நீர் வடிகாலமைப்புச் சபையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த நீர்த்தாங்கி செயற்படத் தொடங்கியதும் இங்குள்ள மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினை ஓரளவு தீர்ந்துவிடுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



(க-435)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு இராணுவத்தினர் உதவி

நெடுங்கேணி,டிசெ.27

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒரு தொகுதி மக்களுக்கு இராணுவத்தினரால் உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

அண்மையில் பெய்த மழையால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள் மற்றும் இதர பொருள்கள் இராணுவத்தினரால் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி பன்னங்கண்டி, சிவபுரம், புளியம்பொக்கணை, தர்மபுரம் போன்ற பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த குடும்பங்களுக்கே உணவுப் பொருள்களை இராணுவத்தினர் வழங்கினர்.

அதேவேளை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வீடுகளை விட்டு வெளியேற முடியாமல் துண்டிக்கப்பட்டிருந்த பகுதிகளில் இருந்த மக்களை இராணுவத்தினர் மீட்டெடுத்து அவர்களைப் பாதுகாப்பாக நலன்புரி நிலையங்களில் தங்கவைத்தனர்.

அத்துடன் அரச மற்றும் அரச சார்பற்ற அதிகாரிகளின் சேவையோடு தமது சேவையையும் இணைத்துப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளையும் புரிந்துள்ளனர்.

(க-6)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஐ.நாவும் இந்தியாவும் ஒரே தோணியிலா....?

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் முடிந்துவிட்டது. மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து வழங்குவதற்கான தீர்க்கமான, உறுதியான, முடிவான நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தி உள்ளது இந்திய அரசாங்கம். அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் விஷ்ணு பிரகாஷ் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்ட பத்து நாள்களின் பின்னர் அயலில் உள்ள இந்திய அரசு தனது கருத்தை இலேசாக எட்ட நின்று தொட்டுக் காட்டியிருக்கிறது.

இத்தனைக்கும் தூரத்தில் உள்ள அமெரிக்கா, ஆஸ்திரேலியா மட்டுமன்றி ஏனைய நாடுகள் சிலவும் தமது கருத்துகளை வெளிப்படுத்திய பின்னரே, அவற்றின் நிலைப்பாடுகளைக் கூட்டிக் கழித்துப் பார்த்தே, இந்தியா தனது கருத்தை வெளியிட முனைந்திருக்கிறது.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தமிழகத்துக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருக்கும் வேளையில் வெளிவிவகார அமைச்சின் கருத்து வெளிவந்திருப்பதும், எல்லாமே கணக்கிட்டு ஆற்றப்பட்ட ஒன்று என எண்ண வைக்கிறது.

காலத்துக்குக் காலம், மாறி மாறிப் பதவிக்கு வரும் இந்திய மத்திய அரசுகள் இலங்கைத் தமிழர்களின் உரிமைப் பிரச்சினையில் பட்டும் படாமலும் செயற்படும்போக்கு அந்நாட்டின் உயர் ராஜதந்திரமாகும். ஈழத் தமிழர்களின் உரிமைப் பிரச்சினை பல்வேறு வகைகளிலும் வடிவங்களிலும் வீச்சாக உருவெடுக்கும் வேளைகளில் அவ்வப்போது பதவியில் உள்ள தமிழக அரசுகளை ஆசுவாசப்படுத்த வேண்டிய கட்டாயம் புதுடில்லி அரசுகளுக்குத் தேவையாகிறது.

அந்தவகையிலும், இலங்கைத் தமிழர்களின் விவகாரத்தில் ஜெயலலிதா அரசையும் தமிழக மக்களையும் சாந்தப்படுத்தும் பணியையும் மத்திய அரசு, இயற்றுகிறது என்றும் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளரின் கருத்து வெளிப்பாட்டைக் கொள்ளலாம்.

இலங்கையில் நடைபெற்ற போரின் இறுதிக்கட்டத்தில் பெரும் எண்ணிக்கையான தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கு இந்தியாவும் உடந்தையும், நெருங்கிய ஒத்துழைப்பும், உதவிகளும் வழங்கியது, பங்களிப்புச் செய்தது என்பது இப்போது உலகப் பரகசியமாகி விட்டது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், இலங்கையில், இந்தியாவில் மற்றும் சர்வதேசங்களில் வாழும் தமிழ் மக்களின் மனங்களில் இந்திய மத்திய ஆட்சியாளர்கள் வெறுப்புணர்வுடனேயே குடிபுகுந்துள்ளனர்.

அதனால் இலங்கைத் தமிழர்களின் விடயத்தில், தனக்கு அக்கறை உண்டு என்று காண்பிக்க வேண்டிய தவிர்க்க முடியாத தேவை அதற்கு உண்டு. அதன் பாற்பட்டதாகவே வெளிவிவகாரத்துறைப் பேச்சாளர் விஷ்ணு பிரகாஷின் கருத்து வெளிப்பட்டிருக்கிறது என்று கொள்வதிலும் தப்பில்லை.

இந்தப் பத்தியில் ஏற்கனவே பல தடவைகள் சுட்டிக் காட்டப்பட்டது போன்று, தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தின் பொலிஸ்காரனாகத் திகழ வேண்டும் என்ற குறியுடன் செயற்படும் இந்தியா, இலங்கை அரசைக் கண்டிக்கவோ, அதனுடனான நெருங்கிய உறவை முறித்துக் கொள்ளவோ விரும்பமாட்டாது.

சில மாதங்களுக்கு முன்னர் இலங்கைக்கு வருகை தந்திருந்த இந்திய வெளியுறவுச் செயலாளர் ரஞ்சன் மாத்தாய், உங்கள் பிரச்சினையை நீங்களே தீர்த்துக் கொள்ளுங்கள் என்று விட்டெறியும் தொனியில் கூறிச் சென்றமைக்கும்-

மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து வழங்குவதற்கான உறுதியான முடிவை எடுக்குமாறு கொழும்பு அரசிடம் வெறும் வாய்மொழி வார்த்தைகளால் விஷ்ணு பிரகாஷ் கூறுவதற்கும் - இடையில் அகன்ற வெளியைக் காணமுடிகின்றது.

அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான பொன்னான வாய்ப்பு ஒன்றைத் தற்போதைய சூழல் வழங்கி உள்ளது என்பதனை ஆணைக்குழு அறிக்கை தெளிவாக்கி உள்ளது. அரசியல் தீர்வு ஒன்றின் மூலம் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி அதனை அடைய முடியும் என்பதனையும் ஆணைக்குழுவின் அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது என்றும் விஷ்ணு பிரகாஷ் சிலாகித்துக் கூறியுள்ளார்.

இலங்கைப் போரின்போது, அதன் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மக்கள் கொல்லப்பட்டமை மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் குறித்து, ஐ.நா.சபை அடக்கி வாசிப்பது போலவே, இந்தியாவும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை விடயத்தில் கடைப்பிடிப்பதாகத் தென்படுகிறது.

இராணுவம் குற்றமற்றது என்ற நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை இந்தியா ஏற்றுக்கொள்ளும் தொனி விஷ்ணு பிரகாஷ் தெரிவித்த கருத்துகளில் புலப்படுகிறது. இனிமேல் உத்தியோகபூர்வமாக, அறிக்கை வடிவில், என்னென்ன கற்பிக்கப்படும் என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஆணைக்குழுவின் அறிக்கையை ஆராய்ந்து வருகின்றோம் என்று ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் மெத்தனப் போக்கை வெளிப்படுத்தி உள்ள அதேவேளை, இந்தியாவின் நிலைப்பாடும் ஒரு வகையில் அதனை ஒத்திருப்பதாகவே உள்ளது.

## ஈழத்துச் சிதம்பரத்தின் திருவாதிரை பெருவிழா வெள்ளியன்று ஆரம்பம்



காரைநகர், டிசெ.27

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாக உள்ள திருவாதிரைப் பெருவிழாவுக்கான விரிவான ஏற்பாடுகளை ஆலய ஆதீனகர்த்தாக்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த மார்கழித் திருவாதிரை உற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் சிறப்பாக இடம்பெற உள்ளது. இந்த உற்சவ காலங்களில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ஆலயத்துக்கு வருகைதர உள்ள னர். அவர்களின் நலன் கருதி ஆலய சுற்றாடலில் பாதுகாப்பு, சுகாதாரம், குடிதண்ணீர் வசதி மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

30ஆம் திகதி ஆரம்பமாகும் இந்த உற்சவத்தைத் தொடர்ந்து எதிர்வரும் 2ஆம் திகதி கைலாய வாகன உற்சவமும் 7ஆம் திகதி சனிக்கிழமை பஞ்சரத பவனியும் மறுநாள் 8ஆம் திகதி 2 மணி தொடக்கம் நடேசர் ஆருத்திரா அபிஷேகமும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 3மணிக்கு திரு ஊடல் உற்சவமும் தொடர்ந்து தீர்த்த உற்சவமும் இடம்பெற உள்ளது.

உற்சவ காலங்களில் தினமும் மாணிக்கவாசகர் மடாலயம். ஈழத்துச் சிதம்பர அறப்பணி நிலையம் என்பவற்றில் அன்னதானமும் இறுதி ஐந்து நாள்களும் மணிவாசகர் சபை நடத்தும் திருவாசகப் பெருவிழாவும் இடம்பெற உள்ளன. உற்சவ காலங்களில் தினமும் யாழ். மத்திய பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து ஆலயம் வரை நேரடி பஸ் சேவையும் இடம்பெற உள்ளது. ஆலயத்தில் இடம்பெற்ற மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து முதற் தடவையாக திருவாதிரைப் பெருவிழா இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-250)

## வடக்கு மாகாண அமைச்சின் உயர் பதவிகளில் பெண்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 27

வடக்கு மாகாண அமைச்சின் உயர் பதவிகள் மற்றும் பிரதான அலுவலகங்களின் செயலாளர் பதவிகளில் பெண்களை அமர்த்துவதில் வடக்கு மாகாண நிர்வாகம் ஆர்வம் கொண்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் பிரதான பதவிகளைத் தற்போது பெண்களே வகித்துவருகின்றனர். யாழ். மாவட்ட அரச அதிபர், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் ஆகிய பதவிகளில் இப்போது பெண்களே உள்ளனர்.

இதற்கு மேலதிகமாகத் தற்போது வடக்கு மாகாண உள்ளூராட்சி, கூட்டுறவு, சமூக நலத்துறை, கிராமிய அபிவிருத்தி, சிறுவர் நன்னடத்தை அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாணப் பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் ஆகிய பதவிகளுக்கும் பெண்களே நியமிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

60 வயதுக்கு மேல் விசேட சேவை நீடிப்பில் பதவி வகித்த பல உயர் அதிகாரிகளின் சேவை நீடிப்புக்கள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுப் புதியவர்கள் அந்த இடங்களுக்குத் தெரிவு செய்யப்படும் போது பெண்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு மாகாணத்தில் மகாகாண சபை நிர்வாகம் மக்கள் பிரதிநிதிகளிடம் இல்லாமல் ஜனாதிபதியின் பிரதிநிதி என்ற வகையில் அது ஆளுநரின் நேரடிக் கட்டுப்பாட்டிலேயே நடைபெற்றுவருகின்றது.

இந்த வகையில் நிர்வாக முன்னெடுப்புக்களில் பெண்கள் சாதகமாக நடந்துகொள்வார்கள் என்பதால் பெண்களை அந்தப் பதவிகளில் நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (த-11)

## யாழ். பாதுகாப்புத் தலைமையகத்தின் நத்தார் இசை விழா நாளை மாலை

யாழ்ப்பாணம், டிசெ. 27

யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையகம் நடத்தும் நத்தார் விழா நாளை புதன் கிழமை மாலை 5.30 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது.

பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவின் தலைமையில் நடைபெறும் இந்த நத்தார் இசை நிகழ்ச்சி மாலை 5.30 மணிமுதல் இரவு 9மணிவரை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விழாவில் யாழ். மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை மற்றும் மதத் தலைவர்கள், யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர். (த)

## வன்னிப் பாடசாலைகளில் சுய விருப்புடன் பணியாற்ற ஆசிரியர்கள் அங்கு செல்வர்

யாழ்ப்பாணம், டிசெ. 27

வன்னிக்கான பதிலீட்டு அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்கள் பலர் தமது சுய விருப்பின் பேரில் அடுத்த வருட ஆரம்பம் முதல் அங்கு கடமைக்குச் செல்லவுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள நான்கு கல்வி வலயங்களையும் சேர்ந்த சுமார் 40இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இவ்வாறு வன்னிப் பகுதியிலுள்ள பாடசாலைகளில் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த 84 ஆசிரியர்களும், வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 100 ஆசிரியர்களும், வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த 118 ஆசிரியர்களும், யாழ்ப்பாண கல்வி வலயத்தைச் சேர்ந்த 197 ஆசிரியர்களும் வன்னிக்கான பதிலீட்டு ஆசிரியர் இடமாற்றத்துக்காகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் ஆசிரியர் இடமாற்றங்கள் அனைத்தும் அடுத்த வருடம் மார்ச் மாதத்துக்கு நடைமுறைக்கு வரும் என மாகாணக் கல்விப்பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் வன்னிப் பகுதி மற்றும் தீவகத்திலுள்ள கல்வி வலயங்களுக்குப் பதிலீட்டு அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களே இவ்வாறு சுயவிருப்பின் பேரில் மார்ச் மாதத்துக்கு முன்னர் ஜனவரி ஆரம்பத்திலே இடமாற்றத்துக்கு அனுமதி பெற்றுள்ளனர் எனத் தெரியவருகிறது. (த-14)

### நாளை

மார்கழி 12 புதன்கிழமை 28.12.2011
திதி: சதுர்த்தி மு.இ. 9.49 வரை
நட்சத்திரம்: திருவோணம் மு.ப. 8.41 வரை
சதுர்த்தி விரதம்
சுபநேரம்: 4.58-6.28 வரை, ராகு காலம்: 12.28 -1.58 வரை

# யாழ். குடாநாட்டில் தந்திச் சேவைகள் அண்மைக் காலமாகத் தாமதமாகின்றன

## ஆளணி வளங்கள் குறைவாக இருப்பதே காரணம் என்கின்றனர் அதிகாரிகள்

யாழ்ப்பாணம், டிசெ.26

யாழ். குடாநாட்டில் தந்திச் சேவைகள் தபால் மூலமே இடம்பெறுவதால் தந்திச் சேவைகள் தாமதமாகச் சென்றடைவதாகக் கூறப்படுகிறது.

தந்திச் சேவைக்குரிய ஆளணி வளங்கள் தபாலகங்களில் குறைவாக இருப்பதாலேயே இதில் தாமதம் ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக யாழ். பிரதம தபாலகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது:

தொலைபேசிச் சேவைகள் சீரற்று இருந்த காலத்தில் இடைநிறுத்தப்பட்டிருந்த தந்திச் சேவை மீளவும் ஆரம்பிக்கப்பட்டுசெயற்படுத்தப்படுகிறது.

அவசரமான தந்திச் சேவைகள் இடம்பெற்று வருகின்றன. அவசரமற்ற தந்திகள் தபால் சேவையூடாகவே இடம்பெற்று வருகின்றன.

இதற்கு முக்கிய காரணம் தந்திச் சேவைக்குரிய ஆளணிப் பற்றாக்குறையாகும்.

அது தவிர தபால் மூலம் அனுப்ப வேண்டிய தகவல்களைத் தந்தி மூலம் அனுப்புவதற்கு சில சேவை நிறுவனங்கள் முயலுகின்றன.

காரணம்,தபால் அனுப்புவதற்கான பணச் செலவை விட தந்திக்கானசெலவு குறைவானதாகும்.

இதன் பொருட்டே தபால் சேவையை விடுத்து தந்திச் சேவையை நாடுகின்றனர்.- என்றார். (ம-14- 236)

# குடாநாட்டுச் சந்தைகளில் மரக்கறிகள் விலை உயர்வு

யாழ். குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலைகள் திடீரென அதிகரித்துள்ளதால் நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரத்தில் கொட்டித் தீர்த்த மழையால் மரக்கறி பயிர்களும் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாகவே விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைவிட தெற்கே பெய்த கடும் மழையால் தம்புள்ள மரக்கறி வகைகளின் விலைகளும் அதிகரித்துக் காணப்படுவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

இதனை அடுத்து தம்புள்ளயில் இருந்து மரக்கறி வகைகள் மிக குறைந்ததாகவே யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டின் பிரதான சந்தைகளான திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார்மடம், சாவகச்சேரி, கொடிகாமம் போன்ற மரக்கறி சந்தைகளில் மரக்கறி வகைகளுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுக் காணப்படுவதோடு அவற்றின் விலையும் மும்மடங்காக அதிகரித்துக் காணப்படுகின்றன.

குறிப்பாக திருநெல்வேலி மரக்கறி சந்தையில் நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்ட மரக்கறி வகைகளின் விலை விவரம் வருமாறு:

கத்தரிக்காய் கிலோ - 70 ரூபா, தக்காளிப்பழம் கிலோ- 250 ரூபா, லீக்ஸ் கிலோ- 140 ரூபா, பயிற்றங்காய் கிலோ- 240 ரூபா, வெண்டிக்காய் கிலோ- 240 ரூபா, தக்காளிக்காய் கிலோ- 200 ரூபா, கரட் கிலோ- 240 ரூபா, கோவா கிலோ- 80 ரூபா, உருளைக்கிழங்கு - 70 ரூபா, மரவள்ளிக் கிழங்கு- 30 ரூபா, பூசணிக்காய் கிலோ- 60 ரூபா, வெங்காயம் கிலோ- 80 ரூபா, பச்சை மிளகாய்- 280 ரூபா, கீரை ஒரு பிடி- 40 ரூபா, தேசிக்காய் ஒன்று- 10 ரூபா. (ம-26)





உடுப்பிட்டி சைவப் பிரகாச வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கே.நந்தகுமார் மற்றும் விருந்தினர் களாக இளைப்பாறிய மக்கள் வங்கிக் கிளையின் முகாமையாளர் செ.சோமசுந்தரம், அதிபர் மா.மெய்யழகன், வல்லை ராணுவ முகாம் பொறுப்பதிகாரி ஆகியோர் வரவேற்கப்படுகின்றனர். இதில் இளைப்பாறிய மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் செ.சோமசுந்தரம் மாணவி ஒருவருக்கு பரிசில்களை வழங்குகி றார். (236)

# நீண்ட காலமாகத் திருத்தப்படாது கைவிடப்பட்ட வீதியால் சிரமம்

வலி வடக்கு, டிசெ. 27.

அராலி தெற்கு கிராவோடை கிராமத்துக்கான வீதி நீண்ட காலமாக திருத்தப்படாது கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

கடந்த காலத்தில் யுத்தத்தைக் காரணம் காட்டி திருத்தம் செய்வதற்கு வலி. மேற்கு சங்கானைப் பிரதேச சபை அக்கறை காட்டாத நிலைமை காணப்பட்டது.

கடந்த காலத்தில் இந்த வீதியைத் திருத்துவது சம்பந்தமாக அந்தப் பகுதியில் உள்ள மக்கள் தமது கோரிக்கைகளை பல தடவைகள் பிரதேச சபையின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவித்த போதிலும் அதனைத் திருத்துவதற்கான நடவடிக்கை எதனையும் பிரதேச சபை மேற்கொள்ளவில்லை.

தற்போது மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சபை செயற்படத் தொடங்கிய போதிலும் இந்த பிரதேச மக்கள் தமது வீதியைத் திருத்தித் தரும்படி கோரிக்கைகளை முன்வைத்துள்ள நிலையில் அது தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குன்றும் குழியுமாகக் காணப்படும் இந்த வீதியில் மழை காலத்தில் தேங்கும் நீரால் மிகவும் மோசமான முறையில் பாதசாரிகள் பாதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

# பாலத்தின் மேலாக பாய்கிறது வெள்ளம்

வரணி குடத்தனை பிரதான வீதியின் ஊடாக காட்டாற்று வெள்ளம் பாய்வதால் இந்தப் பாதையூடாக வாகனப் போக்குவரத்து தற்போது தடைப்பட்டுள்ளது.

அதிக காட்டாற்று வெள்ளம் பாய்வதால் நீர் மட்டம் உயர்ந்து காணப்படுகின்றது.

தற்சமயம் இந்தப் பாதையூடாக செல்லும் வாகனங்கள் முள்ளிவெளியூடான பருத்தித்துறை - கொடி காமம் வீதியூடாகச் சென்று வல்லிபுரம் சந்தியை அடைந்து பருத்தித்துறை - மருதங்கேணி ஊடாகப் பயணிக்கின்றன. (த-122)

# யாழ். மாவட்ட ஆஸ்பத்திரிகளுக்கு புதிய மருந்துக் கலவையாளர்கள்

யாழ்ப்பாணம், டிசெ.27

யாழ்.மாவட்டத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளில் மருந்துக் கலவையாளர் களைப் புதிதாக நியமிப்பதற்கு வடமாகாண சுகாதார அமைச்சு நடவடிக்கையை மேற்கொண் டுள்ளது.

குடாநாட்டில் அநேகமான வைத்தியசாலைகளில் மருந்துக் கலவையாளர்களுக்கு பற்றாக்குறையும் தட்டுப் பாடும் நிலவி வருகின்றது.

இந்தத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு புதிதாக 80 வரையிலான மருந்துக் கலவை யாளர்களை நியமிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே வைத்தியசாலையில் நிலவி வந்த தாதி மற்றும் மருத்துவ மாதுக்கள் பற்றாக்குறை நீக்கப்பட்டு தாதி மற்றும் மருத்துவ மாதுக்கள் புதிதாக நியமிக்கப்பட்டு அவர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங் கப்பட்டுள்ளன.

இவர்கள் எல்லா வைத்தியசாலைகளுக்கும் தேவைக்கு ஏற்ப நியமிக்கப்பட்டுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-26)

# கிணற்றில் தவறி விழுந்த சிறுவன்

வலி. வடக்கு, டிசெ. 27

இறைத்த கிணற்றை எட்டிப் பார்த்த சிறுவன் கிணற்றில் தவறிவிழுந்தான்.

எனினும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் ஏழாலையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றுள்ளது.

கிணற்றை இறைத்துவிட்டு கிணற்றில் இறங்கித் துப்பரவு செய்து கொண்டு நின்றவர் சிறிய பாத்திரத்தைக் கேட்டுள்ளார்.

கிணற்றில் இருந்து வெளி வந்த சத்தத்தைக் கேட்டு கிணற்றை எட்டிப் பார்த்த சிறுவன் தவறிக் கிணற்றினுள் விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

தவறிக் கிணற்றுக்குள் விழுந்த சிறுவன் கிணற்றில் நின்று வேலை செய்து கொண்டு இருந்தவரின் மேல் விழுந்தமையால் காயங்கள் எதுவும் இன்றித் தப்பிக் கொண்டான் என்று தெரிவிக்கப்பட்டது.

சி.மலரவன் (வயது 04) என்ற சிறுவனே இவ்வாறு தவறி வீழ்ந்தவராவார். (ம-86)

# கடலரிப்பைத் தடுக்க சவுக்கு மரங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.27

மண்டைதீவில் கடலரிப்பைத் தடுக்கும் பொருட்டு கடற் கரையோரங்களில் சவுக்கு மரங்கள் நடப்பட்டு வருகின்றன.

அங்குள்ள உவர் நீர்த் தடுப்பு அணைகள் உள்ள கடல் நீர் ஏரியை ஒட்டிய பகுதிகளில் சவுக்கு மரங்கள் நடும் வேலைகளை நீர்ப்பாசனத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இதன் மூலம் எதிர் காலத்தில் கடல் நீர் குடியிருப்புகளுக்குள் புகும் நிலை தடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடல் நீர் குடியிருப்புப் பகுதிகளுக்குள் உட்புகுவதால் நன்னீர் உவராக்கப்படுவதுடன் வயல் நிலங்களும் பாதிக்கப்படும் என்று மக்களால் சுட்டிக்காட் டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# டெங்கு ஒழிப்புச் சோதனையில் சிக்கிக் கொண்ட வர்த்தகர்கள்

அளவெட்டி, டிசெ.27

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தெல்லிப்பழை, மல்லாகம் பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட டெங்கு ஒழிப்பு தொடர்பான பரிசோதனையின் போது 5 வர்த்தகர்கள் தெல்லிப்பளை பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டனர்.

இவ்வாறு டெங்கு நுளம்பு பெருக்கத்துக்கு ஏதுவான நிலையில் 5 வர்த்தக நிலையங்கள் இனம் காணப்பட்டு இதன் உரிமையாளர்கள் மீது மல்லாகம் நீதிமன்றில்தெல்லிப்பழைபொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.


மல்லாகம் தெல்லிப்பழைப் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதர்களின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை பொலிஸாருக்கு டெங்கு ஒழிப்பு நடை அணிக் குழுவினரும் இணைந்து மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போதே இந்த வர்த் தகர்கள் அகப்பட்டுக் கொண்ட னர்.

இந்த வர்த்தக நிலையங்களின் டெங்கு நோய் பரப்பக் கூடிய ஏது நிலை காணப்பட்டதனால் இந்த வர்த்தகர் மீது சட்ட ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று பிரதேச சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர். (ம-36)

# குடாநாட்டில் ஆழிப் பேரலை நினைவு நாளில் கண்ணீர் மல்கி கதறியபடி உறவுகள் பங்கேற்பு

வடமராட்சி, டிசெ.27

சுனாமிப் பேரலை அனர்த்தத்தில் யாழ்.மாவட்டத்தில் பெருந்தொகையானோரைப் பலிகொண்ட வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் ஆயிரத்துக்கும் அதிகமான சடலங்களைப் புதைத்த உடுத்துறை சுனாமி இல்லத்தில் நேற்றையதினம் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வு கண்ணீரும், கம்பலையுடன் ஆறாத்துயரில் வானைப்பிளக்கும் வண்ணம் ஒலித்த அழுகைக்குரல் அங்கு திரண்டிருந்தோர் அனைவரையும் விம்மிக் குளறி அழவைத்ததை நேரில் காணக்கூடியதாக இருந்தது.



இவ்வாறான மீளாத் துன்ப துயரங்கள் ஒரு சில மணிநேரம் அங்கு நீடித்தபோது சுற்றுச் சூழல்கள் ஒரே நிசப்தமாக இருந்து, அத்துன்ப துயரங்கள் அழுகைகள், குமுறல்கள் எல்லாம் காற்றோடு காற்றாகச் சென்றன. காற்றோடு காற்றாக இத்தகைய குமுறல்கள், அழுகைகள் சென்ற போதிலும் அவை அனைத்து இடங்களைச் சேர்ந்த மக்களின் இதயங்களை உலுக்கிச் சென்றன.

உடுத்துறை சுனாமி இல்லத்தில் புதைக்கப்பட்ட ஆயிரத்துக்கு அதிகமான சுனாமியால் பலியானோர் நினைவிடங்களில் நேற்றுக்காலை அவர்களின் உறவினர்கள், நண்பர்கள் பலியானோரின் விருப்புகளுக்கு அமைந்த உணவுப் பண்டங்கள், உடு புடைவைகள், குளிர்பானங்கள் சகிதம் ஒன்றுகூடி தத்தமது உறவுகளின் நினைவிடங்களில் வாழை இலையிட்டு அவற்றைப் படைத்தனர். முன்னர் போல் அல்லாமல் புதைக்கப்பட்ட மேற்கொண்டனர்.

அஞ்சலி நிகழ்வின் ஆரம்பத்தில் உடுத்துறை இராணுவ பொறுப்பதிகாரி இரத்திநாயக்க தேசியக்கொடி ஏற்ற தொடர்ந்து தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. இதனையடுத்து பொது நிலையத்துக்கு வடமராட்சி கிழக்கு மீள் எழுச்சித்திட்டத் தலைவர் வீரகத்தி மகேஸ்வரன் மலர் மாலை அணிவித்தார். ஈ.பி.டி.பி.யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமல் பொதுச் சுடரை ஏற்றினார். பின் அக வணக்கம் செலுத்த சுனாமி சோக கீதம் ஒலிக்கப்பட்டது.

இந்த வேளையில் உடுத்துறை சுனாமி இல்லத்தில் கல்லறைகள் முன்பாக பலியானோரின் விருப்பங்களுக்கு அமைய உணவுப் பண்டங்கள், உடு புடைவைகளைப் படைத்து தீபங்களை ஏற்றி சொல்லொணாத் துயரங்களை அழுது குளறி உற்றார், உறவினர்கள் வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர்.

இவர்களது அழுகைக்குரல் வானைப் பிளக்கும் அளவுக்கு இருந்ததுடன் பார்த்துக் கொண்டிருந்தோர் மனங்களை நெகிழ வைத்து அவர்களையும் கண்ணீர்விட்டு அழவைத்தது. இந்த நிகழ்வில் ஏற்கனவே கணவனை இழந்து, சுனாமிப் பேரலையில் நான்கு பெண் பிள்ளைகளைப் பறிகொடுத்த தாயொருத்தி அவர்களுக்கு விரும்பிய பட்சணங்களைப் படைத்ததோடு என்னைச் சாப்பிடுங்கோ என அடிக்கடி சொல்லுவீங்களே.... இதோ...

உடுத்துறையில் இடம்பெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் மருதங்கேணி உதவி அரச அதிபர் ந.திருலிங்கநாதன், ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமல், வடமராட்சி அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

இதேபோல சுனாமிப் பேரலை அனர்த்தத்தில் பலியான 40 பேரை புதைக்கப்பட்ட கட்டைக்காடு பகுதியிலும் இவ்வாறான அஞ்சலி நிகழ்வு இடம் பெற்றது.

## முற்றவெளியில் தேங்கின்ற வெள்ளத்தை அகற்ற வடிகால்

யாழ்ப்பாணம், டிசெ.27

யாழ்.முற்றவெளியில் தேங்கும் வெள்ளத்தை அகற்றுவதற்காக வடிகால் அமைக்கப்பட்டுள்ளது.

பண்ணை மீன் சந்தை ஊடாக இந்த வடிகால் கடலுக் குச் செல்லும் பிரதான வடிகால் வரைக்கும் அமைக்கப்பட் டுள் ளது.

தனியார் பஸ் தரிப்பிடம் மற்றும் சுற்றுவட்ட வீதி போன்ற இடங்களில் தங்கியி ருக்கும் வெள்ளம் இந்த வடி கால் மூலம் அகற்றப்பட்டுள்ளது.

தற்போது அமைக்கப்பட்ட இந்த வடிகாலைச் சிமெந்தால் கட்டவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. (ம-26)

## அனர்த்த முன்னேற்பாட்டுத் திட்டம் அடுத்த ஆண்டு வெளியிடப்படும்

### யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 27

யாழ். மாவட்டத்தின் அனர்த்தம் தொடர்பான முன்னேற்பாட்டுத்திட்டம் அடுத்த ஆண்டு வெளியிடப்படவுள்ளது.

இதன் மூலமாக எதிர் காலத்தில் யாழ். மாவட்டத்தில் ஏற்படும் எத்தகைய அனர்த்தங்களையும் தவிர்க்கக் கூடியதாக இருக்கும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்புத் தினத்தின் மாவட்ட மட்டத்திலான நிகழ்வுகள் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றன.

இரண்டு நிமிட மௌனப் பிரார்த்தனையுடன் ஆரம்பமான நிகழ்வினைத் தொடர்ந்து தேசியக் கொடியேற்றம் இடம் பெற்றது.




அதன் பின்பு மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் உரையாற்றும் போதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 2004 ஆம் ஆண்டு ஆழிப் பேரலை ஏற்பட்ட சமயம் நான் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடமையாற்றிக் கொண்டி ருந்தேன். அப்போது கரையோரப் பகுதிகளில் வசித்த மக்களின் 3,500 இற்கும் அதிகமானோர் ஆழிப் பேரலைக்கு இரையாகினர்.

உரிய முன்னறிவித்தல்கள் இல்லாததாலும் அனர்த்தம் பற்றிய முன்னேற்பாடு இல்லததாலும் அதிகளவிலான உயிரிழப்புக்களை சந்திக்க நேர்ந்தது.

இதன் பின்பு அனர்த்தம் தொடர்பான விழிப்புணர்வுகளுக்காக இந்தோனேஷியா, இத்தாலி, சீனா போன்ற நாடுகளுக்குச் சென்றேன்.

அங்கு மிகச் சிறந்த முறையில் அனர்த்த முகாமைத்துவக் கட்டமைப்பை உருவாக் கியுள்ளனர்.

இதுபோன்று தற்போது எமது நாட்டிலும் உருவாக்கப் பட்டு வருகின்றது.

இதுவரை நிகழ்ந்த அனர்த்தங்களின் தொகுப்பை நாங்கள் ஆவணமாக்கியிருக்கின்றோம். அடுத்த வருடம் யாழ். மாவட்டத்துக்குரிய அனர்த்தத்துக்கு முன்னரான பாதுகாப்புத் திட்டத்தை வெளியிடவுள்ளோம்.

இங்கு ஏற்படுகின்ற பெரிய தொற்று நோய்கள் கூட அனர்த்தம்தான். அனர்த்தத்தின் போது அனைவரும் இணைந்து சேவையாற்ற வேண்டும். அனர்த்த காலத்தில் மக்களை வாழ வைப்பதற்கான சேவையாக எமது சேவை இருக்க வேண்டும்.- என்றார். (ம-15)

## புதிய எரிபொருள் நிரப்பு நிலையம் யாழ்.நகரில் ஜனவரியில் திறக்கப்படும்

யாழ்ப்பாணம், டிசெ.27



யாழ். நகரில் புதிதாக அமைக் கப்பட்டு வரும் எரிபொருள் விற்பனை நிலையம் ஜனவரி மாதத்தில் மக்கள் பாவனைக்கு திறந்துவிடப்படவுள்ளது.

கஸ்தூரியார் வீதியில் தற்போதைய மாக்பெட் எரிபொருள் விற்பனை நிலையத் துக்கு எதிராக இந்தப் புதிய எரிபொருள் விற்பனை நிலையம் அமைக்கப் பட்டு வருகின் றது.

இந்த எரிபொருள் விற்பனை நிலையம் திறக்கப் பட்டதும் நகரில் எரிபொருள்களைப் பெற்றுக் கொள்ளும் நெருக்கடி முற்றாக நீங்கிவிடும் என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்திய அலுவலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறிப்பாக நகருக்கு வரும் அநேகமான வாகனங்கள் மாக்பெட் எரிபொருள் நிரப்பும் நிலையத்தின் மூலமே எரிபொருள்களை நிரப்பிச் செல்வதால் அங்கு வாகன நெரிசல் மற்றும் சிரமங்களை மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தப் புதிய எரிபொருள் நிரப்பும் நிலையம் திறக்கப்பட்டதும் மக்கள் நெருக்கடி இன்றி எரிபொருள்களைப் பெற்றுச் செல்ல முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-26)

## தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் 3 நாள்களுக்கு புதிய அனுமதி இல்லை

யாழ்ப்பாணம், டிசெ.27

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் புதிய நோயாளர் அனுமதிகள் நாளை மறுதினம் புதன்கிழமை முதல் தொடர்ந்து 3 தினங்கள் நடைபெறமாட்டாது என வைத்தியசாலையின் அத்தியட்சகர் அ.ஜெயக்குமரன் தெரிவித்துள்ளார்.

துர்க்காதேவி ஆலயத்துக்கு முன்பாக உள்ள கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கி வந்த தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை எதிர்வரும் முதலாம் திகதி முதல் தனது சொந்தக் கட்டடத்தில் செயற்படவுள்ளது.

இதன் காரணமாக தற்போது உள்ள கட்டடத்தில் இருந்து வைத்தியசாலையின் உபகரணங்கள் மற்றும் நோயாளர்களை இடமாற்றம் செய்ய வேண்டிய தேவையுள்ளது.

இதன் காரணமாக நாளை மறுதினம் புதன்கிழமை முதல் தொடர்ந்து 3 தினங்கள் புதிய நோயாளர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

எனினும் அவசர சிகிச்சைப் பிரிவு காலை 8 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை வழமை போல் செயற்பட்டு நோயாளர்களை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டி மூலம் அனுப்பும் சேவையை வழங்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-313-36)

# துணுக்காய் பிரதேச சபை

## துணுக்காய் பொது சந்தை, ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, கோழிஇறைச்சி கடைகளுக்கான குத்தகை மீள் கேள்வி அறிவித்தல் -2012

துணுக்காய் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட கீழே அட்டவணைகளில் விவரிக்கப்பட்ட நிலையங்களை 05.01.2012 தொடக்கம் 31.12.2012 வரையான காலப்பகுதிக்கு நடத்துவதற்கான குத்தகைக் கேள்விகள் கீழே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| **கேள்விப் பத்திரம் வழங்கும் காலம்** | : | **28.12.2011 – 03.01.2012** |
| **கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி** | : | **03.01.2012 ந.ப 12 மணி வரை** |
| **கேள்வி திறக்கப்படும் திகதி** | : | **04.01.2012 பி.ப 2.00 மணி** |
| **கேள்வி திறக்கும் இடம்** | : | **துணுக்காய் பிரதேசசபை அலுவலகம்** |

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை **தலைவர், துணுக்காய் பிரதேசசபை , துணுக்காய்** என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்துக்கு முன் இடப்படல வேண்டும். இரண்டாவது பிரதியை **பிராந்திய உளளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு** என்ற முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இறைச்சிக்கடை

| இல | குத்தகை வகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | மீளளிக்கப்பட முடியாதகேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | ஆட்டிறைச்சிக்கடை | துணுக்காய் | 15,000.00 | 1,500.00 | 500.00 |
| 02 | மாட்டிறைச்சிக் கடை | துணுக்காய் | 200,000.00 | 2,500.00 | 500.00 |
| 03 | கோழி இறைச்சிக்கடை | துணுக்காய் | 10,000.00 | 1,500.00 | 500.00 |

பொதுசந்தை

| இல | குத்தகை வகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | மீளளிக்கப்பட முடியாதகேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | துணுக்காய் பொதுச்சந்தையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | துணுக்காய் | 20,000.00 | 1,500.00 | 500.00 |

**நிபந்தனைகள்:**

1. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் தங்களது ஆள் அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறாகக் கணிக்கப்பட்டவர்கள் என தெரியவருமிடத்து தகுதியற்றவர்களாக கருதப்படுவர்.
3. எந்தவொரு கேள்வியும் காரணம் தெரிவிக்காது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு. ஆகக் குறைந்த கேள்வி தொகையிலும் குறைவான கேள்வி கேட்பவர்களின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்பட மாட்டாது.
4. கேள்விப் பத்திரப் பணம், கேள்வித் தொகை, மாத வாடகை ஆகியவற்றிற்குப் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) மேலதிகமாகச் செலுத்தப்பட வேண்டும்.
5. இறைச்சிக் கடைகளுக்கான மாத வாடகை ரூபா 500.00 செலுத்தப்பட வேண்டும்.
6. வியாபார உத்தரவுக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.
7. சபையால் விதிக்கப்படும் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.
8. எம்மால் நிர்ணயிக்கப்படும் கொல்களத்திலேயே இறைச்சிக்குரிய மிருகங்கள் அறுக்கப்பட வேண்டும்.
9. இறைச்சிக்காக ஆடு , மாடு கொல்லப்பட முன் எம்மால் குறிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைய நடந்து கொள்ள வேண்டும்.
10. மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதேசசபை
துணுக்காய்.
26.12.2011

*வீ.இராசரத்தினம்*
*தலைவர்*

# ஆட்டம் காணுகிறது சுற்றுலாத்துறை

தங்காலையில் உள்ள சுற்றுலா விடுதியில் வைத்து பிரிட்டன் சுற்றுலாப்பயணி ஒருவர் நேற்றுமுன்தினம் உள்ளூர் வாசிகளால் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து தென் பகுதி சுற்றுலாத்துறை ஆட்டங்காணத் தொடங்கியுள்ளது.

தென்பகுதி சுற்றுலாப் பகுதிகளில் தங்கியிருந்த வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் ஞாயிற்றுக்கிழமை முதல் அங்கிருந்து வெளியேறத் தொடங்கியுள்ளனர் என்று தென்பகுதியில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இக் கொலைச்சம்பவம் இடம்பெற்ற 'நேச்சர் ரிசோர்ட்' ஹோட்டலில் இருந்து மட்டும் ஞாயிற்றுக்கிழமை 35 வெளிநாட்டுப் பயணிகள் வெளியேறியுள்ளனர் என்று அந்த ஹோட்டலின் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

அதேபோல் தெற்கில் உள்ள சுற்றுலா விடுதிகளில் கிறிஸ்மஸ் மற்றும் புதுவருடம் ஆகியவற்றைக் கொண்டாடுவதற்காக ஐந்து, ஆறு நாட்கள் அறைகளை ஒதுக்கித் தங்கியிருந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அறைகளைவிட்டு வெளியேறி வருகின்றனர் என்று சுற்றுலா விடுதி முகாமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தமது பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லாமை காரணமாகவே தாம் அவ்விடங்களை விட்டு வெளியேறுவதாக சுற்றுலாப்பயணிகள் தெரிவித்துள்ளனர்.

## German Swiss மொழிகள்

German, swiss, Deutsch மொழிகள் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. CD, Book மூலம் இலகுவாக உங்களுக்கு ஏற்றவாறு கற்பிக்கப்படும்.
*ஆரம்பம் : 04.01.2012 காலை: 9.00 மணி*
Academy of Logic
57, Palaly Road, Jaffna.
T.P. 0779629296

## சிங்கர்

## வாடிக்கையாளர்களுக்கு முக்கிய அறிவித்தல்

சில அனாமதேய பேர்வழிகள் சிங்கர் பொருள்களை தவணை முறையில் தருவதாகக் கூறி குறிப்பிட்ட முற்பணத்தினை பெற்று மோசடி செய்வதாக புகார் கிடைத்துள்ளது.
சிங்கர் நிறுவனம் வாடிக்கையாளர் விரும்பும் பொருள்களை கொடுத்த பின்பே பணத்தினை பெற்றுக் கொள்கிறது. எனவே தயவு செய்து ஏமாற்றுப் பேர் வழிகளிடம் ஏமாற வேண்டாம் என்று அறிய தரும் இவ்வேளை இச் செயற்பாடுகளுக்கு சிங்கர் நிறுவனம் பொறுப்பு இல்லை என்பதை இத்தால் அறியத் தருகின்றோம். சிங்கர் முகாமைத்துவம்
(C/7207)(6,7,8)

## O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு விசேட பிரிவுகள்

அனைவருக்கும் 75% வரை கட்டணக்கழிவு

DMI COMPUTER EDUCATION



veta®
Experts In English Training

Diploma in Information Technology
Diploma in PC Application
Diploma in Microsoft Office
Adv. Dip. in Hardware & Networking
Dip. in Pre-Press Desktop Publishing
Dip.in Web Designing & Development
Dip. in Computerized Accounting
Tally Financial Accounting Training
Diplima in Video Production & Multimedia
AutoCAD 2D & 3D Animation
Veta-Spoken English

புதிய பிரிவுகள் ஆரம்பம்

| | | Time |
|---|---|---|
| பிரிவு I | 28/12/2011 | 9.30 am |
| பிரிவு II | 02/01/2012 | அல்லது |
| பிரிவு III | 04/01/2012 | 3.30 pm |

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கணினி கல்விக்கு

DMI COMPUTER EDUCATION

| ...ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No. ... வீதி, ...-222 4403 | M.M.V. வீதி, Tel. : 021-226 2470 | No.174, கண்டி வீதி. Tel. :021-227 0243 | KKS வீதி, ஜெட் மோட்டோஸ், கட்டிடம் NSB அருகில். Tel. :021-224 1970 |

## கூட்டுறவு பணியாளர் தராதரப்பத்திர (உயர் )தரப் பயிற்சி நெறி 2012 ஜனவரி - ஒக்ரோபர் விண்ணப்பம் கோரல்

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபையால் மேற்படி பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கீழ்வரும் தகைமையுடையவர்களிடம் இருந்து கோரப்படுகின்றன.

01. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களைப் பொறுத்தவரை கூட்டுறவுப் பணியாளர்தராதரப் பத்திர சாதாரண தரப் பயிற்சி நெறியில் 1,2ஆம் பிரிவுகளில் சித்திபெற்ற கூட்டுறவுப் பணியாளர்கள்.
02. கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர சாதாரண தர பயிற்சி நெறியில் 3 ஆம் பிரிவில் சித்தி பெற்று இரண்டு வருடம் கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரிந்த நிரந்தரம் பெற்ற கூட்டுறவுப் பணியாளர்கள்.
03. க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் ஏதாவது 3 பாடங்களில் சித்தி பெற்ற நிரந்தரம் பெற்ற கூட்டுறவுப் பணியாளர்கள்.
04. வெளிவாரி மாணவர்களைப் பொறுத்து க.பொ.த உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் ஏதாவது மூன்று ( வர்த்தகம்/ கணிதம் பாடங்களில் ஏதாவது ஒன்று உட்பட) பாடங்களில் சித்தி பெற்றவர்களும் அதற்கு மேலான தகைமையுடையவர்களும் கூட்டுறவுப் பணியாளர் (சாதாரண) தர பரீட்சையில் சித்தியடைந்தவர்களிடையே இருந்தும் வெற்றிடங்களுக்கு ஏற்ப அனுமதிக்கப்படுவர்.

விண்ணப்பப் படிவங்களை சுயமாகத் தயாரித்து 2012.01.05 திகதிக்கு முன் செயலாளர், கிளி/ மாவட்ட கூட்டுறவுச் சபை, ஏ-9 வீதி, கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**செயலாளர், கிளி/ மாவட்ட கூட்டுறவுச் சபை.** (F/4594)(3.7.6

# பொறுப்புக்கூறும் விவகாரத்தைக் கவனிக்க நல்லிணக்க ஆணைக்குழு தவறியுள்ளது

## சிறுபான்மையினர் உரிமைக்கான சர்வதேச அமைப்பு கண்டனம்

கொழும்பு,டிசெ.27

போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மனிதஉரிமை மீறல்கள் தொடர்பாக பொறுப்புக்கூறுவது பற்றிய முக்கியமான விவகாரங்கள் குறித்து இலங்கை நல்லிணக்க ஆணைக்குழு கவனத்தில் எடுக்கத் தவறியுள்ளது என்று அனைத்துலக மனித உரிமை அமைப்புகளில் ஒன்றான சிறுபான்மையினர் உரிமைகளுக்கான அனைத்துலகக் குழு கண்டித்துள்ளது.

இலங்கை அரசு நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட்டமையை வரவேற்றுள்ள இந்த அமைப்பு, சிறு பான்மையினரின் உரிமைகள் குறித்த முக்கியமான சில விவகாரங்களில் ஆணைக் குழு அளித்துள்ள பரிந்துரைகளையும் வரவேற்றுள்ளது.

மொழி, காணி உரிமைகள், மீள்குடியமர்வு, காணாமற்போனவர்கள், பெண்களின் பாதுகாப்பு, முஸ்லிம்களின் இடப்பெயர்வு போன்ற விடயங்களில் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இந்த அமைப்பு வரவேற்றுள்ளது.

இந்த அறிக்கையின் பரிந்துரைகளை இலங்கை அரசு நடைமுறைப்படுத்துகின்ற அதேவேளை, ஆணைக் குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்துவதையும் உறுதி செய்ய வேண்டும் என்றும் அது கோரியுள்ளது.

''போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை நடத்துவது பற்றி ஆணைக் குழு எந்தக் கருத்தையும் முன்வைக்கவில்லை.

''இலங்கை அரசு மற்றும் இரா ணுவத் தரப்பின் அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த அறிக்கை பக்கச்சார்புடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

''சித்திரவதைகள் மற்றும் வன்புணர்வு உள்ளிட்ட மனித உரிமை மீறல்கள் குறித்து இந்த அறிக்கையில் எதுவும் சுட்டிக்காட்டப்படவில்லை.

''போர் முடிவுக்கு வந்து இரண்டரை ஆண்டுகள் கழிந்துள்ள நிலையிலும் இலங்கையில் ஆள்கள் காணாமற்போகும் சம்பவங்களும், சித்திரவதைகள் மற்றும் சட்டத்துக்குப் புறம் பான கொலைகளும் தொடர்கின்றன.

''நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு நீதியையும், பெறுப்புக் கூறுவதையும் உறுதிப்படுத்துவதற்கு இலங்கை அரசு தவறியுள்ளது'' என்று சிறுபான்மையினர் உரிமைகளுக்கான அனைத்துலககுழு மேலும் தெரிவித்துள்ளது. (ச)

# தேயிலை, இறப்பர் தொழிற்சாலைகள் 18 வருட காலத்தில் 50இற்கு மூடுவிழா

## இலங்கை தோட்ட சேவைகள் சங்கம் தெரிவிப்பு

கடந்த 18 வருடகாலத்தில், தனியார் மயப்படுத்தப்பட்ட 50 இற்கும் மேற்பட்ட தேயிலை மற்றும் இறப்பர் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன என்று ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் இலங்கை தோட்ட சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

உத்தியோகத்தர்களின் சம்பள பாகுபாடு, தோட்டங்களில் தங்குமிட வசதியின்மை, உத்தியோகத்தர்களுக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படாமை, உத்தியோகத்தர்களின் வீடுகள் புனரமைக்கப்படாமை, தோட்டத் துறைக்கான முறையான விவசாயக் கொள்கைகள் வகுக்கப்படாமை போன்றன தோட்டத்துறை உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் சில பிரச்சினைகளாக குறிப்பிடப்பட்டுள்ளன.

பல தடவைகள் பேச்சு நடைபெற்றுள்ளபோதிலும் தோட்ட உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தோட்டங்களின் உரிமையாளர்கள் தவறியுள்ளனர்.

18வருடங்களுக்கு முன்தோட்டங்களை தனியார் மயப்படுத்தும்போது முறையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். பெருந்தோட்டத் துறை சீரழிவுக் கட்டத்தை அடைந்துள்ளதாகவும் இவ் விவகாரம் உடனடியாக தீர்க்கப்பட வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சகல ரயில் நிலையங்களிலும் தொலைத் தொடர்பாடல் வசதி

கொழும்பு, டிசெ.27

அனைத்து பிரதான ரயில் நிலையங்களிலும் தொலைத் தொடர்பாடல் நிலையமொன்றை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் முதல் இந்தத் திட்டத்தை ஆரம்பிக்க வுள்ளதாக ரயில்வே திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அமைக்கப்படவுள்ள தொலைத் தொடர்பாடல் நிலையத்தின் மூலம் எந்தவொரு பட்டியலுக்குமான கட்டணத்தை செலுத்தும் வசதி செய்துகொடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

இந்த சேவை நிலையங்கள் ஊடாகத் தொலைபேசி, இணையத் தள தொடர்பாடல் சேவைகள், தபால், பிரதியாக்கம் உள்ளிட்ட நவீன அத்தியாவசிய தொலைத் தொடர்பாடல் வசதிகளைப் பயணிகளுக்கு பெற்றுக்கொடுக்க எண்ணியுள்ளதாக ரயில்வே திட்டமிடல் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார் (ச)

# பேரிடரை எதிர்கொள்ள தயாராக வேண்டும்

## பிரதமர் அறைகூவல்

கொழும்பு,டிசெ.27

இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்வதற்காக இன , மத பேதமின்றி தயாராக இருக்க வேண்டும் என பிரதமர் தி. மு.ஜயரட்ன தெரிவித்துள்ளார்.


காத்தான்குடியில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற தேசிய பாதுகாப்புத் தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரண்டு வகையாக இடர்கள் இடம்பெற்று வருகின்றன. அதில் ஒன்றுதான் போர்.

அதை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று எமது நாட்டில் இல்லாமல் செய்ததன் மூலம் நாம் அனைவரும் நிம்மதியாக வாழ்கின்றோம்.

இது நமது பூமி, நமது தேசம் என்ற சிந்தனை எமக்குள்ளது. நாம் சந்தித்த இயற்கைப் பேரிடர்களில்மிக பெரிய அனர்த்தம் சுனாமியாகும். அதில் இழந்த சொத்துக்கள் எமது அரசினால் ஈடுசெய்யப்பட்டுள்ளன. அதற்கான சவாலையும் எமது அரசு வெற்றி கொண்டுள்ளது- என்றார். (ச)



தேசிய பாதுகாப்புத்தின நிகழ்வு காத்தான்குடியில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது. இந்தநிகழ்வில் பிரதமர் டீ.எம். ஜயரத்ன,கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசத்துரை சந்திர காந்தன், இடர்முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

# பிரிட்டிஷ் நபரது கொலை: சந்தேகத்தில் இருவர் கைது

கொழும்பு,டிசெ.27

தங்காலைப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை பிரிட்டிஷ் நபர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். இந்தச் சந்தேக நபர்கள் நேற்றுமுன்தினம் பொலிஸ் நிலையத்தில் வந்து சரணடைந்த போது கைது செய்யப்பட்டனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொலைக்குப் பின்னர் சந்தேகநபர்கள் தப்பிச் சென்றதாகக் கூறப்படும் வான் தங்காலை வித்தாரன்தெனிய பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலைச் சம்பவம் குறித்து குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# புதிய அரசியல் கூட்டமைப்பு கொழும்பு அரசியலில் பரபரப்பு

கொழும்பு,டி செ.27

இலங்கையில் புதிய அரசியல் கூட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஆளும் கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி உள்ளிட்ட முக்கிய கட்சிகளின் உறுப்பினர்கள் இணைந்து இந்த கூட்டமைப்பை உருவாக்கத் திட்டமிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக இந்த கூட்டமைப்பு உருவாக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ரணில் எதிர்ப்பு குழு, ஜே.வி.பி. செயற்பாட்டாளர்கள், ஜன நாயக தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளைச் சேர்ந்த பல முக்கியஸ்தர்கள் இந்த கூட்டமைப்பில் இணைந்து கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்றத் தேர்தலின் போது சகல மாவட்டங்க ளையும் உள்ளடக்கும் வகையில் வேட்பாளர்களை நிறுத்துவதும், ஜனாதிபதித் தேர்தலின்போது பொதுவான வேட்பாளரை நிறுத்துவதும் இந்தக் கூட்டமைப்பின் பிரதான இலக்காக அமைந்துள்ளது. (ச-சி)

# மஹாராஜா ஊடக நிறுவனம் குறித்து புலனாய்வுப் பிரிவினர் விசாரணை

கொழும்பு,டிசெ.27

மஹாராஜா ஊடக நிறுவனம் குறித்து புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகம் சிறிகொத்தா தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் சிரச தொலைக் காட்சி செயற்பட்டதாக கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் குற்றம் சுமத்தியிருந்தார்.

தமது உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்திருந்தார். இந்த முறைப்பாடுகள் குறித்து விசாரணை நடத்தப்பட உள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்திருந்தனர்.

சிறிகொத்தா தாக்குதல் சம்பவத்திற்கும் மஹாராஜா ஊடக நிறுவனத்திற்கும் இடையில் ஏதேனும் தொடர்பு காணப்படுகின்றதா என்பது குறித்து விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ச)

# ஜனாதிபதி பதாகைகள் குறித்து மாநகரபை நிர்வாகம் அதிருப்தி

கொழும்பு,டிசெ.27

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பதாகைகள் குறித்து கொழும்பு மாநகரசபை நிர்வாகம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பின் பல முக்கிய இடங்களிலும் ஜனாதிபதியின் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. சுற்று வட்டங்கள் உள்ளிட்ட முக்கிய இடங்களில் ஜனாதிபதியின் பதாகைகளை மேலும் காட்சிப்படுத்த முயற்சிக்கப்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த முயற்சியை ஏற்றுக் கொள்ளமுடியாது எனவும், இதனை ஜனாதிபதியே ஏற்றுக் கொள்ளமாட்டார் எனவும் கொழும்பு மாநகரசபையின் உறுப்பினர் ஆனந்த வித்தாரண தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பதாகைகளை காட்சிப்படுத்தும் முயற்சியின் பின்னணியில் பிரபல வர்த்தகர் ஒருவர் செயற்பட்டு வருகிறார் என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மின்னியல் பதாகைகள் சாரதிகளின் கவனத்தை திசை திருப்பக் கூடும். இதனால் விபத்துக்கள் இடம்பெற வாய்ப்பிருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ச)

# விசா முடிந்த பின்னரும் இந்தியாவில் தங்கியிருந்த இலங்கையர்கள் கைது

இந்தியாவுக்குச் சுற்றுலா சென்று விசா காலாவதியாகியும் சட்டவிரோதமான முறையில் அங்கு தங்கியிருந்த இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருவனந்தபுரம்-கோவலம் என்ற பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்தே குறித்த இலங்கை நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொஹமட் ஹசிம் (வயது 34) என்பவர் கடந்த மே மாதம் 22 ஆம் திகதி இலங்கையில் இருந்து இந்தியாவின் சென்னைக்குச் சென்றுள்ளார்.

அவருக்கு வழங்கப்பட்ட சுற்றுலா விசா கடந்த ஜூன் 9ஆம் திகதியுடன் காலாவதியாகியுள்ளது. குறித்த இலங்கையர் கடந்த வியாழக்கிழமை சென்னையில் இருந்து திருவனந்தபுரம்-கோவலம் சென்று தன்னை புனே நபர் என்று அறிமுகப்படுத்தி ஹோட்டலில் தங்க முயற்சித்துள்ளார்.

இவருடைய போலியான தகவல் குறித்து ஹோட்டல் உரிமையாளர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். பின்னர் அங்கு விரைந்த பொலிஸார் குறித்த இலங்கையரை நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இலங்கை பிரஜையிடம்இருந்துஒருமடிக்கணினி கைப்பற்றப்பட்டது பொலிஸார் அதனைப் பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளனர்.

இலங்கையரான ஹசிமிடம் பொலிஸாரும் தேசிய புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)



நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழகத்தின் பாலர் பகல் விடுதியின் நிறுவுநர் நினைவு நாளும், கலைவிழாவும் கழகத் தலைவர் ஐ.சிவராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றன. பிரதம விருந்தினராக சமூக அபிவிருத்தி மன்றத்தைச் சேர்ந்த திருமதி நவநீதம்பிள்ளை ஜெகதீசனும், சிறப்பு விருந்தினராக யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன், நீர்வேலி தெற்கு கிராம அலுவலர் சு.சண்முகவடிவேல் ஆகியோரும் கலந்து கொண்டனர். (வ-30)

## இலங்கைக்கு ஹெரோயின் கடத்த முயன்றவர் ராமநாதபுரத்தில் கைது

ராமநாதபுரம், டிசெ.27

இலங்கைக்கு ஹெரோயின் கடத்த முயன்ற நபரை ராமநாதபுரம் பஸ் நிலையத்தில் கியூ பிரிவுப் பொலிஸார் கைது செய்தனர்.

ராமேஸ்வரம் தங்கச்சி மடம் பகுதியைச் சேர்ந்த புஷ்பா தன்ராஜ் என்பவர் இலங்கைக்கு 1.5 கிலோ ஹெரோயினைக் கடத்த முயன்றபோது கியூ பிரிவுப் பொலிஸாரிடம் பிடிபட்டார். கைப்பற்றப்பட்ட ஹெரோயினின் மதிப்பு ரூ 1.5 கோடியாகும். தன்ராஜ் மீது ஏற்கனவே போதைப்பொருள் கடத்தியதாக பல்வேறு வழக்குகள் உள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (வ)

## இளையோர் நாடாளுமன்றத்தின் யாப்பு திருத்தம் பற்றி ஆராய்வு

வலி.வடக்கு, டிசெ.27

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளையோர் நாடாளுமன்ற நான்காவது அமர்வு நிகழ்வுகள் சபாநாயகர் அனீஸ் தலைமையில் கொழும்பு மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்ற இளையோர் நாடாளு மன்றக் கட்டடத்தில் கடந்த 21ஆம் 22 ஆம் திகதிகளில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரபல திரைப்பட இயக்குனரும் ஊடகவியலாளருமான ஜெயந்திர ஸ்ரீ கலந்து கொண்டதுடன் இளைஞர்களின் வாழ்வில் அரசியலும் கலையும் என்னும் பொருளில் உரையாற்றினார்.

இதனைத் தொடர்ந்து சபையின் நிகழ்வுகள் இடம்பெற்றன. இதன்போது இளைஞர் கழகத்தின் யாப்புத் திருத்தம் சம்பந்தமாக ஆராயப்பட்டது.

இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனைகள் கருத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன் அதனை ஆராய்ந்து அடுத்த கூட்டத் தொடரில் முடிவெடுப்பது என்றும் தீர்வு எட்டப்பட்டது. (வ-86)

## நயினாதீவு ஸ்ரீமலை ஆலயத்தில் மண்டல பூசை

நயினாதீவு ஸ்ரீமலையின் ஐயனார் ஆலயத்தின் மண்டல பூசை, நிறைவு விழா என்பன இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளன.

அன்றைய தினம் காலை ஐயப்ப விரத சுவாமிகள் இருமுடி சுமந்து நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தை வந்தடைவர். அதனைத் தொடர்ந்து காலை 9.30 மணிக்கு அஷ்டோத்திர சங்காபிஷேகமும் 18 படி திருவிழாப் பூசையும் இடம் பெறும். (வ-313)

## காணிப்பதிவகப் பணிகள் இடைநிறுத்தம்

இந்த வருடநிறைவுப் பணிகளை முன்னிட்டு நாளை மறுதினம் வியாழன் மற்றும் வெள்ளி ஆகிய கிழமைகளில் யாழ்.மாவட்ட காணிப் பதிவகத்தில் காணிப்பதிவுகள் தொடர்பான அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

எதிர்வரும் 2ஆம் திகதி தொடக்கம் வழமைபோல சகல பணிகளும் இடம்பெறும் என்று யாழ்.மாவட்ட மேலதிக காணிப் பதிவாளர் அறிவித்துள்ளார். (வ)


## மரண அறிவித்தல்

### நல்லதம்பி பாலசுப்பிரமணியம்



காரைநகரைப் பிறப்பிடமாகவும் பூநகரியை வசிப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் பூநகரி பல நோக்கு கூட்டுறவுச் சங்க முகாமையாளரும் தற்போது பூநகரி கடற்றொழில் சங்க சமாச முகாமையாளருமாகிய நல்லதம்பி பாலசுப்பிரமணியம் 2011-12-16 வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி-சிவயோகம் தம்பதியரின் அன்பு புதல்வனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதியரின் அருமை மருமகனும் சிவமலரின் அன்புக் கணவரும் சுரேஸ்குமார், வாசுகி, தேவகி, மேகலை, காலஞ்சென்ற அமரதாஸ், கீதாஞ்சலி, சுகீர்தன், கிருசாந்தன், சுதர்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தியாகராஜா, சண்முகதாசன், சாந்தரூபன், தேவசுந்தரி, சிவயோகநாதன் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஜெயலட்சுமி, ராசலட்சுமி, விஜயலட்சுமி, பாக்கியலட்சுமி, மகா லட்சுமி, சுப்புலட்சுமி, வரதலட்சுமி, கிருஸ்ணபவான், கங்காதரன், தயா ஆகியோரின் அன்புச் சகோதரனும் S.P.கோபால், தங்க வேல், மகாலிங்கம், விவேகானந்தன், செல்வ ராசா, குமாரதாஸ், வரதரூபா, றஞ்சினி, கரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் அபிராம், அனந்தராம், அனுராம், டினோஜா, அபிசாயி, கேனுஜா, கேனிசன், கோமதன், கேசா ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் ஆவார். அன்னாரின் தகனக்கிரியை 29.12.2011 வியாழக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்பு:**
00447440641954, 00442086691481

**அஞ்சலிக்கு:வியாழக்கிழமை 29.12.2011 மு.ப. 9.30-பி.ப1.00**
Carshlton Athletic FC (At Rear), War Memorial Sports Ground, Colston Avenue, Carshlton SM5,2 PW.

**தகனம்:வியாழக்கிழமை 29.12.2011 பி.ப 02.00**
North East Surrey Crematorium, Lower Morden Lane, Surrey SM4,4 NU

K. கணேசநாதன் (பாபு),
127, [illegible] றோட், அத்தியடி, யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்

(12126) 10,6,7


## ஏகாதசி திருவிழா

சுழிபுரம், டிசெ.27

பொன்னாலை ஸ்ரீவரதராசப் பெருமாள் ஆலய வைகுண்ட ஏகாதசி திருவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் காலை மாலை திருவிழா இடம் பெற்று எதிர்வரும் 3 ஆம் திகதி வைகுண்ட ஏகாதசி தினத்தன்று தேர்த் திருவிழா நடைபெறும்.

மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழா சுழிபுரம் திருவடிநிலை தீர்த்தக் கரையில் நண்பகல் 12 மணிக்கு நடைபெறும்.

அன்று காலை 9 மணிக்கு அழகிய மஞ்சத்தில் மங்கல இசையுடன் கூட்டுப் பிரார்த்தனையுடனும் சுவாமி புறப்பட்டு தீர்த்தம் ஆடுவார்.

சி.வ.இராசேஸ்வரக் குருக்கள் பிரதம குருவாக இருந்து கிரிகைகளை நிறைவு செய்வர். (வ-28)


## பாலின் விலை அதிகரிப்பு

எமது சங்கம் 01.01.2012 ஆம் திகதியிலிருந்து ஒரு லீற்றர் பாலின் விற்பனை விலையை 60 ரூபாவாக அதிகரிக்கவுள்ளது. பால் உற்பத்தியாளரின் உற்பத்திச் செலவை ஈடுசெய்யும் முகமாக பாலின் கொள்விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விற்பனை விலை அதிகரிப்பது தவிர்க்க முடியாதுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பொது முகாமையாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கம் (வ-து)
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.**

(ஜி/7200)(3.6.7)



## 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு
14.07.1956

இறப்பு
17.11.2011



இறைவன் உனை விண்ணுலகம்
காண அழைத்தானோ
மக்கள் உமை வழியனுப்பி விட்டு
மழை போல நீர் சொரிகிறோமே
நாள்கள் நகர்ந்தாலும் எம் மனம்
நகரா உம் நினைவுகளோடும்
ஈரம் காய்ந்த விழிகளோடும்
என்றும் வருந்தி நிற்கின்றோம்.

திருமதி **மேசிடெய்சி கிறிஸ்தோப்பர்**
(இந்திரா)

இவரது இழப்பால் துயருற்ற எம் குடும்பத்தினருக்கு ஆறுதலாக, தேறுதலாக இருந்தோர், தொலைபேசி ஊடாக தமது துன்பத்தை பகிர்ந்தோர், மரணச் சடங்கில் பங்குபற்றியோர், தேவைகளில் துணையாக நின்றோர் அனைவருக்கும் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இன்று (27.12.2011 ) செவ்வாய்க்கிழமை யாழ்.அடைக்கல அன்னை ஆலயத்தில் (O.L.R) காலை6.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் பங்குகொள்ள அழைத்துநிற்கின்றோம்.

6/2, மாட்டீன் வீதி,
யாழ்ப்பாணம்.

(12127)(3.6.7)

குடும்பத்தினர்.
021 222 9232

# கிறிஸ்மஸ் தினமன்று நைஜீரியாவில் உடல் சிதறி இறந்தோர் 100 பேர்

## தேவாலயங்களில் குண்டு வெடித்ததால் பரிதாபம்

அபுஜா,டிசெ.27

கிறிஸ்துமஸ் தினமான நேற்று முன்தினம் கொண்டாட்டத்தின் போது, நைஜீரியாவில் 2 தேவாலயங்களில் அடுத்தடுத்து சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள் வெடித்தன. இதில் 100 பேர் உடல் சிதறிப் பலியானார்கள். பலர் படுகாயமடைந்தனர். தலைநகர் அபுஜாவை அடுத்த மடலா என்ற இடத்தில் உள்ள செயின்ட் தெரேசா தேவாலயத்தில் கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு சிறப்புப் பிரார்த்தனை நடைபெற்றது. இதில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்ட நிலையில் தேவாலயத்துக்கு வெளியே பயங்கர சத்தத்துடன் குண்டு வெடித்தது.



இதில் 100 பேர் பலியானதாகவும் மேலும் பலர் படுகாயமடைந்ததாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கூறினர்.

இந்தக் குண்டு வெடிப்பு நடந்து ஓரிரு மணி நேரத்தில், ஜோஸ் நகரில் உள்ள தேவாலயத்துக்கு அருகே மற்றொரு குண்டு வெடித்தது. இதில் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை என்றும், பொலிஸ் ஒருவர் காயமடைந்ததாகவும் அந்தப்பகுதியைச் சேர்ந்தவர் தெரிவித்தார்.

தகவல் அறிந்த காவல் துறையினர் சம்பவ இடத்துக்கு வந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர். (ந)

# பொது மக்கள் மீதான இராணுவத்தின் தாக்குதலுக்கு கனடா கடும் எச்சரிக்கை

## சிரிய அதிபரை பதவி விலகவும் வலியுறுத்து

டமாஸ்கஸ்,டிசெ.27

சிரியாவில் போராட்டக்காரர்கள் மீது நடத்தும் இராணுவத் தாக்குதலை உடனடியாக நிறுத்த வேண்டும் எனக் கனடாவின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜோன் பெய்ர்ட் கண்டிப்புடன் தெரிவித்துள்ளார். சிரியாவின் தேசியக் குழுவைச் சேர்ந்த சிலர் பெயர்டைச் சந்தித்துப் பேசினர். அந்தச் சந்திப்பின் போதே பெய்ர்ட் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

சிரிய அதிபர் பஷர் அல் ஆசாத் கட்டுப்பாடற்ற முறையில் தனது இராணுவத்தை ஏவி பொதுமக்களை அச்சுறுத்தியும், கொலை செய்தும் வருகிறார். இதனைத் தடுக்கும் விதத்தில் சிரியா மீது சில பொருளாதாரக் கட்டுப்பாடுகளை விதிக்க கனடா முன்வந்துள்ளது. அதன்படி இனி சிரியாவிலிருந்து இறக்குமதியாகும் உணவுப்பொருள் தவிர வேறு எந்தப் பொருளையும் கனடா பெற்றுக்கொள்ளாது.

கனடாவிலிருந்து சிரியாவுக்கு கணினி மென்பொருள் மற்றும் தொழில்நுட்பக் கருவிகள் ஏற்றுமதியாகா. சிரிய இராணுவத்தினருடன் தொடர்புடைய தனிநபர் மற்றும் நிறுவனங்களுடனும் கனடா இனி வர்த்தகத் தொடர்பு வைத்துக் கொள்ளாது.

அதுமட்டுமன்றி ஆசாத்துக்கு மேலை நாடுகளும், துருக்கியும், அரபு நாடுகளின் கூட்டமைப்பும் தொடர்ந்து நெருக்கடி கொடுப்பதால் அவரால் அதிக நாள்களுக்குப் பதவியில் நீடிக்க இயலாது. எனவே எங்களின் அறிவுரையை ஏற்று உடனே பதவி விலகினால் அவருக்கு சில லாபங்களும் கிடைக்கும் என்று பெய்ர்ட் எச்சரித்துள்ளார். (ந)

# ஹவானா தீவில் படகு விபத்து: 38 பேர் உயிரிழப்பு

ஹவானா,டிசெ.27

கியூபாவின் ஹவானாதீவுப் பகுதியில் படகு கவிழந்து விபத்துக்குள்ளானதில் ஹெய்ட்டி நாட்டைச் சேர்ந்த 38 பேர் உயிரிழந்துள்ளனர்.

லத்தீன் அமெரிக்க நாடான கியூபாவின் கவுதாமாலா மாகாணத்திலிருந்து ஹாவான தீவுக்கு படகு ஒன்றில் 100 இற்கும் மேற்பட்டோர் சென்று கொண்டிருந்தனர். படகு ஹவானா தீவுப்பகுதியை நெருங்கி கொண்டிருந்த போது திடீரென கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 38 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களுள் 21 ஆண்கள், 17 பெண்கள் அடங்குகின்றனர் என மீட்புப் படையினர் கூறினர்.

அமெரிக்க கப்பற்படை ரோந்துப்பணியில் ஈடுபட்டு கொண்டிருந்தவர்களே மீட்புப் பணியில் ஈடுபட்டனர். (ந)

# ஆங்சான் சூகியின் கட்சி தேர்தல் ஆணையத்தில் பதிவு

மியன்மார் நாட்டின் எதிர்க்கட்சித் தலைவி ஆங்சான் சூகியின் கட்சி, தேர்தலில் போட்டியிட தேர்தல் ஆணையத்தில் முறைப்படி பதிவு செய்துள்ளது.



மியன்மார் நாட்டில் நவம்பர் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் சூகியின் ஜனநாயக தேசிய லீக் கட்சி போட்டியிடவில்லை. தேர்தலில் கட்சித் தலைவி சூகி போட்டியிட முடியாதது உட்படப் பல்வேறு தடைகள் விதிக்கப்பட்டதால் தேர்தலை அக்கட்சி புறக்கணித்தது. இதனால் அந்தக் கட்சியை மியன்மார் அரசு தகுதியிழக்கச் செய்தது.

இந்நிலையில் இனிவரும் அனைத்துத் தேர்தல்களிலும் போட்டியிடப் போவதாக ஜனநாயக தேசிய லீக் கடந்த மாதம் முடிவெடுத்தது. இதைத் தொடர்ந்து கட்சியின் முக்கிய தலைவர் டின் ஓ உள்ளிட்ட உறுப்பினர்களுடன் தேர்தல் ஆணையத்துக்குச் சென்று தனது கட்சியை முறைப்படி பதிவு செய்தார் சூகி.

இதேவேளை மியன்மாரைத் தற்போது ஆண்டு வரும் இராணுவத்தின் ஆதரவு பெற்ற அரசு, சூகி கட்சி மீண்டும் அரசியல் தளத்தில் செயற்பட அனுமதி அளித்துள்ளது.

இதன்படி நடைபெற உள்ள அனைத்து இடைத் தேர்தல்களிலும் போட்டியிடப் போவதாக அக்கட்சி அறிவித்துள்ளது. எனினும் இடைத் தேர்தல்கள் எப்போது நடைபெறும் என்பது இன்னும் அறிவிக்கப்படவில்லை.

அமெரிக்க வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன், சூகியை சமீபத்தில் சந்தித்துள்ள நிலையில் இந்த மாற்றங்கள் நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

# துனிஷியாவில் புதிய அரசு பதவியேற்பு

துனிஸ்,டிசெ.27

துனிஷியாவில் ஏற்பட்ட புரட்சி காரணமாக அதிபர் பதவி விலகினார். இதைத் தொடர்ந்து, புதிய அரசு கடந்த சனிக்கிழமை பதவியேற்றது.

கடந்த 24 ஆண்டுகளாக சர்வாதிகார ஆட்சி நடத்தி வந்த ஸைனி எல் அபதின் பென் அலிக்கு எதிராக இந்த ஆண்டுத் தொடக்கத்தில் புரட்சி வெடித்தது. இவரது ஆட்சியில் லஞ்சம் அதிகரித்ததாகவும், வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்ததாகவும் புகார் எழுந்தது. இதையடுத்து, அலி பதவி விலகினார்.

இந்தநிலையில், இஸ்லாமியக் கட்சி தலைமையிலான புதிய அரசு சனிக்கிழமை பதவியேற்றது. எனினும், இது தற்காலிக அரசாகவே இருக்கும். புதிய சட்டம் இயற்றப்பட்டு அதன்படி தேர்தல் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(ந)




லிபியாவை சர்வாதிகாரம் செய்த கடாபியைப் போல், ரஷ்யாவில் புடினும் சர்வாதிகாரியாக நினைக்கிறார் என்பதை சித்திரிக்கும் வகையிலான பதாகையை ஏந்திக்கொண்டு, மொஸ்கோவில் நடைபெற்ற போராட்டத்துக்கு வந்த புடின் எதிர்ப்பாளர்கள்.

# ஜப்பான் பிரதமர் சீனாவில்

பீஜிங்,டிசெ.27

ஜப்பான் பிரதமர் யோஷிஹிகோ நோடா, இரு நாள் அரசுமுறைப் பயணமாக சீனா சென்றுள்ளார். அவரது இந்தப் பயணத்தில், வட கொரியாவின் தற்போதைய நிலைமை முக்கியமாக விவாதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சமீபத்தில் நடந்த இந்தியா, ஜப்பான், அமெரிக்க நாடுகளின் முத்தரப்புக் கூட்டத்துக்குப் பின், இந்தப் பயணத்தை ஜப்பானியப் பிரதமர் மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அதன் மூலம் ஜப்பானுடனான தனது உறவை மேலும் வலுப்படுத்திக் கொள்ள சீனா விரும்புகிறது என்பது வெளிப்பட்டுள்ளது.

வட கொரியாவின் கிம் ஜோங் இல் மரணம் அடைந்த நிலையிலும், நோடாவின் இந்தப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

இந்தப் பயணத்தில் சீன அதிபர் ஹூ ஜிண்டாவோ மற்றும் பிரதமர் வென் ஜியாபோ ஆகியோரைச் சந்தித்து, யோஷிஹிகோ நோடா பேச உள்ளார். (ந)

# செய்தித்துறை அமைச்சரின் ராஜினாமாவை நிராகரித்தார் பாகிஸ்தான் பிரதமர் கிலானி

இஸ்லாமாபாத், டிசெ.27

பாகிஸ்தானின் செய்தித் துறை அமைச்சர் பர்தூஸ் ஆஷிக் ஏவான் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். எனினும் அவரது ராஜினாமா ஏற்கப்படவில்லை.



கராச்சி நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தின்போது தனது ராஜினாமாவை பிரதமர் யூசுப் ரசா கிலானியிடம் அவர் ஒப்படைத்தார்.

எனினும் அமைச்சர் பர்தூஸ் ஆஷிக்கின் ராஜினாமாவை ஏற்க பிரதமர் கிலானி மறுத்துவிட்டார். இதனை அடுத்து அவர் அமைச்சராகத் தொடர்ந்து செயற்படுவார் என்று பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

2008ஆம் ஆண்டு பாகிஸ்தான் மக்கள் கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்து செய்தித்துறைக்குப் பொறுப்பு வகித்த மூன்றாவது அமைச்சர் பர்தூஸ் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

# சட்டத்தின் வரையறைக்குள் இராணுவம் செயற்பட வேண்டும்

## கிலானி அழைப்பு

கராச்சி,டிசெ.27

பாகிஸ்தானில் அதிகாரம் மூலமோ, அச்சுறுத்தியோ, அரசை மாற்ற முயலும் நடவடிக்கைகளுக்கு, மக்கள் அனுமதியளிக்கக் கூடாது என அதிபர் சர்தாரி கேட்டுக் கொண்டுள்ள அதே நேரம், ராணுவம் மற்றும் நீதித் துறை உள்ளிட்ட அனைத்து அமைப்புகளும் அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி, வரையறைக்குள் செயற்பட வேண்டும் எனப் பிரதமர் கிலானி வலியுறுத்தியுள்ளார்.

100 ஆவது அமைச்சரவைக் கூட்டம் மற்றும் பாகிஸ்தான் முதல் அதிபர் ஜின்னாவின் 135ஆவது பிறந்த நாள் ஆகிய முக்கிய நிகழ்வுகளை முன்னிட்டு நேற்றுமுன்தினம் பிரதமர் கிலானி அமைச்சரவையில் பேசினார்.

அதன்போது அவர் பேசியதாவது;

நாடாளுமன்றம், நீதித் துறை மற்றும் ராணுவம் மூன்றையும் மதிக்கிறோம். அதே நேரம், இந்த மூன்றும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் வரையறைக்குள் செயற்பட வேண்டும் என விரும்புகிறோம். நாடாளுமன்ற ஜனநாயகம் தான், ஜின்னாவின் நோக்கமும் கூட- எனக் கிலானி தெரிவித்தார்.

(ந)

# மாதிரிக் கிளையாகப் புதுப்பொலிவு பெறுகிறது அச்சுவேலி இலங்கை வங்கி

அச்சுவேலி இலங்கை வங்கிக் கிளை மாதிரிக் கிளையாக மறுசீரமைப்புச் செய்யப்படவுள்ளது. நவீன வசதிகளைக் கொண்டதாகவும் வாடிக்கையாளருக்கான சகல வங்கிச் சேவைகளையும் குறுகிய நேரத்தில் வழங்குவதற்கு ஏற்ற வகையிலும் மாதிரிக் கிளையாகவுள்ளது.

வங்கியின் கட்டட அளவு விஸ்தரிப்புச் செய்யப்பட்டுப் புதிய கட்டுமான வேலைகள் நடைபெற்று வருவதோடு குளிரூட்டி இணைப்புக்களும் மேற்கொள்ளப்படவுள்ளன.

குறுகிய கால இடைவெளியில் 'பி' தர கிளையாக தரமுயர்த்தப்பட்டு மாதிரிக் கிளையாகவும் மறுசீரமைப்புச் செய்யப்படுவது வங்கிச்சேவை வரலாற்றில் குறிப்பிடத்தக்கது என இலங்கை வங்கியின் உயர் அதிகாரி ஒருவர் தெரி வித்தார்.

நாடளாவிய ரீதியில் செயற்படும் வர்த்தக வங்கிகள் அனைத்தையும் உள்ளடக்கி மத்திய வங்கியினால் நடத்தப்பட்ட மதிப்பீட்டில் ஆகக் கூடிய தொகையை வாடிக்கையாளர்களுக்கு கடனாக வழங்கி அதில் 99.02 வீதத்தை உரிய காலப்பகுதியில் அறவீடு செய்தது என்ற வகையில் 2009 ஆம் ஆண்டு முதலாம் இடத்தையும் பெற்றது. இந்த வகையில் மத்திய வங்கி ஆளுநர் விருது வழங்கி கௌரவித்திருந்தார். 2010 ஆம் ஆண்டு மதிப்பீட்டிலும் அச்சுவேலி இலங்கை வங்கி முன்னணியில் உள்ளது.



அச்சுவேலி இலங்கை வங்கியில் நடைபெற்ற வாழ்வாதார மேம்பாட்டுக் குத்தகை சந்தை நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கை வங்கியின் தலைவர் டாக்டர் காமினி விக்கிரமசிங்க இரண்டு சக்கர உழவுயந்திரத்துக்கான சாவியை விவசாயி ஒருவரிடம் கையளிப்பதை படத்தில் காணலாம். இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ஜி. முதியான்சே ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். [த-11]

அச்சுவேலியில் செயற்படும் எட்டு வங்கிகளிலும் ஆகக் கூடுதலான வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ளது.

அண்மையில் இலங்கை வங்கியின் தலைவர் கலாநிதி காமினி விக்கிரமசிங்க வங்கிக்கு விஜயம் செய்து வங்கியின் செயற்பாடுகளைப் பாராட்டியதோடு வாடிக்கையாளர்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கான உதவிகளை உயர்மட்டத்தில் வழங்குவதற்கான அனுமதியையும் வழங்கியுள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அச்சுவேலி இலங்கை வங்கிக்கு இரண்டு தடவை நேரடியாக விஜயம் செய்து வங்கிச் செயற்பாடுகளை மதிப்பீடு செய்து பாராட்டுத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-11)

## தெற்காசியாவின் மிகப்பெரிய சர்வதேச படகுக் கண்காட்சி

தெற்காசியாவின் மிகப்பெரிய சர்வதேச படகு கண்காட்சியான 'Boat show Sri Lanka - 2012' எதிர்வரும் மே மாதம் 18, 19 மற்றும் 20ஆம் திகதிகளில் பண்டாரநாயக்க ஞாபகார்த்தக் கண்காட்சி நிலையத்தில் இடம்பெறவுள்ளது. படகுத்துறையைச் சேர்ந்த சகல தரப்பினரையும் கவரும் இந்த நிகழ்ச்சி மூன்றாவது தடவையாக நடத்தப்படவுள்ளது.

இத்துறையுடன் நேரடியாக அல்லது மறைமுகமாகத் தொடர்புடைய வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ள இருப்பதால் இத்துறை சர்வதேச முக்கியத்துவமிக்கதாகக் கருதப்படுகின்றது.

படகுத் துறைசார்ந்த நவீன தொழில்நுட்டங்கள் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் பரிமாறிக்கொள்ளவும் வெவ்வேறு பிரிவினருக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்தவும் ஒரு சிறந்த வாய்ப்பினை இக்கண்காட்சி வழங்கும். படகு கட்டுதல், மோட்டோர் பொறியியல், பழுதுபார்த்தல், உள்ளக வடிவமைப்புப் படகு பயண ஏற்பாடுகள், சுற்றுலா பொழுது போக்கு, நீர் விளையாட்டு, படகுப் பயணப் பாதுகாப்பு உபகரணங்கள், இலத்திரனியல் சாத னங்கள், படகுத்துறையின் முதலீடு, படகு ஏற்றுமதி, மாலுமிகளின் பயிற்சி போன்ற துறைகளை உள்ளடக்கியதாக இக்கண்காட்சி அமையவுள்ளது.

நீரியல் விளையாட்டு தொடர்பான நவீன வழிமுறைகள், இக்கண்காட்சியின் முக்கிய இடத்தை வகிக்கவுள்ளன.

சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்கு இது பயனுள்ளதாக அமையும் என ஏற்பாட்டாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். பிராந்திய நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், மொரீஷியஸ், மடகாஸ்கர், மாலைதீவு என்பன இக் கண்காட்சியில் பங்குபற்ற இருப்பதாகக் கண்காட்சி வேலைத்திட்ட முகாமையாளர் மிஸாக்கா வீரகோன் தெரிவித்துள்ளார். (த)

## கிறிஸ்மஸ் காலத்தில் நன்மையடையவுள்ள கொமர்ஷல் வங்கி கார்ட் உரிமையாளர்கள்

இம்முறை கிறிஸ்மஸ் பண்டிகைக் காலத்தின்போது கொமர்ஷல் வங்கியின் கடனட்டை மற்றும் ஷொப்பிங் டெபிட் அட்டை என்பனவற்றை வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் நன்மையடையவுள்ளனர். துணிவகைகள் மற்றும் பாதணிகளை விற்பனை செய்யும் நாட்டின் முன்னணி வர்த்தக நிலையங்களிடமிருந்து மாபெரும் கழிவுகள் வழங்கப்படவுள்ளன.

சர்வதேச ரீதியாக இலங்கையின் மிகச் சிறந்த வங்கியான வகைப்படுத்தப்பட்டுள்ள கொமர்ஷல் வங்கியின் ஷொப்பிங் டெபிட் அட்டை மற்றும் கடனட்டைகளை வைத்திருப்பவர்கள் 2011 டிசம்பர் 17 முதல் 28 வரையான காலப் பகுதியில் ஹமீடியாஸ் காட்சியறைகள், சிக்னேச் சர், ரேமண்ட், ரொமாபோ, ஸ்ப்ரிங் அண்ட் சமர் மற்றும் ஷேர்ட் வேர்க்ஸ் காட்சியறைகளில் எப்பெறுமதிக்கு கொள்வனவு செய்தா லும் அதில் 20 வீத கழிவுகளைப் பெற்றுக் கொள்ளவுள்ளனர். DSI காட்சியறைகளில் 1,000 ரூபாவுக்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு இக்கழிவு வழங்கப்படும். அத்தோடு அடிடாஸின் கொள்வனவு செய்பவர்களுக்கு இக்கழிவு 20 முதல் 30 வீதமாக இருக்கும். பேஷன் பக், கூல் பிளெனட், நியூ சிறியானி ட்ரஸ் பொயின்ட் என்பனவற்றில் குறிப்பிட்ட காலப்பகுதியில் கொமர்ஷல் வங்கி கார்ட் பாவனையாளர்களுக்கான கழிவு 15 வீதமாக இருக்கும்.

கொமர்ஷல் வங்கி தனது கார்ட் உரிமையாளர்களுக்குத் தெரிவுசெய்யப்பட்ட 40க்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்களில் பொருள் கொள்வனவு செய்பவர்களுக்கு வழங்கிவரும் மேலதிக பெறுமதிசேர் சலுகையான ''கொம் டீல்ஸ்'' சலுகைகளுக்கு மேலதிகமாகவே இந்தச் சலுகையும் வழங்கப்படவுள்ளது. கொம் டீல்ஸ் திட்டத்தின் கீழ் கடனட்டைகளைப் பாவித்துப் பொருள்களைக் கொள்வனவு செய்பவர்கள் எந்த வித வட்டியும் அற்ற இலகு தவணை முறையிலான கொடுப்பனவு நன்மையை அனுபவித்து வருகின்றனர்.

70க்கும் மேற்பட்ட தெரிவுசெய்யப்பட்ட வர்த்தக நிலையங்களில் இத்திட்டம் அமுலில் உள்ளது. அத்தோடு விசா மற்றும் மாஸ்டர் கார்ட் மூலம் செய்யப்படும் சர்வதேச வர்த்தக ஊக்குவிப்புகளிலும் இவர்களுக்கு பங்கேற்கும் வாய்ப்பு உள்ளது. (த)

## SLIM குறியீட்டு சிறப்பு விருது நிகழ்வில் அதிக விருதுகளைப் பெற்றுள்ள ஜனசக்தி

SLIM குறியீட்டுச் சிறப்பு விருது 2011 நிகழ்வில் ஜனசக்தி காப்புறுதி பி.எல்.சி. நிறுவனம் இரட்டை கௌரவங்களைப் பெற்றுக்கொண்டு, இவ்விருது வழங்கல் நிகழ்வில் காப்புறுதிப் பிரிவின் கீழ் அதிக எண்ணிக்கையான விருதுகளை வென்ற இலங்கையின் ஒரெயொரு காப்புறுதி நிறுவனமாகத் திகழ்கின்றது. இந்நிகழ்வில் ''வருடத்துக்கான சேவைக் குறியீடு'' என்ற பிரிவில் வெள்ளி விருதினையும் ''வருடத்துக்கான ஊளுசு குறியீடு'' என்ற பிரிவில் வெண்கல விருதையும் பெற்றுக்கொண்டது. ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் சந் தைப்படுத்தல்துறை பிரிவின் தலைவர் பெடி வீரசேகர கூறுகையில், ''இவ்வருடத்தில் மேற்படி விருது வழங்கல் நிகழ்வில் இரட்டை விருதுகளை வென்ற ஒரெயொரு காப்புறுதிக் கம்பனியாக திகழ்வதையிட்டு நாம் பெருமையடைகின்றோம். எமது வர்த்தக குறியீட்டினை ஸ்திரநிலையில் வைத்திருப்பதற்கான முயற்சி, சேவையின் நிகரற்ற தரம் மற்றும் வர்த்தக குறியீட்டினைக் கட்டியெழுப்புவதற்காகத் தொடர்ச்சியாக முதலீடுகளை மேற்கொள்வதன் மூலம் சிறந்த பெறுமதியை உருவாக்குதல் போன்றவற்றினால் இந்த விருதுக்காக நாம் தகைமை பெற்றோம்.

## 'வருடத்துக்கான உள்ளூர் குறியீடுக்கான' வெள்ளி விருதைப் பெற்ற ஹமீடியா


(இடமிருந்து வலமாக) முகாமையாளர் சிறப்புக் காட்சியறை ரொஷான் உடுமன், தேசிய விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளர் சமுது டி. சில்வா, சந்தைப்படுத்தல் முகாமையாளர் லெரோய் ஜே.ஏபர்ட், உதவிக் குறியீட்டு முகாமையாளர் ராமசாமி பாலகுமார் மற்றும் சிரேஷ்ட குறியீட்டு நிறைவேற்று அதிகாரி மொஹம்மட் அயூப் நலிர் ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர்.

இலங்கையின் ஒரேயொரு ஆண்கள் ஆடை தீர்வு வழங்குநரான ஹமீடியா, அண்மையில் நடைபெற்ற SLIM குறியீட்டு சிறப்புத் தன்மை விருதுகள் 2001 இல் 'வருடத்துக்கான உள்ளூர் குறியீட்டுக்கான' வெள்ளி விருதைப்' பெற்று இவ்விருது வழங்கல் நிகழ்வில் வெற்றிபெற்ற ஒரேயொரு ஆடைக் குறியீடாக திகழ்கின்றது. இந்த விருதில் இரண்டாவது முறையாகவும் ஹமீடியா வெள்ளி விருதைப் பெற்றுள்ளது. கடந்த வருடம் ''2010 ஆம் ஆண்டுக்கான சேவைக் குறியீட்டுக்கு'' வெள்ளி விருதைப் பெற்றுக்கொண்டது.

''இலங்கை வாடிக்கையாளர்களுக்கு அசல் ஆண்கள் உடைத் தீர்வுகள் மூலம் சிறப்பான வாடிக்கையாளர் பெறுமதியை வழங்குவதற்கான எமது தொடர்ச்சியான அர்ப்பணிப்பின் அங்கீகாரமாகவும் இது உள்ளது. 100% இலங்கை நிறுவனம் என்ற வகையில், தொடர்ச்சியான இரண்டு ஆண்டுகளாக SLIM குறியீட்டு சிறப்புத்தன்மை விருதைப் பெற்றுள்ள ஒரே ஆடை நிறுவனம் என்பதையிட்டு நாம் பெரு மகிழ்ச்சியடைகிறோம். எமது வாடிக்கையாளர்களின் உதவியில்லாவிடில் நாம் இந்த சாதனையை அடைந்திருக்க முடியாது. எப்போதும் மாறுபட்டுச் செல்லும் வகையிலான அவர்களது தேவைகளே, இந்த சிறப்புமிக்க நிலையை நாம் அடைவதற்கு காரணமாக அமைந்தன'' என ஹமீடியாவின் முகாமைத்துவப் பணிப்பாளர் பௌசுல் ஹமீட் தெரிவித்தார்.

# தமிழ்க் கூட்டமைப்பை தெரிவுக்குழுவில் இணைத்து சர்வதேசத்திடமிருந்து தப்பிக்க அரசு முழு முயற்சி

## அரியநேந்திரன் எம்.பி.கூறுகிறார்



மட்டக்களப்பு,டிசெ.27

பொலிஸ் காணி அதிகாரங்களை வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு வழங்கமுடியாது என்று கூறிக்கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பேச்சுக்கு அழைத்துக்கொண்டிருக்கிறது. சர்வதேசத்தை ஏமாற்ற முனையும் இலங்கை அரசின் நடவடிக்கையே இது என்று மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது அரசுடன் பேச்சுக்குச் சென்றுள்ளதன் அடிப்படையே வடக்கு கிழக்குக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்பதற்கேயாகும் காணி, பொலிஸ் அதிகாரங்கள் இல்லாமல் தமிழ் மக்களுக்கு எவ்வாறு அரசியல் தீர்வை அரசு வழங்கப்போகின்றது என்பது கேள்விக்குறியே.

தற்போது அரசு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பைக்கொண்டு வருவதற்கே இந்தப் பேச்சு என்ற நாடகத்தை நடத்துகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இணைத்து சர்வதேச நெருக்கடியிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ளவே அரசு முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றது.

இன்று தமிழ் மக்களுக்கு தீர்வுத்திட்டங்களை வழங்கி அவர்கள் தமது வாழ்க்கையை மேம்படுத்த உதவுமாறு சர்வதேச சமூகம் இலங்கை அரசுக்குப் பல்வேறு அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றது.

இந்த நிலையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அரசு அவசர அவசரமாக அமைக்க முனைந்துள்ளதுடன், அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அச்சுறுத்தி உள்வாங்க முனைகின்றது. இதற்குத் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒருபோதும் அடிபணியாது.

இந்த நிலையில் காணி, பொலிஸ் அதிகாரங்களைத் தமிழ மக்களுக்கு வழங்குவது தொடர்பில் அரசு சிந்திக்க வேண்டும். அத்துடன் பேச்சு தொடர்பில் அரச அமைச்சர்கள் கருத்துக்கள் வழங்குவதை நிறுத்தி ஆக்கபூர்வமான விடயங்கள் தொடர்பில் சிந்திக்கவேண்டும்.

எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள கோரிக்கைகள் தொடர்பில் அரசு சிந்தித்து செயற்பட்டு தமிழ மக்களின் மனங்களிலுள்ள நம்பிக்கையீனத்தை போக்க வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருக்கோவில் கடலில் மூழ்கி ஒருவர் பலி

அம்பாறை,டிசெ.27

அம்பாறை - திருக்கோவில் கடற்பரப்பில் மூழ்கி ஒருவர் காணாமல் போயுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை அதிகாலை இவர் நீரில் மூழ்கியுள்ளார்.

இந்த நபரின் சடலம் திருக்கோவில் கடற்பரப்பில் கரையொதுங்கிய நிலையில் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

வேல்முருகு மகேந்திரராஜா (வயது- 55) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் திருக்கோவில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## 40 பவுண் தங்க நகை திருட்டு

மருதமுனை, டிசெ. 27

மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவுக்கு முன்பாகவுள்ள வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் கடந்த சனிக்கிழமை திருட்டு நடைபெற்றுள்ளது.

வீட்டிலுள்ளவர்கள் வெளியில் சென்றிருந்தவேளை, வீட்டின் கூரை வழியாக உள்ளே இறங்கிய திருட்டுக் கும்பல் சுமார் 40 பவுண் தங்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளது.

கல்முனைக் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் எம்.ஏ. இனா முல்லா என்பவரின் வீட்டிலேயே இந்தத் திருட்டுச் சம்பவம் நடைபெற்றுள்ளது. (ச)



மட்டக்களப்பில் சிறுவர்கள் தமது உரிமைகளை பாதுகாக்கக் கோரி கடந்த சனிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## பாவனைக்கு உதவாத பொருள்கள் அழிப்பு

கிண்ணியா, டிசெ. 27

கிண்ணியா நகரசபைக் குட்பட்ட வாராந்தப் பொதுச் சந்தையில் பாவனைக்கு உதவாத பொருள்கள் கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான குழுவினரால் அழிக்கப்பட்டுள்ளன.

சுகாதாரம் மற்றும் நோயிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.றிஸ்வி தெரிவித்தார்.

எமது பிரதேசத்தில் டெங்கு ஒழிக்கப்பட்டதைப் போன்றே பாவனைக்கு உதவாத பொருள்களும் ஒழிக்கப்படும். அதற்கான நடவடிக்கையையே நானும் எனது குழுவினரும் மேற்கொண்டு வருகின்றோம்.

கடந்த வாரம் மரக்கறி வகைகள், பாவனைக்கு உதவாத உணவுப்பண்டங்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

அத்துடன், சில வர்த்தகர்களுக்கு எதிராக தண்டப்பணமும் அறவிடப்பட்டுள்ளதோடு, பொலிஸில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது. (ச)

## நிந்தவூர் பிரதம தபாலக தொலைநகல் செயலிழப்பு

### மக்கள் பெரும் சிரமம்

அம்பாறை,டிசெ.27

நிந்தவூர் பிரதம தபாலகத்தில் நீண்டகாலமாகத் தொலைநகல் வசதி இல்லாமலிருந்துவரும் குறைபாடு குறித்து பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த பிரதம தபாலகத்தில் செயற்பட்டு வந்த தொலைநகல் இயந்திரம் செயலிழந்து வருடங்கள் சில கடந்தும், இதனைச் சீரமைக்கவோ, புதிய தொலைநகல் இயந்திரமொன்றை வழங்கவோ தபால் திணைக்களம் இதுவரை முன்வரவில்லை.

இதனால் தொலைநகல் சேவையைப் பெறுவதற்காகத் தபாலகத்துக்கு வரும் பொதுமக்கள் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டிய நிலையுள்ளதுடன் தனியார் தொலைத் தொடர்பு நிலையங்களில் கூடிய கட்டணத்தில் தமது தொலை நகல்களை அனுப்ப வேண்டிய நிலைமையும் நீடித்து வருகின்றது.

நவீன மயத்துடனான சேவைகளை மக்களுக்கு வழங்குவதாகக் கூறும் தபால் திணைக்களம், தபாலகங்களில் தொலைநகல் வசதியை ஏற்படுத்தி மக்களுக்குப் பயனளிப்பதில் அசமந்தம் காட்டுவது ஏன்? எனப் பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

நிந்தவூர் பிரதம தபாலகத்தைப் போன்று அம்பாறை மாவட்டத்தில் பல தபாலகங்களிலும் தொலைநகல் சேவை வழங்குவதற்கான இயந்திரமின்றிய நிலைமையுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயத்தில் கிழக்கு மாகாண பிரதி தபால் மா அதிபர் மற்றும் அம்பாறை மாவட்ட தபால் அத்தியட்சகர் ஆகியோர் காத்திரமான நடவடிக்கை மேற்கொண்டு குறை தீர்க்க முன்வர வேண்டுமெனப் பொது மக்கள் கோருகின்றனர். (ச-30)

## பணிப்பாளர் அலுவலகம் மட்டக்களப்புக்கு மாற்றம்

மட்டக்களப்பு,டிசெ.27

கிழக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் அலுவலகம் அடுத்த ஆண்டு முதல் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு இடமாற்றப்படுவதாக கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி நீர்ப்பாசன அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்துள்ளார்.

தற்போது இது திருகோணமலையில் இயங்கி வருகின்றது. கிழக்கு மாகாணத்தின் சகல மாவட்டங்களையும் சேர்ந்த பொது மக்கள் இலகுவாகத் தமது தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு இந்த அலுவலகம் இடமாற்றப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

திருகோணமலையில் நடைபெற்ற கிழக்கு மாகாணசபையின் அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த அலுவலக இடமாற்றம் தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். (ச)

## அடுத்த ஆண்டு பாதுகாப்புத் தினம் பதுளை நகரில்

காத்தான்குடி,டிசெ.27

அடுத்த ஆண்டின் தேசிய பாதுகாப்பு தினம் பதுளையில் அனுஷ்டிக்கப்படும் என்று இடர்முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

காத்தான்குடியில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற தேசிய பாதுகாப்புத் தின நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டு தேசிய பாதுகாப்புத் தினம் யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சுருக்கிட்ட நிலையில் மாணவி சடலமாக மீட்பு; தந்தை கைது

### சம்மாந்துறையில் சம்பவம்

சம்மாந்துறை,டிசெ.27

சம்மாந்துறை, மல்கம்பிட்டி வீதியில் கைகாட்டி சந்தியிலுள்ள வீடொன்றிலிருந்து கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு மாணவியொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம் தொடர்பாக இந்த மாணவியின் தந்தை மற்றும் மாமா ஆகியோர் சந்தேகத்தின் பேரில் சம்மாந்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். பின்னர் மாணவியின் மாமா விடுதலை செய்யப்பட்டார். பிரேத பரிசோதனைக்காகச் சடலம் அம்பாறை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டு பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ச)

## ரம்புக்கன் ஓயா பாசனத் திட்டம் ஜூன் மாதம் நிறைவடையும்

### நீர்ப்பாசனத் திணைக்களம் தகவல்

அம்பாறை,டிசெ.27

அம்பாறை, மகாஓயா பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் ரம்புக்கன் ஓயா நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டம் எதிர்வரும் ஜூன் மாதம் முடிவடையவுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் கீழ் 2,500 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த அபிவிருத்தித் திட்டம் கடந்த 2007ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இந்தத் திட்டம் போர் காரணமாகச் சில காலம் தடைப்பட்டிருந்தது.

இந்த நிர்மாணப்பணிகளில் 90 வீதமான வேலைகள் நிறைவடைந்துள்ளன. அணைக்கட்டின் வான் கதவுகளின் வேலைகளும் நிறைவடைந்துள்ளன.

இந்தத் திட்டம் மூலம் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் நன்மையடையவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:**
சிலர் உங்களை வெறுப்பேற்றும் வகையில் பேசலாம். குடும்ப உறுப்பினர்கள் இடையே காலை நேரத்தில் சிறு பிரச்சினைகள் தோன்றலாம். இரண்டு நாள்களாகத் தடைப்பட்டிருந்த பணவரவு இன்று வந்து சேரலாம். உங்களின் வேலை ஒன்றுக்காக மற்றவர்களையும் கூட்டிக் கொண்டு அலைவீர்கள்.



**இடபம்:**
எந்தக் காரியத்தையும் ஒன்றுக்கு பலமுறை யோசித்து செய்ய வேண்டும். நண்பர் ஒருவர் மீதுள்ள ஆதங்கத்தை மற்றவர்களிடம் சொல்லிப் புலம்புவீர்கள். திடீரென ஏற்படும் தடை, தாமதங்களால் எரிச்சல் அடையலாம். கிடைக்கும் நேரத்தை வீணடித்துவிட்டு, பின் அவசரமாகச் செயற்படுவீர்கள். கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம்.



**மிதுனம்:**
நண்பர்கள் உங்களிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்றிப் பெருமை சேர்ப்பர். மாலை நேரத்தில் சிலரின் வருகைக்காகக் காத்திருக்கலாம். பழகிய சிலர் மூலம் சில காரியங்களைச் சாதிக்கும் வாய்ப்பு கிடைக்கும். மற்றவர்கள் செலவில் உங்களின் சில தேவைகள் நிறைவேறலாம். சகோதரிகள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம்.



**கடகம்:**
போட்டிகள், எதிர்ப்புகள் விலகி நினைத்ததைச் சாதிப்பீர்கள். பிள்ளைகளின் ஆசைகளை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டுவீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். நீங்கள் குறைவாக மதிப்பிட்ட ஒருவர் மூலம் பெரிய அளவில் உதவி கிடைக்கலாம். மருத்துவ சிகிச்சை தொடர்பான காரியங்களுக்காகக் காத்திருக்க நேரிடலாம்.



**சிங்கம்:**
தொழில் விடயங்களில் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். கடன் பிரச்சினை ஒன்றை தீர்ப்பதில் அக்கறை காட்டுவீர்கள். அரசு பணியாளர்கள் அலைச்சல்களுக்கு ஆட்படலாம். நொடிப் பொழுதில் முடியும் என்று நினைத்த வேலை ஒன்று நீண்ட நேரத்துக்கு இழுத்தடிக்கப்படலாம்.



**கன்னி:**
குடும்ப உறுப்பினர்கள் பற்றிய கவலைகள் உண்டாகலாம். சிலருடன் சேர்ந்து வெளியூர் பயணங்கள் செல்லத் திட்டமிடுவீர்கள். மாலை நேரத்தில் முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். சக ஊழியர்கள் அல்லது நண்பர்கள் சிலர் உங்களை வெறுப்பேற்றும் வகையில் நடந்து கொள்ளலாம்.



**துலாம்:**
உறவினர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். பணிபுரிவோர் முக்கிய நிகழ்ச்சிகள், கூட்டங்களில் கலந்து கொள்ளலாம். கடந்த காலத்தில் கைநழுவிப் போனதாக நினைத்த ஒன்று இப்போது கிடைக்கும் சூழ்நிலை உருவாகும். திட்டமிட்ட வேலை ஒன்று முடியாமல் போனாலும், திட்டமிடாத வேலை ஒன்று முடியலாம்.



**விருச்சிகம்:**
குடும்ப உறுப்பினர் ஒருவரின் பிடிவாதமான செயற்பாடு கண்டு, எரிச்சல் அடைவீர்கள். பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்ற கணிசமான பணத்தைச் செலவு செய்வீர்கள். மற்றவர்க ளுக்காக நீங்கள் பொறுப்பேற்று சில வேலைகளைச் செய்யலாம். வயிறு, வாயு உபாதைகளால் அவதிப்படலாம்.



**தனுசு:**
புத்துணர்ச்சி, தெம்புடன் செயற்படுவீர்கள். போட்டி, பந்தயங்களில் வெற்றி காண்பீர்கள். மனைவி வழி உறவினர்களிடையே ஏற்பட்ட மனஸ்தாபம் தீரும். குறைந்த ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த வேலை ஒன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம். நாளை சந்திக்க நினைத்த ஒருவரை இன்றே சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கலாம். ஆதாயமான நாள்.



**மகரம்:**
விளையாட்டாகப் பேசிய சில விடயங்கள் விபரீதமாக அமையலாம். நீண்ட நாள்களாகப் பிற்போட்ட வேலை ஒன்றை இன்றே முடிக்க வேண்டிய அவசிய சூழ்நிலை உருவாகலாம். பிறரை நம்பி எந்தக் காரியங்களிலும் இறங்க வேண்டாம். நீங்கள் நல்லதற்காக சில விடயங்களைச் சொன்னாலும், சிலர் அதைத் தவறாகப் புரிந்து கொள்ளலாம்.



**கும்பம்:**
மற்றவர்கள் வியக்கும் காரியம் ஒன்றைச் செய்வீர்கள். வியாபாரிகள் கணிசமான லாபத்தைப் பெறலாம். வெளிநாட்டுத் தொடர்புகளால் அனுகூலம் உண்டு. பெண்கள் வழியில் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். நண்பர்களுக்காகச் செலவு செய்வீர்கள். உறவினர் ஒருவருக்குத் தெரிந்தவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம்.



**மீனம்:**
வீண் வம்பு விவகாரங்களில் சிக்காமல், எதிலும் சாமர்த்தியமாகத் தப்பித்துக் கொள்வீர்கள். முக்கியமான வேலை ஒன்றுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். நீண்டநாள்களாக மனதில் போட்டுப் புதைத்து வைத்திருந்த ரகசியம் ஒன்றை மற்றவர்களிடம் சொல்வீர்கள்.

# ஆண்டுக... ஆனபே... ஆறவி... ஆழியின் ...

■ அரியகுமார்

2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி அதிகாலை 6.29 மணிக்கு இந்தோனேசியாவிலுள்ள சுமத்திராத் தீவின் வடமேற்குக் கரையோரத்தை அண்டிய இந்து சமுத்திரத்தில் இடம்பெற்ற நடுக்கம் ஆழிப்பபேரலையாகி இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், மலைதீவு, மியான்மார், தாய்லாந்து, மலேசியா முதலான ஆசிய நாடுகளில் உயிரிழப்புக்களையும், சொத்து அழிவுகளையும் ஏற்படுத்தியது.

இலங்கையில் வடக்கு, கிழக்கு, தெற்கு, தென் மேற்குக் கரையோரங்கள் ஆழிப் பேரலையால் பேரழிவைச் சந்தித்தன. இலங்கையில் இப் பேரழிவைச் சந்தித்த மாவட்டங்கள் அரசின தும், அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவி யுடனும் மீண்டெழுந்து புதிய கட்டுமானங் களுடன் மக்களின் வாழ்க்கையும் பொருளா தார வளர்ச்சியும் வழமைக்குத் திரும்பியுள்ளன.

ஆனால் அம்மக்கள் இந்தப் பேரனத்தத்தால் தாம் இழந்த தமது உறவுகளை மட்டும் திரும்பப் பெற முடியாதவர்களாகவும், பார்க்க முடியாதவர்களாகவும் தவிக்கின்றனர்.

### மாற்றம் இன்னும் இல்லை

ஆனால், யாழ். மாவட்டத்திலுள்ள வடமராட்சி கிழக்குப்பிரதேசத்தில் ஆழிப் பேரலை பேரனத் தத்தாலும் மூன்று தசாப்த போராலும் பாதிக் கப்பட்ட மக்களின் வாழ்க்கையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

வடமராட்சி கிழக்கில் மணற்காடு தொடக்கம் சுண்டிக்குளம் வரையுள்ள 32 மைல்கள் நீளமான கடற்கரைப் பிரதேசத்தில் அமைந்திருந்த 15 கரையோரக் கிராமங்கள் ஆழிப்பேரலையால் அடித்துச் செல்லப்பட்டன. 2 ஆயிரத்து 946 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 701 பேர் இதனால் பாதிப்படைந்தார்கள். இந்த அனர்த்தத்தால் 1038 பேர் மரணமடைந்துள்ளார்கள். இவர்களில் 604 பேர் பெண்களாவர். சுமார் 150 மாணவர்கள் இவ் அனர்த்தத்தால் காவு கொள்ளப்பட்டனர். உடுத்துறை மகா வித்தியாலயம் மட்டும் 55 மாணவர்களை இந்த அனர்த்தத்தால் இழக்க நேரிட்டது. 59 குடும்பங்களில் ஒருவர் கூட தப்பாமல் முழு அங்கத்தவருமே இறந்தனர்.


கரையோரப் பிரதேசத்திலிருந்த 2 ஆயிரத்து 721 வீடுகளும் ஆழிப்பேரலையால் அடித்துச் செல்லப்பட்டதையடுத்து அந்த மக்களின் வாழ்க்கை அவர்களுக்கென தற்காலிகமாக அமைக்கப்பட்ட சுமார் 19 இடைத்தங்கல் குடியிருப்புக்களிலேயே பல வருடங்களாக கழிந்தன.

### இழுபறி நிலையில் வருடங்கள் கழிந்தன

அவர்களுக்கான வீடுகளை அமைத்துக் கொடுக்க அரச சார்பற்ற நிறுவனங்களான 'கியூடெக் - கரித்தாஸ்', சொலிடார், சேவா லங்கா, ஆஸ்திரேலியா செஞ்சிலுவைச் சங்கம், போன்ற நிறுவனங்கள் முன்வந்த போதிலும் வீடுகளை அமைப்பதற்கான அரச காணிகளை அதிகாரிகள் பகிர்ந்தளிப்பதில் காட்டிய தாமதத்தால் வீடு அமைப்ப தில் இழுபறி நிலையே பல வருடங்களாக நீடித்தது.

முன்னர் மக்கள் கரையோரத்தை அண்டிய சொந்தக் காணிகளிலேயே தமது குடியிருப்புக்களை அமைத்து வாழ்ந்தார்கள். ஆழிப் பேரலைக்குப் பின்னர் கடற்கரையிலிருந்து 300 மீற்றர் கரைக்கு அப்பாலுள்ள அரச காணிகளிலேயே அவர்களுக்கான வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய தேவை இருந்தது. இந்த நிலையிலும் கியூடெக் - கரித்தாஸ் நிறுவனம் மட்டும் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் ஒரு தொகுதி வீட்டை அமைத்துக் கையளித்தது.

இவ்வாறு வீடமைப்புப் பணி இழுபறி நிலையிலிருந்த போதுதான். அந்த மக்களின் வாழ்க்கையில் மீண்டும் ஓர் பேரிடி வீழ்ந்தது. 2006 ஆம் ஆண்டு யுத்தம் உக்கிரமடைந்ததைத் தொடர்ந்து மீண்டும் ஓர் இடப்பெயர்வை அந்தப் பகுதி மக்கள் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.



நாகர்கோயில் மேற்கு, நாகர் கோயில் கிழக்கு, நாகர் கோயில் தெற்கு, செம்பியன் பற்று வடக்கு, செம்பியன்பற்று தெற்கு, மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, முள்ளியான், கோவில், சுண்டிக்குளம் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக வேண்டிய நிலை ஏற்பட்டது. சுமார் மூன்று தசாப்தகால அகதி வாழ்க்கைக்குப் பின்னர்மீண்டும் அந்த மக்கள் தற்போது செம்பியன் பற்று தொடக்கம் கேவில் வரையுள்ள 9 கிராம சேவையாளர் பிரிவுகளில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள போதிலும், அவர்களது அடிப்படை வசதிகளில் மிக முக்கியமானதாகக் கருதப்படும் வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படாத நிலையே காணப்படுகின்றது.

### குளிரில் வாடும் குழந்தைகள்

தகரங்களாலும் ஓலையாலும் தறப்பாளாலும் அமைக்கப்பட்ட எவ்வித பாதுகாப்பும் இல்லாத குடிசைகளிலேயே அவர்களின் வாழ்க்கை தொடர்கின்றது. ஒரு சில நாள்களுக்கு முன்னர் பெய்த மழையாலும் வீசிய காற்றாலும் இந்த மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

வீசிய கடுங்காற்றால் குடிசைகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன. குடிசைகளுக்குள் மழை வெள்ளம் புகுந்ததால் அவர்கள் குழந்தைகளுடன் குடிசையை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. நிரந்தர வீடுகள் இன்றி நிர்க்கதியாக நிற்கும் அவல நிலைக்கு முடிவு கிடைக்காதா என்பதே அந்த மக்களின் கேள்வியாகவுள்ளது.

வீட்டுத் தேவைகள் பற்றி அரச அதிகாரிகள் பதிவுகளை மேற்கொள்ளும் போது கூட கட்டுப்பாடுகள் போடப்படுவதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

ஆழிப்பேரலைக்குப் பின்னர் நாட்டின்

# கள் ஏழு
# பாதும்
# ில்லை
# அவலம்

ஒரு சில நாள்களுக்கு முன்னர் பெய்த மழையாலும் வீசிய காற்றாலும் இந்த மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. வீசிய கடுங்காற்றால் குடிசைகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன. குடிசைகளுக்குள் மழை வெள்ளம் புகுந்ததால் அவர்கள் குழந்தைகளுடன் குடிசையை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது.



அனைத்துப் பகுதியிலும், அழிவடைந்தோருக்கு எவ்வித வேறுபாடுமின்றி அனைவருக்கும் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டதைப் போன்று ஆழிப் பேரலையையும் யுத்தத்தையும் கடந்த முப்பது வருடங்களாக மாறிமாறிச் சந்தித்த வடமராட்சி கிழக்கு மக்கள் இதுவரை நஷ்ட ஈடோ, வீடுகளோ வழங்கப்படாத நிலையில் அவர்கள் அனைவருக்கும் வீடுகள் அமைத்துக் கொடுக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரி நிற்கின் றார்கள்.

### ஆசிரியர்கள் அவலம்

அந்தப் பகுதியிலுள்ள பாடசாலைகள் 'என்றிப்' திட்டத்திலும், 'யூனிசெப்' நிறுவனத்தின் உதவியுடனும் மீள் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இயங்கத் தொடங்கியுள்ள போதிலும், அங்குள்ள பாடசாலைகளில் கடமை யாற்றி வரும் வெளியூர் ஆசிரியர் தங்கி நின்று கடமை யாற்றுவதற்கான வசதிகள் இல்லாமையால், அவர் கள் தினமும் நீண்ட தூரம் பயணம் செய்து பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

ஆழிப்பேரலைக்கு முன்னர் வெளியூர் ஆசிரியர்கள் அங்குள்ள மக்களின் வீடுகளிலேயே தங்கி நின்று தமது சேவையை நிறைவாகவும் மகிழ்ச்சியாகவும் புரிந்து வந்தார்கள்.


'நிக்கொட்' திட்டத்தின் கீழ் 2003 ஆம் ஆண்டு மருதங்கேணியிலுள்ள அரசினர் வைத்தியசாலை, சுமார் 12.3 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு, புதிய விடுதி வசதிகளும் அமைக்கப்பட்டன. தற்போது அந்த வைத்தியசாலை சேதமடைந்திருப்பதால் வெளிநோயாளர் பிரிவு மட்டுமே இயங்கி வருகின்றது. கடும் சுகயீன முற்றிருக்கும் நோயாளர்களும், பிரசவத் தாய்மாரும் அம்புலன்ஸ் மூலம் சுமார் 18 மைல் தொலைவிலுள்ள பருத்தித்துறை ஆதார ஸ்வைத்தியசாலைக்கே அனுப்பிவைக்கப்படுகின்றனர். முன்னர் அங்கிருந்த வைத்தியருக்கான விடுதி, ஆண், பெண் நோயாளர்களுக்கான விடுதிகள், பிரசவ விடுதி என்பன சேதமடைந்தே காணப்படுகின்றன.

### இருட்டில் வாழும் மக்கள்

மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, ஆகிய இடங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதும், மின்சாரம் இன்னமும் அங்கு சென்றடையவில்லை.

பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய டிப்போக்களிலிருந்து இ.போ.ச.பஸ் சேவைகளும் மற்றும் தனியார் பஸ் சேவைகளும் நடத்தப்படுகின்ற போதிலும் வீதிகள் மோசமான நிலையில் காணப்படுவதால் போக்குவரத்திலும் தளம்பல் நிலைமை காணப்படுகின்றது.

பருத்தித்துறை - மருதங்கேணி வீதியில் அம்பன் தொடக்கம் செம்பியன்பற்று வரையுள்ள வீதி மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது. 'என்றிப்' திட்டத்தின் கீழ் மருதங்கேணிப் பகுதியில் பல வீதிகளுக்கு புனரமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்ட போதிலும் அந்த வேலைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. ஆழிப்பேரலையாலும் மூன்று தசாப்த போராலும் பல இடப்பெயர்வுகளையும், உயிரிழப்புக்களையும், சொத்து அழிவுகளையும் சந்தித்த வடமராட்சி கிழக்கு மக்களின் வாழ்வு, நம்பிக்கையோடு கட்டியொழுப்பப்படுவதற்கு அனைத்துத் தரப்பினரும் எப்போது உதவ முன்வருவார்கள்?



## பதவி மோகம்



ஒரு பெரிய காடு. அதில் பல விதமான மிருகங்கள். அந்தக் காட்டுக்கு ஒரு சிங்கம்தான் ராஜா. எப்போதும் காட்டுக்கு அதுதானே ராஜா.

ஒரு பெரிய யானைக்கு இது பொறுக்கவில்லை. ''என்ன இது? எப்போது பார்த்தாலும் காட்டில் சிங்கத்துக்கே ராஜா பதவி கிடைக்கிறது. நான் எவ்வளவு பலசாலியாக இருக்கிறேன். அப்படியிருந்தும் எனக்கு அந்தப் பதவி கிடைக்கவில்லையே?'' என்று தனக்குள் பொருமிக் கொண்டிருந்தது.

'ராஜா' பதவியை நினைத்து மிகுந்த ஏக்கம் அந்த யானைக்கு, அவ்வளவுக்கு அந்தப் பதவிமேல் மோகம் ஏற்பட்டிருந்தது.

இந்தச் சமயம் பார்த்து ஒரு குள்ளநரிக் கூட்டம் அதைத் தேடிக்கொண்டு வந்தது. ''ஐயா! பெரியவரே! நீங்கள் இந்தக் காட்டுக்கு ராஜாவாக இருக்க ஆசைப்படுகிறீர்கள். அதில் ஒன்றும் தப்பில்லை. ஆனால் அதற்கு முன்னால் நீங்கள் எங்கள் கூட்டத்துக்கு கொஞ்சநாள் ராஜாவாக இருந்து பாருங்கள், உங்களுக்கு ஒரு பயிற்சியாகவும் இருக்கும்''. என்றன அந்தக் குள்ளநரிக் கூட்டம்.

இதைக்கேட்டவுடனே யானைக்கு சந்தோஷம் தாங்கமுடியவில்லை. அதுதான் எப்ப எப்பவென்று பதவிக்காகக் காத்துக் கொண்டிருந்ததே. இருந்தாலும் கொஞ்சம் திமிராக ''நீங்கள் எல்லாம் இவ்வள்வு தூரம் என்னைத் தேடி வந்து கேட்டுக்கொண்டதனால் உங்கள் கூட்டத்துக்கு ராஜாவாக இருக்க சம்மதிக்கிறேன்'' என்றது.

உடனே அந்த யானை ராஜநடை போட ஆரம்பித்தது. யானை சாதாரணமாக நடந்தாலே எப்படியிருக்கும். அதுவே ராஜநடை போட ஆரம்பித்தால் எப்படி இருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்.

யானை முன்னால் கம்பீரமாக நடந்து போய்க்கொண்டிருந்தது. தலைவர் என்பதால் குள்ளநரிகள் எல்லாம் மிகவும் அடக்கமாக அதன் பின்னால் அணிவகுத்துப் போய்க்கொண்டிருந்தன.

''ராஜா வாழ்க! மன்னர் வாழ்க!'' என்று கோஷம் எழுப்ப யானைக்குத் தலைகால் புரியவில்லை. அவ்வளவு சந்தோஷம். அந்த யானைக்கு செருக்கு, ஆணவம் ஏற்பட்டுவிட்டது. அதன்பின் அது தரையைப் பார்க்குமா? நிமிர்ந்து நடக்க ஆரம்பித்துவிட்டது.தரையைப் பார்ப்பதே இல்லை.

அப்படிப் போய்க் கொண்டிருந்தபோது ஒரு சதுப்பு நிலத்தில் திடீரென்று காலை வைத்து விட்டது. அவ்வளவுதான் கால் உள்ளே போய்விட்டது. இன்னொரு காலை எடுத்து வைத்தது. அதுவும் உள்ளே போய்விட்டது. அந்த இரண்டு கால்களையும் எடுப்பதற்காக மற்றைய இரண்டு கால்களையும் அழுத்தியது. அவையும் உள்ளே போய்விட்டன. இப்போது நான்கு கால்களும் வசமாக சேற்றில் அழுந்திவிட்டன. எடுக்கமுடியவில்லை.

குள்ளநரிகள் அதைச் சுற்றிச் சுற்றி வந்தன. சில நரிகள் ஆட ஆரம்பித்தன. யானை 'தலைவர், நான் தவித்துக்கொண்டிருக்கிறேன். தொண்டர்கள் சுற்றி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்' என்று யோசித்தது. பின்னர் ''தொண்டர்களே! தலைவர் நான் தவித்துக் கொண்டிருப்பது உங்கள் கண்ணுக்குத் தெரியவில்லையா? உடனே உங்கள் தலைவரைக் காப்பாற்றுங்கள்'' என்று கத்தியது யானை.


குள்ளநரிகளில் ஒன்று முன்னால் வந்து யானையைப் பார்த்து ''தலைவரே! எங்களுக்கு நீண்ட நாளாக ஓர் ஆசை; அந்த ஆசையை நிறைவேற்றத்தான் உங்களை எங்கள் தலைவராக ஏற்றுக்கொண்டோம்'' என்று சொன்னது. என்ன ஆசை? என்று யானை கேட்டது. ''யானைக் கறி சாப்பிட வேண்டும் என்று எங்களுக்கு ஆசை'' என்றது நரிக்கூட்டம்.

இதைக் கேட்டவுடனேயே யானை இறந்துவிட்டது. உடனே நரிகள் எல்லாம் அதன்மேல் ஏறிக் குதற ஆரம்பித்தன.

பதவிமேல் இருந்த பேராசை அந்தப் பலசாலியான யானையை மாட்டிவிட்டதைப் பார்த்தீர்களா?

ஆகவே மனிதர்களும் பதவிமேல் மோகம் கொள்ளக்கூடாது. அது விபரீதமாக முடிந்துவிடும்.

**கோ.சுவாமிநாதன்**



அளவெட்டி– மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இந்த ஆண்டில் அதிக வியாபாரத்தை மேற்கொண்டதால் சிறந்த கிளை முகாமையாளராகத் தெரிவு செய்யப்பட்ட 6 பணியாளர்கள் பாராட்டிப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். பாராட்டைப் பெற்ற கிளை முகாமையாளர்களுடன் சங்கத் தலைவர் எஸ்.சிவயோகநாதன், பொது முகாமையாளர் எஸ்.இராஜமோகன் ஆகியோர் உள்ளனர். (26)

# மாதம் ஒரு புத்தகத்தை வாங்கி, பெரியவர்கள் படித்தால் பிள்ளைகளிடமும் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த முடியும்

**கல்விப் பணிப்பாளர் முத்து . இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு**

சுன்னாகம்,டிசெ.27

வாசிப்புப் பழக்கம் ஒவ்வொரு வீடுகளில் இருந்தும் ஆரம்பிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் மாதம் ஒரு புத்தகத்தையேனும் வாங்கி பெரியவர்கள் படிப்பார்களானால் பிள்ளைகளிடத்தில் இலகுவாக வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தலாம் என்று வடமாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர் முத்து.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

சுன்னாகம் பொது நூலகத்தின் வாசிப்பு மாத நிறைவு நாள் நிகழ்வுகள் வலி.தெற்கு பிரதேச சபைத் தவிசாளர் தி.பிரகாஷ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே முத்து இராதாகிருஷ்ணன் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்:- வாசிப்பதற்கு நேரம் இல்லையென்று பலரும் சொல்கிறார்கள். ஆனால் ஏனைய செயற்பாடுகளுக்கெல்லாம் நேரம் ஒதுக்க அவர்களால் முடிகிறது. நாம் உடைகள், அலங்காரப் பொருள்களை வாங்குவதற்கு அதிக பணத்தைச் செலவு செய்கிறோம். அதனோடு சேர்த்து நூல்களையும் வாங்கவும் சிறிதளவு பணத்தைச் செலவு செய்ய வேண்டும். மாதம் ஒரு நூலை வாங்கிப் பெரியவர்கள் வாசித்தால் சிறுவர்கள் அதனைப் பின்பற்றுவார்கள். எம்மிடம் அவ்வாறுதான் வாசிப்பு பழக்கம் ஏற்பட்டது.

பிள்ளைகளுக்கு படிபடிஎனத் தொடர்ந்து அறிவுறுத்தல்களை வழங்குகின்றோம். அறிவுறுத்தல் கிடைக்காதபோது பிள்ளைகள் செயற்பட முடியாமற் போகின்றனர். வாசிப்பை ஏற்படுத்தினால் பிள்ளைகள் சுயமாகவே இயங்கவும், அதற்கேற்ப சிந்திக்கவும் வழியேற்படும். நூல்களில் உள்ள எழுத்துக்கள் வாசிப்பின் மூலம் அர்த்தங்களாக விரிவடைகின்றன. இவை கற்பனைத்திறனை வளர்க்கின்றன. கற்பனைத்திறன் சிந்திக்கும் ஆற்றலை வளர்க்கின்றது. இவ்வாற்றல் நல்லது, கெட்டவற்றைப் பகுத்தறியும் நற்பிரஜையை உருவாக்குகிறது என்றார்.

ஓவிய, சிற்பக் கலைஞர் பொ.பசுபதி, சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் க.இராஜமனோகரன் ஆகியோரும் இந்நிகழ்வில் உரையாற்றினர். இந்து சாதனம் பத்திரிகை ஆசிரியர் மூதறிஞர் சிற்பி சிவசரவணபவன் சிறப்புரையாற்றினார். (எ-38)

# இளைய சமூகம் நட்புறவை வளர்ப்பதன் ஊடாக அமைதியான நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும்

**தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் கருத்து**

நாவற்குழி,டிசெ.27

இளைய சமூகத்தின் நட்புறவை வளர்ப்பதன் ஊடாக அமைதியான நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும்.

இளைஞர் நட்புறவுப் பாலச் செயற்பாடுகள் இந்த நோக்கத்துடனேயே தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் ஒழுங்கமைக்கப்பட்டு வருகின்றன என தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் ரி.ஈஸ்வரராஜா தெரிவித்தார்.

இளைஞர் நட்புறவுப் பாலச் செயற்பாட்டின் மூலம் யாழ்ப்பாணத்திலிருந்து 46 இளைஞர்கள் காலி மாவட்டத்தின் ஹிக்கடுவ பிரதேச செயலர் பிரிவின் இயன்கொட கிராமத்துக்குச் சென்றபோது அங்கு நடைபெற்ற வரவேற்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ரி.ஈஸ்வரராஜா இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

"இளைஞர்கள் ஒவ்வொரு நாட்டுக்கும் வளம் தரும் ஒரு சனத்தொகையாகும். இவர்களைப் பொதுச் சமூகத்தில் அமைதியும் நல்லெண்ணமும் மிக்கவர்களாக உருவாக்குவதில் உலகநாடுகளின் அரசுகள் ஈடுபட்டு வருகின்றன.

இந்த நோக்குடனேயே தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தை இலங்கை அரசு ஓர் அரச துறை நிறுவனமாக உருவாக்கியுள்ளது. இளைஞர் விவகார அபிவிருத்தி அமைச்சும் தனி ஒரு கபினெட் அந்தஸ்துள்ள அமைச்சாக இயங்கி வருகின்றது.

இத்தகைய ஒழுங்கமைந்த ஒரு அமைப்பின் கீழ் நாடெங்குமுள்ள இளைஞர்கள் நல்வழிப்படுத்தப்படுகின்றனர். எமது இளைஞர் சேவைகள் அதிகாரிகள் பிரதேச செயலர்களின் ஒத்துழைப்பைப் பெற்று கிராமங்கள் தோறும் இளைஞர் கழகங்களை உருவாக்கி வருகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் இத்தகைய இளைஞர் கழகங்கள் சிலவற்றிலிருந்து தெரிவு செய்யப்பட்ட இளைஞர்கள் தான் வடக்கின் அந்தத்திலிருந்து தெற்கின் இறுதி எல்லையாக உள்ள இயன்தொட கிராமத்துக்கு வந்துள்ளனர்.

இளைய சமூகத்தினர் நட்புறவை வளர்ப்பதன் ஊடாக அமைதியான நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். இளைஞர் நட்புறவுப் பாலச் செயற்பாடுகள் இந்த நோக்கத்துடனேயே தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் ஒழுங்கமைக்கப்பட்டு வருகின்றன. மொழி தெரியாவிட்டாலும் கூட மனித நேயமென்ற அன்பு மொழி கொண்டு பழக வேண்டும். (எ-121)

# மாற்றுவலுவுள்ளோரின் தொழில் திறன்களை வளர்க்க வழி செய்யும் செயலமர்வுகள் காலத்தின் தேவையாகும்

**'இதம்' உளவள நிறுவனத்தின் இணைப்பாளர் கூறுகிறார்**

நாவற்குழி,டிசெ.27

மாற்றுவலுவுள்ளோரின் தொழில்திறன்களை வளர்க்க வழிவகை செய்யும் செயலமர்வுகள் காலத்தின் தேவையாகும்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் அரச துறையுடன் ஒன்றிணைந்து இந்த விடயம் சம்பந்தமாக கைகோர்த்து செயற்படுவது மகிழ்ச்சிக்குரியதாகும் என இதம் உளவள நிறுவனத்தின் இணைப்பாளர் த.சயந்தன் தெரிவித்தார்.

சாவகச்சேரி சிவன்கோயில் கலாசார மண்டபத்தில் அண்மையில் 15 வயது முதல் 35 வயது வரையிலான மாற்று வலுவுள்ளோருக்காக நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே சயந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் ''மாற்றுவலுவுள்ளோர் தொடர்பாக உலகளாவிய பார்வையொன்று ஏற்பட்டு வருகின்றது. ஊடகங்களும் இவர்கள் குறித்தும், இவர்களது தேவைகள் குறித்தும் மிகுந்த அக்கறை செலுத்தி வருவதைக் காணமுடிகின்றது.

இவர்கள் குறித்த விவரணச் சித்திரங்கள் கூட, பொதுமக்களின் சமூகப் பொறுப்புணர்வை ஏற்படுத்தும் விதத்தில் வெளிவருகின்றன.

இன்று மாற்றுவலுவுள்ளோரில் தொழில் திறனுள்ள வயதுப் பிரிவினருக்கான முழுநாள் செயலமர்வை நடத்துகின்றோம்.

எமது அரச சார்பற்ற நிறுவனங்களின் வேலைத்திட்டங்களுக்கு யாழ்.மாவட்ட அரச அதிபரும், வடமாகாண சமூக சேவைகள் திணைக்களமும் ஒத்துழைப்பை வழங்கிவருகிறது.

மாற்றுவலுவுள்ளோருக்குத் தன்னம்பிக்கையை அதிகரிக்கச் செய்து தொழில் திறனுள்ளவர்களாக வருமானம் உழைப்பவர்களாக மாற்றவேண்டும். இவ்வதிகார சபையினர். தொழிற் பயிற்சிகளை உங்களுக்கேற்ற பொருத்தமான விதத்தில் வழங்கத்தயாராக உள்ளார்கள்.

எமது இதம் உளவள நிறுவனமும், யாழ்.மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பிரதேச செயலர் பிரிவுகளும் தற்போது மாற்றுவலுவுள்ளோர் தொடர்பான புனர்வாழ்வுப் பணிகளிலும் ஈடுபட்டு வருகிறன. மாற்றுவலுவுள்ளோரைச் சமூகத்தின் பொருளாதார வளம் ஒன்றாகக் கருதும் வேலைத்திட்டங்களில் இணைக்கும் பணியையும் நாம் செய்து வருகின்றோம் என்றார். (எ-121)

# வேலணை பிரதேச சபைக்கு புதிய செயலர் நியமனம்

யாழ்ப்பாணம்,டிசெ.27

வேலணைப் பிரதேச சபையின் செயலாளராக க.செ.ரமேஸ் கடந்த வாரம் முதல் நியமனம் பெற்றுள்ளார்.

இவர் வேலணை பிரதேச சபையின் உள்ளூராட்சி உதவியாளராகவும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை உதவி உத்தியோகத்தராகவும் கடமையாற்றியுள்ளார்.

வேலணை பிரதேச சபையின் செயலாளராகக் கடமையாற்றிய கே.தவராஜா ஓய்வு பெற்றதை அடுத்து க.செ. ரமேஸ் சபையின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (எ-7)

# தேசிய கலை இலக்கிய போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

**கவிதை ஆக்கம்**

ரேணுகா ரவீந்திரன்- முதலாமிடம் (பருத்தித்துறை), கஜவதனி பொன்ராசா-இரண்டாமிடம் (தெல்லிப்பழை), மேரி றொயிண்டாயூட் அலிஸ்ரன்-மூன்றாமிடம் (ஊர்காவற்றுறை)

**கவிதைகள் பாடும் போட்டி**

நொயிலின் சுரேஷ்குமார்- முதலாமிடம் (ஊர்காவற் றுறை).

**பாட்டு நயத்தல்**

தர்சிகா இராமகிருஷ்ணன்- முதலாமிடம் (நல்லூர்), தேனுஷா லோகேஸ்வரன்- இரண்டாமிடம் (கரவெட்டி), விதுசா கிருபாகரன்- மூன்றாமிடம் (சங்கானை).

**திறந்த பிரிவு**

திருமதி ஆரபி சிவகுகன்- முதலாமிடம் (நல்லூர்), க.நல்லதம்பி-இரண்டாமிடம் (சங்கானை), ச.சிவநேசன்- மூன்றாமிடம் (பருத்தித்துறை).

**நாட்டார் கலை கற்றல்**

தங்கலீலா கந்தசாமி- முதலாமிடம் (கரவெட்டி), சி.சிவதாசன்- இரண்டாமிடம் (நல்லூர்).

**இலக்கிய விமர்சனம்**

சிவகுமார் பிரசாந்- முதலாமிடம் (வேலணை), இராஜினிதேவி சிவலிங்கம்-இரண்டாமிடம் (கோப்பாய்), வே.பிரசில்லா ராதிகா- மூன்றாமிடம் (உடுவில்).

**இலக்கிய விமர்சனம் (ஆங்கிலம்)**

வெற்றிவேல் சக்திவேல்- முதலாமிடம் (தெல்லிப்பழை).

**சிறுகதை**

ரஞ்சனா நவரத்தினம்- முதலாமிடம் (சாவகச்சேரி), இராஜினிதேவி சிவலிங்கம்- இரண்டாமிடம் (கோப்பாய்), பேரின்பகுமார் ஸ்ரீலேக்கா- மூன்றாமிடம் (காரைநகர்).

**சிறுகதை (ஆங்கிலம்)**

பாலசுப்பிரமணியஐயர் பாலச்சந்திரன்- முதலாமிடம் (உடுவில்).

**பாடல் ஆக்கம்**

நேதிகா அருளானந்தம்- முதலாமிடம் (உடுவில்), ரஞ்சனா நவரத் தினம்- இரண்டா மிடம் (சாவகச்சேரி), மாலாதேவி மதிவதனன்-மூன்றாமிடம் (தெல்லிப்பழை).

**பாடல் ஆக்கம் (ஆங்கிலம்)**

வயிரமுத்து சின்னப்பா- முதலாமிடம் (சாவகச்சேரி), வைரமுத்து சுந்தரேசன் -இரண்டாமிடம் (பருத்தித்துறை), கலைச்செல்வன் பகீரதி- மூன்றாமிடம் (கரவெட்டி).

(முற்றும்)

# இராஜ தந்திர நகர்வில் அமெரிக்கா...

போரின் இறுதிக் கட்டத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் மோசமான மனித உரிமை மீறல்கள் பற்றிய குற்றச் சாட்டுகளுக்கு நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் முழுமையான பதில் அளிக்கப்படவில்லை என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் விக்ரோரியா நூலன்ட் அம்மையார் தெரிவித்தார்.

வோஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய நூலன்ட் அம்மையார் தெரிவித்ததாவது:

''நல்லிணக்க ஆணைக்குழு, ஊடக சுதந்திரம், நல்லிணக்கம், அதிகாரப் பகிர்வு, படைக்குறைப்பு, காணாமல் போதல்கள் போன்ற விடயங்களில் சில உருப்படியான பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. அதே வேளை, நாங்கள் முழுமையான அறிக்கையை ஆய்வு செய்தபோது போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற மோசமான மனித உரிமை மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுகளுக்கு இந்த அறிக்கை முழுமையாகப் பதிலளிக்கவில்லை என்பதையும் நாம் கூறியே ஆக வேண்டும்'' என்றார். வன்னியில் இறுதிப் போரில் மரணத்தின் விளிம்பில் நின்று கொண்டிருந்தவர்களை அமெரிக்க அரசு காப்பாற்றும் என்று தமிழர்கள் நம்பினார்கள். ஆனால் அது நடைபெறவில்லை. போர்க் குற்றவாளிகளுக்குத் தண்டனையைப் பெற்றுத்தர அமெரிக்கா துரிதமாக நடவடிக்கை எடுக்குமென்று மீண்டும் தமிழர்கள் அமெரிக்காவை நம்பினார்கள். காலம் செல்லச்செல்லக் குற்றவாளிகளைத் தப்பிக்க வைக்கும் செயற்பாடுகளே அதிகளவில் இடம்பெறுகின்றன. இலங்கை அரசுக்கு உள்ளளவில் அமெரிக்கா போன்ற வல்லரசுகள் உறுதுணையாக இருக்கிறன. அமெரிக்கா இலங்கைக்குச் சமீபத்தில் இராணுவ உதவியாக இரண்டு பெல் 412 ரக உலங்கு வானூர்திகளைக் கொடுத்தது. வன்னிப் பேரவலத்துக்குக் காரணமானவர் களை இனம்கண்டு தண்டனை வழங்கும் வரையில் இலங்கை அரசுடன் எவ்வித இராணுவ ஒப்பந்தங்களையும் செய்யப்போவதில்லை என்று தெரிவித்த அமெரிக்க அரசு உலங்கு வானூர்திகளை வழங்கியுள்ள நிகழ்வு விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு மேற்கொண்ட இறுதிப் போரில் அவ்வரசுக்கு அமெரிக்கா உதவிகளைச் செய்தது என்பதை வெளிப்படுத்தி நிற்கிறது.

ஒபாமா அரசு இலங்கை அரசுக்கு எதிராக இருக்கும் எனத் தமிழர்கள் நம்பினார்கள். ஆனால் அது கைகூடவில்லை. விடுதலைப் புலிகளுடன் பேச்சு ஆரம்பிக்கும் காலத்தில் புஷ் தலைமையிலான அரசும் இலங்கை அரசின் பக்கமே ஆதரவை அளித்து வந்ததென்று இப்போது செய்திகள் கசிந்துள்ளன.

இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் றொபேட் பிளேக் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை நம்பகத்தன்மை வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கூறியிருந்தார். தவறினால் சுதந்திரமான பொறிமுறை குறித்த அழுத்தங்களைச் சந்திக்க நேரிடும் என்றும் அவர் கூறியிருந்தார். பேச்சளவில் வீரத்தைக் காட்டும் அமெரிக்கா செயலளவில்தான் இலங்கையில் கால்வைக்கும் நடவடிக்கைகளில் இறங்கி இருக்கிறது.

ஒட்டுசுட்டான், முழங்காவில், பூநகரி மற்றும் பளை போன்ற பகுதிகளில் போரால் சேதமடைந்த மருத்துவமனைகளைப் புனரமைப்பதற்கு முன்வந்துள்ளது. மருத்துவமனைப் புனரமைப்பு என்ற பெயரில் முதலில் கால் வைப்பதும் பின்னர் இராணுவ ரீதியாகத் தலையிடுவதும் தான் அமெரிக்காவின் வழக்கம். அது இங்கேயும் வெகு விரைவில் இடம்பெறவுள்ளது. முதன் முதலாக அமெரிக்கா இந்தப் பகுதிகளில் தான் கால் வைக்கப் போகிறது என்றில்லை. அவர்கள் ஏற்கனவே வைத்துள்ள காலைத்தான் கொஞ்சம் அகட்டி வைக்கப் போகிறார்கள்.

அமெரிக்கத் தூதரகத்தில் அமெரிக்கப் படையினர் சிலர் உள்ளனர். அதேபோலவே அனைத்துலக அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்திலும் சில அதிகாரிகள் உள்ளனர். சிவில் பணிகளையே செய்யும் அவர்கள் அவ்வப்போது தமது வேலைகளையும் கவனித்துக் கொள்கிறார்கள். இப்படியாக இலங்கை முழுவதும் கொஞ்சம் கொஞ்சமாக அமெரிக்க இராணுவம் கால் வைத்து விடும். இறுதிப்போரின்போது அமெரிக்கா இரட்டை நிலைப்பாட்டைக் கடைப்பிடித்தது உண்மை. ஒரு பக்கத்தில் விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு முன்னுரிமை கொடுத்து மற்றொரு பக்கத்தில் புலிகளைக் காப்பாற்ற உதவியது போன்றும் நடித்தது. அமெரிக்காவின் நகர்வுகள் இலங்கைக்கு அச்சமூட்டுவதாக இருந்தாலும் கூட அதற்கு மறுப்புத் தெரிவிக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம் விடுதலைப் புலிகளை அழிக்க முழுமையாக இலங்கைக்கு உதவி செய்தமையேயாகும். அமெரிக்கா எப்பொழுதும் நமது அரசியல், இராணுவ மற்றும் பொருளாதார முன்னேற்றத்துக்கு ஏற்றவாறே காய்களை நகர்த்தி வந்துள்ளது. விடுதலைப் புலிகளுடனான போரில் அமெரிக்கா இலங்கைக்கு உதவியமை ராஜபக்ஷ ஒப்புக் கொண்டுள்ளார். மனிதாபிமான செயற்பாடுகளை ஒருபுறம் செய்வதாகப் பிரசாரங்களைச் செய்துவிட்டு மறுபுறம் சிங்கள அரச படையினருடன் நட்புறவைப் பேணி வருகிறது அமெரிக்க அரசு. சிங்கள அரச படைகளுடன் கூட்டுப் பயிற்சி மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தங்களென உடன்பாடுகளைத் தொடர்ந்தும் அமெரிக்க அரசு செய்து வருகிறது. பெல் நிறுவனம் கொடுத்துள்ள இரு உலங்கு வானூர்திகளின் நிகழ்வு இதன் ஓர் அங்கமே.

அமெரிக்காவிலுள்ள ரென்னாசி என்கிற இடத்தில் அண்மையில் இடம்பெற்ற வைபவத்தில் குறித்த இரு உலங்கு வானூர்திகளும் வைபவ ரீதியாகக் கையளிக்கப்பட்டன. இலங்கை விமானப் படையுடன் தமக்கு 40 வருடங்களுக்கும் மேலாக உறவுண்டு என பெல் நிறுவனத்தின் உப தலைவர் லாரி றொபேட்ஸ் குறித்த நிகழ்வில் தெரிவித்தார். இரண்டு உலங்கு வானூர்திகளையும் எயார் மார்ஷல் அபேவிக்கிரம பொறுப் பேற்றுக் கொண்டார். பெல் 412 உலங்கு வானூர்திகள் தமது தேவைகளுக்கு மிகவும் பொருத்தமான நம்பத் தகுந்த ஆற்றல் வாய்ந்தவை என எச்.டி. அபேவிக்கிரம தெரிவித்தார். இலங்கை பாதுகாப்புப் படையில் கணிசமான உலங்கு வானூர்திகள் அணி உள்ளது. இதில் பெரும்பான்மையானவை பெல் ரகத்தைச் சேர்ந்தவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. போர்க் குற்றவாளிகளைக் கூண்டில் ஏற்றி அவர்களுக்குத் தண்டனை பெற்றுத்தர அமெரிக்க அரசு தொடர்ந்து குரல் கொடுக்குமென்று கூறிவிட்டு மறுபுறத்தில் சிங்கள அரசுடன் பல்வேறு விதமான உடன்பாடுகளைச் செய்து வருகிறது. எவையென்றாலும் அது தனது சொந்த நலன்களுக்காகவே அனைத்தையும் செய்கிறது என்பது இலங்கை அரசுக்குப் புரியாவிட்டாலும் தமிழர்களுக்குப் புரியத் தொடங்கி விட்டது. அமெரிக்கா தமிழர் விடயத்தில் பேச்சளவிலேயே நேரத்தைக் கழித்தது. தமிழர்களின் பிரச்சினையில் ஆர்வம் உண்டு என்கிற வகையில் செயற்பட்டு தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளிச் செல்ல உதவியாக இருந்தது. ஒபாமா தலைமையிலான அரசு பதவியேற்றதும் அமெரிக்க வெளிவிவகார கொள்கையில் மாற்றம் வரும் என்றே ஈழத்தமிழர்கள் நம்பினர். ஈழத்த மிழர்களின் நம்பிக்கையைத் தவிர்க்கும் விதத்திலே அமெரிக்க அரசின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

**துன்னாலைச் செல்வம்**

முள்ளிவாய்க்காலில் நடந்த தமிழர் படுகொலையை யாராலும் மறக்க முடியாது. தமிழர் கொலைக்குக் காரணமாக இருந்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று தமிழர்கள் எல்லோரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கை அரச படையினர் மீது குற்றம் சுமத்தாமல் வெளியிட்டமையானது இலங்கையில் அமைதியை விரும்பாத செயலாக அமையப் போகிறது. ✱


# நீங்கா நினைவுகளில் மூன்றாவது ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

## இந்திராணி கதிர்காமத்தம்பி

**தோற்றம்:- 26.10.1950 மறைவு:- 30.12.2008**

*திதி: வார்பிறை திருதியை – (27.12.2011)*

அன்பு மொழி பேசி ஆதரவு காட்டினீர்!
உற்றார், உறவினர் உள்ளம் மகிழ்ந்திருக்க
உம்மையே அர்ப்பணித்தீர் ஊரார் போற்றிட!
எம்மை மகிழ்விக்க எத்தனையோ செய்தீரே?
ஏனோ சென்றுவிட்டீர் எம்மை விட்டுப் பிரிந்து!

அழகுத் திருமுகத்தை மறக்க முடிவில்லையே!
நீங்கள் மறைந்தாலும் உங்கள் உருவம் மறையாது!
நேர்வழிப்பாதையில் வாழ்ந்து காட்டிய அன்புள்ளமே!
சீருஞ் சிறப்புமாக உலகம் போற்ற வாழ்ந்தீர்
ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

ஓம் சாந்தி!

அம்மன் கோயில் வீதி,
கோண்டாவில்.

பிரிவால் வருந்தி உங்கள் நினைவோடு வாழும்:
**குடும்பத்தினர்.**

(11966)(2,6,7)

## வீதி சேதத்தால் சிரமத்தில் மக்கள்

வரணி, டிசெ. 27

சுட்டிபுரம் - குடமியன் பிரதான வீதியின் நடுப்பகுதி கற்கள் கிளறப்பட்ட நிலையில் அந்தப் பகுதிப் பாதை பெரும் குன்றும் குழியுமாகக் காணப் படுகின்றது.

அண்மையில் பெய்த மழையால் அந்தப் பகுதியில் பாதையை மூடிய நிலையில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது.

இதனால் இந்தப் பாதையில் பயணிக்கும் வாகனங்கள், பயணிகள் பல சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

இவ்வாறு சேதமடைந்த வீதி கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக திருத்தப்படவில்லை எனப் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-122)

## கட்டடங்களுக்குள் விளம்பரங்கள் வைத்தால் கட்டணம் இல்லையாம்

யாழ்ப்பாணம், டிசெ.27

ஹோட்டல்கள், விடுதிகள் தமக்குரியதான விளம்பரங்களை தமது கட்டடங்களின் உள்ளே வைத்தால் அவற்றுக்கு விளம்பரக் கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது என்று யாழ் மாநகரசபை ஆணையாளர் மு. செ. சரவணபவ தெரிவித்துள்ளார்.

தமது ஹோட்டல் அல்லது விடுதி சார்ந்த விளம்பரங்களன்றி வேறு விளம்பரங்கள் உள்ளே வைக்கப்பட்டிருந்தால் அதற்கான விளம்பரக் கட்டணத்தை மாநகர சபை அறவிடும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஹோட்டல் விடுதிகள் உரிமையாளர்களுடனான சந்திப்பு ஒன்று அண்மையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதே மாநகரசபை ஆணையாளர் இதனைத் தெரிவித்துள்ளார். (ம-7)



### கடை வாடகைக்கு கொடுக்கப்படும்

பலசரக்கு கடை புன்னாலைக் கட்டுவன் வடக்கு திடர்புலத்திலுள்ள கடை வாட கைக்கு கொடுக்கப்படும்.

T. Vasanthan
077 5472540, 077 4309589.


## மரண அறிவித்தல்

### திருமதி செல்லையா கமலம்



கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும், 5 வீட்டுத் திட்டம், நாவற்குழியில்வசித்தவரும், தற்போது லண்டனில் வசித்து வந்தவருமாகிய செல்லையா கமலம் 21.12.2011 காலமாகிவிட்டார்.

அன்னார் திலகேஸ்வரி சௌந்தரராஜனின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் 29.12.2011 வியாழக்கிழமை நடைபெறும் .

அன்றைய தினம் அஞ்சலி நிகழ்வு அவரது சகோதரன் கிருஸ்ணன் (ஆசிரியர்) இல. 69, மேட்டுத்தெரு, தோணிக்கல், வவுனியாவிலுள்ள இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(12131)(3.6.7) தகவல்: இராமலிங்கம் சகோதரன்.


### விற்பனைக்கு

மத்தியகிழக்கு நாட்டில் இருந்து கொண்டு வரப்பட்ட Sony 40'' LED TV, Sony HOME THEATRE SYSTEAM 1000W, CAR STREIO KENWOOD WITH DVD, USB, BLUETOOTH விற்பனைக்கு உண்டு

தொடர்பு : 0714829215.

### தவறிவிட்டது

புகையிரதவீதி, இணுவில் கிழக்கு என்னும் முகவரியைச் சேர்ந்த தனபாலசிங்கம் இராமதாஸ் என்பவரது தேசிய அடையாள அட்டை (902542531V) மற்றும் முக்கிய ஆவணங்கள் 21.12.2011 அன்று கோண்டாவிலுக்கும் சுன்னாகத்திற்கும் இடையில் தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் மேல் காணும் முகவரிக்கு கொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். T.P.0771727380

### வீடு வாடகைக்கு

யாழ் நகரில் இருந்து 1/2 மைல் தூரத்தில் மாட்டீன் றோட்டில் வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய சகல வசதிகளையும் உடைய வீடு வாடகைக்கு உண்டு. காரியாலய தேவைகளுக்கு உகந்தது.

தொடர்பு : 078 6173033


## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி சுப்பிரமணியம்

(பேபி அன்ரி)



இல.04 ,செட்டித்தெரு, நல்லூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சுப்பிரமணியம் (பேபி அன்ரி) நேற்று (26.12.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான சபாபதிப்பிள்ளை-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னப்பா-இராசம்மா தம்பதியரின் அருமை மருமகளும், பொ.சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், யோகேஸ்வரி (ஊரெழு), காலஞ்சென்ற பூபாலசிங்கம் மற்றும் புவனேஸ்வரி (கிளியக்கா கொழும்பு), தன பாலசிங்கம் (தனம்-கொழும்பு), தர்மகுலசிங்கம் (பபா-திருநெல்வேலி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற காசிப்பிள்ளை, மற்றும் யோகேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிவபாலன் (கனடா), சித்திரகலா (கனடா), சிவகுமார் (குமார்-ஜேர்மனி), சிவகாந்தன் (காந்தன்-கனடா) காலஞ்சென்ற சிவகங்கா ஆகியோரின் அன்புத் தாயும், மாலா (கனடா), சன்முகநாதன் (கனடா), தர்சினி (கனடா) ஆகியோரின் அருமை மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். (12135)(6-7-8)

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இல்.4, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். கணவர்-பொ. சுப்பிரமணியம், மற்றும் பிள்ளைகள்

## விழி நீரில் விளக்கெரியும் ஆறாம் ஆண்டில்....



ஊரெழு மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட

### திருமதி தெட்சணாமூர்த்தி ஜெகதாம்பிகை

| அன்னை மடியில் | திதி: வளர்பிறை | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 23.02.1951 | திருதியை (27.12.2011) | 02.01.2006 |

நாதம் ஒன்று சத்தம் இன்றி ஓய்ந்து போனது
ஜெகதா என்ற எங்கள் சொந்தம் சாய்ந்து போனது
காலம் செய்த கோலம் என்று கருத்துச் சொல்வதா - இல்லை
காலனவன் விளையாட்டில் விதி செய்த சதி வேலையா?
சிரித்த வதனம், மலர்ந்த முகம் நினைவிருக்க
அதற்கிடையில் அவசரமென்ன எமைப்பிரிய
நெருப்பெனவே நெஞ்செரியும் நினைவைப் போக்க
நேரில் நீர் வருவீரோ! எம் கவலை தீர்க்க
அருகிருந்து சொந்தங்களின் அவலங்களை - எங்கள்
அல்லல்களை, இன்பங்களைச் சுமந்தவளே - ஜெகதா!
அடிமனதில் புதுமலராய் குடியிருக்க - இங்கே
இடிவிழுந்த நிலையாச்சு எம் மனதில் - ஜெகதாவே
வேண்டும் அம்மா உம் உறவு மீண்டும் எமக்கு
பெருவேதனை தான் எம்மிடத்தில் நிலைத்திருக்கும் அம்மா,
ஆண்டு பல கழிந்தாலும் மறக்கமாட்டோம் நின் பெருமைகளை
எப்போதும் உம்பிரிவை ஏற்கமாட்டோம் அம்மா!

(12152)(2-6-7)

ஈரவிழிகளுடன்:
நா.தெட்சணாமூர்த்தி (கணவர்), தெ.நிஷாகரன், தெ.நிஷாந்தன் (மகன்மார்).
நிஷாகரன் மலர்மதி, நிஷாந்தன் ஸ்ரீமகள் (மருமகள்மார்),
பேரப்பிள்ளைகள்- நிஷாகரன் ஜனனி, நிஷாந்தன் திருவரேஷ்வர்.

145/3, பிரப்பங்குளம் வீதி,
யாழ்ப்பாணம். T.P. 021 222 8169

# இளைஞர்களின் அர்ப்பணிப்பான சேவையால் மிளிரும் திருநாவலூர் சனசமூக நிலையம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

2004ஆம் ஆண்டு மார்கழி மாதம் நாட்டில் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிப்படைந்து திருநாவலூர் கிராமத்தில் உள்ள மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தியாலயத்தில் அடைக்கலம் தேடிய கரையோரக் கிராம மக்களான மயிலிட்டி, பலாலி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இடம் பெயர்ந்த மக்களும், சுப்பர் மடத்தைச் சேர்ந்த மக்களுக்குமான உணவு விநியோ கத்தை சில நாள்கள் நாவலர் சனசமூக நிலையம் பொறுப் பேற்று மேற்கொண்டது. இதற்குத் தேவையான நிதி கிராமத்து மக்களால் வழங்கப்பட்டது. இந்த நற்பணிக்கு திருநாவலூர் கிராமத்தில் 50 ஆயிரத்து 650 ரூபா சேர்ந்தது என்பதும் குறிப்பிடத்தகது .

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பிரதேச சங்களுக்கு பாலர் பாடசாலை அமைக்கும் திட்டத்தின் கீழ் திருநாவலூர் கிராமமும் தெரிவு செய்யப்பட்டு, பாலர் பாடசாலைக் கட்டடத் தொகுதியைக் கட்டுவதற்கு சிறுவர் பாதுகாப்பு நிதி யம்பொறுப்பேற்று நிதி உதவிகளை வழங்கியது. இந்தக் கட்டட ஒப்பந்த வேலையை சனசமூக நிலையம் பொறுப் பேற்று செயற்படுத்தியது. கட்டட அத்திபாரப் பணிகளை நிலையம் சிரமதான முறையில் மேற்கொண்ட செயற்பாடுகள் மூலமாக மீதமான பணத்தை சன சமூக நிலையம் தனது வளர்ச்சிப் பணிகளுக்குப் பயன்படுத்தியது. இன்றும் பயன்படுத்தி வருகின்றது. இந்த நற் பணிக்கு சனசமூக நிலையத்தின் அன்றைய நிர்வாக சபை உறுப்பினர்களின் வழிகாட்டலில் பெரும்பாலான இளைஞர்கள், சிறார்கள் இரவு பகலைப் பாராது



அயராது பங்காற்றினர்.

நாவலர் சனசமூக நிலையம் தனது சொந்தக்காலில் நின்று தனது பணிகளை நிறைவு செய்வதற்கான அடித்தளங்களை காலத்துக்கு காலம் நிலைய நிர்வாக சபையில் அங்கம் வகித்தோர் மேற்கொண்டனர் தீர்க்கதரிசனத்துடனான திட்ட மிட்டுச் செயற்பட்டதன் பலனை இன்று மேற்படி சனசமூகநிலையம் அனுபவிக்கின்றது. அத்தோடு சனசமூக நிலையத்துக்கான தேவைகளை நிறைவுசெய்வதற்கு வெளிநாட்டு உறவுகளின் பங்களிப்பு மிக முக்கியமானது. இந்த வரிசையில் சனசமூக நிலையத்துக்கான பத்திரிகைகள் அனைத்தின் முழுப் பணத்தையும் ல.லோகேஸ் வரன் தனது தந்தையாரான வ.வடிவேலுவின் ஞாப கார்த்தமாக வழங்கி வருகின்றனர். கடந்த ஏழு ஆண்டுகளாக இதற் கானபணத்தை வருடாந்தம் 20 ஆயிரம் ரூபா என்ற இலக் கில் வழங்கி வரு வது சனசமூக நிலையத்துக்கு பெரும் ஆறுதலாகும், ஒரு காலத்தில் பணத்துக்காக அல்லாடிய இந்த சனசமூக நிலையத்துக்கு இன்று தன் பணத் தேவையை நிறைவு செய்வதற்கு வெளிநாட்டு உறவுகள் உறுதுணையாக இருப்பது பெரும் நிம்மதியாகும்.

விளையாட்டுக்களில் அக்கறை கொண்ட இளைஞர்களுக்கு கிரிக்கெட் விளையாடுவதற்கு மைதானம் இல்லாதிருப்பது துயரம் நிறைந்தது என்ற போதும் விளையாட்டு மைதானத்தை வாங்குவதற்கு எடுக்கப்பட்டமுன் முயற்சிகள் எவையும் வெற்றியளிக்கவில்லை. இந்தக் கிராமத்து வெளிநாட்டு உடன்பிறப்புக்கள் விளையாட்டு மைதானத்தை வாங்குவதற்குத் தேவையான நிதி உதவியை நிறைவு செய்யத் தயார் நிலையில் உள்ளனர்.

நாவலர் சன சமூக நிலையம் வளர்ச்சியடைய வேண்டும். அதன் சேவை விரிவுபடவேண்டும் என்ற நினைவோடு சனசமூக நிலையக் கூட் டங்களுக்குத் தவறாது பங்கு பற்றிய பொறுப்புமிக்க இந்தக் கிராமத்துப் பெரியவர்கள் வரிசையில் ஆ. வேலும்மயிலும், செ.இராமலிங்கம், இ. இராசேந்திரம், ம.கந்தசாமி, மா. இரத்தினசபாபதி, ப.க.ஆறுமுகம் ஆகியோர் முக்கிய இடம்பிடித்துள்ளனர்.

இந்தக் கிராமத்துப் பெரியோர்கள் ஆலோசனை வழங்குவதோடு மட்டும் நின்றுவிடுகின்றனர். இளைஞர்களோடு இளைஞர்களாக இணைந்து பணியாற்றும் தன்மை இங்கு குறைந்தே காணப்படுவது கண்டு கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. இது இந்தக் கிராமத்தின் தொன்மையான மரபுகளில் ஒன்றாகக் காணப்படுவதாலேயே இளையோர் பெரியவர்களுக்கு இடையேயான இடைவெளி கூடுதலாகக் காணப்பட்டது. ஆனால் இன்று இந்த நிலைமை மாற்றம் பெற்று இளைஞர்களும் பெரியவர்களும் அந்நியோன்னியமாக உறவாடி சனசமூக நிலையத்தை வளர்த்தெடுப்பதில் வெற்றியைக் கண்டுள்ளனர். இந்த வெற்றியின் இரகசியம் என்னவென்றால் சனசமூக நிலைய நிர்வாகத்தில் இளைஞர்கள் இணைந்து அர்ப்பணிப்புடன் பணியாற்றத் தொடங்கியதும், புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கின்ற அன்பு நெஞ்சங்கள் நாவலர் சனசமூக நிலையத்தின் தேவை எதுவோ அதற்கான நிதியை அன்பளிப்புச் செய்ய ஆயத்தமாக இருப்பதும் இதற்கான முக்கிய காரணங்களாகும் என்று இலகுவில் கூறிவிடலாம். இதுதான் உண்மையும் கூட. திருநாவலூர் கிராமத்தவர் நாவலர் சனசமூக நிலையத்துக்கு அபிவிருத்தி தேவை என்று பெரியளவில் நிதி எதனையும் அன் பளிப்புச் செய்வதும் இல்லை. நிலைய நிர்வாகமும் இதற்கான நேரத்தைச் செலவிடுவதும் இல்லை என்பதே உண்மையாகும்.

கர்ணன்

(தொடரும்)

## முதலாம் வருட நினைவஞ்சலி



அமரர்
**சின்னையா சுப்பிரமணியம்**
(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்)
பிறப்பு
01.07.1933
இறப்பு
08.12.2010
திதி: திருதியை

எம்மோடு வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும் அப்பா
வையத்துள் எந்நாளும் உங்கள்
நாமம் வாழ்ந்திடுமே ஏங்கி அழும் உறவுகளை
தேற்றிட ஏதோ ஓர் உறவில் வருவீர்களப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இலந்தகட்டி வயிரவப் பெருமானை
இதய பூர்வமாக பிரார்த்திக்கின்றோம்.

ஏழாலை கிழக்கு,
இலந்தகட்டி ஏழாலை.
குடும்பத்தினர்.

(12099)(3.7.6)

## 13ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
23 - 10 - 1948



மறைவு
27 - 12 - 1998

**திருமதி கந்தபுஸ்பதேவி அமரசிங்கம்**
(இசை ஆசிரியை)
திதி : பூர்வபட்ச நவமி (02-01-2012)

சர்மிளா, பிரதீபன், சயந்தன்
சுயனன் என நால்வர்
குடி வாழ்வில் இன்பம்
கொள்ளப் பிறப்பெடுத்தார்
பெற்றெடுத்த நால்வரையும்
பொன் போல் காத்திருந்து
பத்தியமும் தான் காத்து
பகலிரவாய்க்கண் விழித்து
நற் குணத்துக் காதல்
நாயகனின் நலங்காத்து
ஒற்றுமையாய் வாழ்வின்
உயர் வெல்லாம் ஒப்பினளே
ஆண்டுகள் பதின்மூன்று ஆனாலும்
ஆறவில்லை எம்மனம்
ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகிறோம்.

பன்னாலை, தெல்லிப்பழை.
கணவர், பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

(12017) (6.7.10)

நத்தார் புதுவருட பரிசில்களுக்கு......
★ சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகள்
★ நவீன டிசைன், ரெடிமேட் ஆடைகள்
★ நவநாகரிக நங்கையர்களுக்கேற்ற சல்வார், சுடிதார், ஸ்கேட் அன் பிளவுஸ் மற்றும் ஆடைகளுக்கும்
★ ஆடவர்களுக்கான சிறுவர்களுக்கான அனைத்து ஆடைத் தெரிவுகளுக்கும்

15 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு
30 ஆயிரம் ரூபாவிற்கு
மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு
ஒருவருட உத்தரவாதத்துடன்
அழகிய கைத் தொலைபேசி ஒன்று
வழங்கப்படும். (இச்சலுகை 21.12.2011 முதல் 31.12.2011 வரை மட்டுமே)

மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்
MILLENNIUM FASHION & BOMBAY BAZAAR
No.10,11,POWER HOUSE RD.
GRAND BAZAAR, JAFFNA
(மலாயன் கபே முன்பாக)
T.P: 021 222 9399

# பிள்ளைகள் புறக்கணிக்கிறார்களா? முதியோர் சபையிடம் முறையிடுங்கள்

கொழும்பு,டிசெ,27

சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள முதியோர் பராமரிப்புச் சபையின் கிளைகள் நாடு முழுவதும் அமைக்கப்படவுள்ளன. அடுத்த மாதம் நீதிமன்றங்கள் அமைந்துள்ள தொகுதிகள் முழுவதும் இந்தக் கிளைகளை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஆர்.எம்.எஸ்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

முதியோர் பராமரிப்புச் சபையின் கிளைகள் நாடு முழுவதும் நிறுவப்பட்டதன் பின்னர் பிள்ளைகளினால் புறக்கணிக்கப்படுவதன் காரணமாக தமது வாழ்க்கையைக் கொண்டுசெல்ல முடியாது பராமரிப்புக் கோரி பெற்றோரிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகள் துரித கதியில் விசாரிக்கப்பட்டு அவர்களுக்கு நிவாரணங்கள் வழங்க வாய்ப்பு அமைகிறது என்று அவர் தெரிவித்தார்.

தமது பிள்ளைகளால் புறக்கணிக்கப்படுவதாகத் தெரிவித்து பெற்றோரிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகளைச் சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள இந்தச் சபைகள் ஆராயும் குறிப்பிட்ட முறைப்பாடுகள் கிடைக்கும் பகுதிகளுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொள்வதே தற்போதைய நடைமுறையாகும். நீதிமன்றத் தொகுதிகள் மட்டத்தில் கிளைகள் நிறுவப்படுவதால் சிரமமின்றிக் கருமமாற்றுவதற்கு வாய்ப்பமைகிறது என்று அவர் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றங்கள் அமைந்துள்ள தொகுதிகள் முழுவதும் மேற்படி பராமரிப்புச் சபைகள் நிறுவப்பட்டதன் பின்னர் பிள்ளைகளினால் புறக்கணிக்கப்படும் பெற்றோர் தமது பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தர்களிடமும்கூட அதுபற்றி முறையிட முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

(ச-22)

# நுரைச்சோலை மின்நிலையத்தால் அரசுக்கு பல மில்லியன் நட்டம்

## மின்சாரசபை அதிகாரிகள் தகவல்

கொழும்பு,டிசெ.27

இலங்கையில் சீனாவின் உதவியோடுகட்டப்பட்ட நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் போதியளவு மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாததால், அரசுக்கு நட்டம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

300 மெகாவோட்ஸ் மின்சார உற்பத்தித் திறன் கொண்ட நுரைச்சோலை அனல் மின் நிலையம் முழுமையாக இயங்கினால், நாளொன்றுக்கு ஆறு மில்லியன் அலகுகளுக்கும் அதிகமான மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். ஆனால், இந்த வருடத்தில் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் நுரைச்சோலை மின்நிலையம் குறைந்தளவிலேயே இயங்கியுள்ளதாக மின்சார சபை அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கை அரசுக்கு மில்லியன் கணக்கிலான இழப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் மின்நிலையம் செயற்படாமல் போகும் ஒவ்வொரு நாளிலும் 80 மில்லியன் ரூபா இழப்பை அரசு சந்தித்து வருவதாகவும் மின்சார சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த ஆண்டில் பல்வேறு தொழில்நுட்பக்கோளாறுகளினால் நுரைச்சோலை மின் நிலையம் பாதிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை மின்சாரசபை அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச)

# ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை

கொழும்பு,டிசெ.27

விசேட கைதிகளுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொது மன்னிப்பு வழங்கத் தீர்மானித்துள்ளார்.

குற்றச் செயல்களின் காரணமாக ஆயுள் மற்றும் மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் உள்ளிட்ட விசேட கைதிகளுக்கு மன்னிப்பு வழங்குவது குறித்து ஜனாதிபதி கவனம் செலுத்தி வருகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது. நன்னடத்தை அடிப்படையில் கைதிகள் விடுதலை செய்யப்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

வெலிக்கடைச் சிறைச்சாலையைச் சேர்ந்த கைதிகளினால் உருவாக்கப்பட்ட உலகின் மிக நீண்ட வாழ்த்து அட்டை அண்மையில் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டபோது ஜனாதிபதி, பொது மன்னிப்பு வழங்குவது குறித்துத் தெரிவித்துள்ளார்.

கைதிகள் தொடர்பான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி அதிகாரி களிடம் கோரியுள்ளார்.

2002ஆம் ஆண்டு சந்திரிக்கா பண்டார நாயக்க ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் விசேட கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது. எனி னும் அதன் பின்னர் ஜனாதிபதியின் விசேட அதிகாரத்தைக் கொண்டு எவ ருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்படவில்லை. போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்க பரிந்துரை செய்ய வேண்டாம் என்று ஜனாதிபதி சிறைச்சாலை அதிகாரிகளிடம் கோரியுள்ளார்.

இந்த மன்னிப்பின்போது தமிழ் அரசியல் கைதிகளுக்கும் விடுதலை கிடைக்குமா என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. (ச)

# 6 ஆண்டுகளுக்குப் பின் விமான சேவைகள்

கொழும்பு,டிசெ.27

ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் ஸ்ரீலங்கா விமான சேவைகள் நிறுவனம் சுவிற்சர்லாந்தின் சூரிச் நகருக்குத் தனது விமானப் பயணங்களைக் கடந்த வெள்ளிக்கிழமை மீளவும் ஆரம்பித்துள்ளது.

1980ஆம் ஆண்டில் இலங்கைக்கும் சுவிற்சர்லாந்துக்கும் இடையிலான விமானப் பயணங்கள் ஆரம்பித்த போதிலும் 2005ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் விமானப் பயணத்துறைகளில் நிலவிய பொருளாதாரச் சரிவு காரணமாக அவை நிறுத்தப்பட்டன. மீளவும் சூரிச் நகருக்கு விமானப் பயணங்களை ஆரம்பிக்க முடிந்துள்ளதையிட்டு திருப்தியுறுவதாக ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தின் தலைவர் நிஸாந்த விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய சேவை மூலமாக இலங்கைக்கும் மத்திய ஐரோப்பாவுக்குமிடையிலான தொடர்பை அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் அது, இலங்கையின் உல்லாசப் பயணத்துறைக்குப் பெரும் பக்க பலமாக அமையுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். கடந்த இரண்டாண்டுகள் காலத்தில் ஐரோப்பாவிலிருந்து இலங்கைக்குவரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ச-22)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| தோற்றம்: | | மறைவு |
|---|---|---|
| 12 | | 29 |
| 10 | | 11 |
| 1927 | | 2011 |



### திருமதி நாகமுத்து கிருஷ்ணர்

கடந்த 29.11.2011 அன்று இறைபதம் எய்திய எமது அன்புத் தாய் திருமதி நாகமுத்து கிருஷ்ணர் அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையும் நாளை (28.12.2011) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் இடம்பெறவுள்ளன . இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களினைக் கேட்டுக் கொள்கின்றோம். மேலும் அன்னாரது இறுதிக்கிரியை முதல் இன்றுவரை பல வழிகளிலும் எமக்கு உதவிக்கரம் நீட்டிய அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியினையும் சிரம் தாழ்த்தி தெரிவித்துக் கொள்கின்றோம்.

மலைவேம்படி,
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி
T.P. 0213210734

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## தவறிவிட்டது

தியாகராசா விக்னேஸ்வரன் ஆகிய எனது மோட்டார் சைக்கிளின் NPGY 6854 இலக்கமுடைய இலக்கத் தகடு கடந்த 23.12.2011 இல் சுன்னாகத்துக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது. அதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: தி. விக்னேஸ்வரன், புன்னாலைக் கட்டுவன் தெற்கு, சுன்னாகம். 0778065386, 0774372036

## வாடகைக்கு வீடு தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வாடகைக்கு வீடு தேவை. யாழ். போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0776911669

## எமது இனிய வாழ்த்துக்கள்

### செல்லப்பா நடராசா



யா/ கோண்டாவில் இந்துவின் பழைய மாணவரும் ஓய்வு நிலை சிரேஷ்ட நாடாளுமன்ற ஹன்சாட் அறிக்கையாளரும் சமாதான நீதிவானும் மூத்த பத்திரிகையாளருமான செல்லப்பா நடராசா அவர்கள் "ஊடகத்துறைக்கான கலாபூசணம்" உயர் விருதை நீதியமைச்சரிடமிருந்து பெற்றுக் கொண்டதை அறிந்து மனம் மிக மகிழ்வதுடன் எமது இனிய வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம்.

செல்வி பா.மார்க்கண்டு
(ஓய்வு நிலை அதிபர்)
இ.செந்திற்குமரன்(அதிபர்

சு.சண்முககுமார்(அதிபர்),
இ.அருணகிரிவாசன்(உபஅதிபர்),
உ.வதனராஜ்
(குட்டி சுட்டி நிர்வாகி).

(12II4)
(3.6.7)



# கேரளா - தமிழகத்தில் விரைவில் இயல்பு நிலை

### கருணாநிதியிடம் மன்மோகன் உறுதி

கேரளா-தமிழகத்தில் இயல்பு நிலை திரும்ப அனைத்து நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என்று கருணாநிதியிடம் பிரதமர் மன்மோகன்சிங் உறுதி அளித்தார். நேற்று முன்தினம் சென்னைக்கு வந்த பிரதமர் மன் மோகன்சிங்கை, கருணாநிதி தலைமையிலான தி.மு.க. பிரதிநிதிகள் குழுவினர் ஆளுநர் இல்லத்தில் சந்தித்தனர். முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை தொடர்பாக, பிரதமரிடம் மனு ஒன்றை அளித்தனர்.

முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தைக் குறைக்கவும், புதிய அணை கட்டவும், கேரளா அரசு எடுத்து வரும் முயற்சிகளைச் சுட்டிக் காட்டி கருணாநிதி கவலை தெரிவித்தார். மேலும் அணையின் பாதுகாப்பு குறித்த கேரள அரசின் தவறான பிரசாரத்தால் இரு மாநிலத்திலும் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலைகளைப் பிரதமரிடம் கருணாநிதி விளக்கி கூறினார்.



பிரச்சினையை மேலும் வளர விடாமல், உடனடியாகத் தலையிட்டு தீர்வு காண வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இதைக் கவனமாக கேட்ட பிரத மர் மன்மோகன்சிங் கேரளா-தமிழக மக்களிடையே நல்லு றவைப் பேணிக் காக்க அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொள்ளும். இரு மாநிலத்திலும் இயல்பு நிலை திரும்புவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று உறுதி அளித்தார். (வ)

# தமிழகத்தில் ஐயப்பன் கோயில் அமைக்கக் கோரி போஸ்டர்கள்

குற்றாலம், டிசெ.27

'ஐயப்ப பக்தர்களே சிந்தியுங்கள், உங்கள் பணத்தில் வாழும் கேரள அரசு, உங்களை அடித்துத் துரத்துவது நியாயமா', 'ஐயப்பன் கோயிலை தமிழகத்தில் உருவாக்குவோம்' என்ற வாசகங்களுடன் குற்றாலம், தென்காசிப் பகுதிகளில் ஒட்டப் பட்டுள்ள போஸ்டரால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கேரளாவில் அமைந்துள்ள சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு ஆண்டுதோறும் விரதமிருந்து கார்த்திகை, மார்கழி, தை ஆகிய 3 மாதங்களுக்கு இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து இலட்சக்கணக்கான ஐயப்ப பக்தர்கள் சென்று வருகின்றனர்.

முல்லைப் பெரியாறு அணை தொடர்பாகப் பிரச்சினை ஏற்பட்டதிலிருந்து தமிழகம் வழியாக கேரளாவுக்குச் செல்லும் ஐயப்ப பக்தர்களுடைய வாகனங்களை அந்த மாநில அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், சமூக விரோதிகள் போன்றோர் தாக்கி வருகின்றனர்.

இந்த நிலையில் குற்றாலம், தென்காசி உள்ளிட்ட பகுதிகளில் ஒரு போஸ்டர் அடித்து ஒட்டப்பட்டுள்ளது.

அந்த போஸ்டரில் குறிப்பிடப்பட் டுள்ளதாவது:

ஐயப்ப பக்தர்களே சிந்தியுங்கள்', உங்கள் பணத்தில் வாழும் கேரள அரசு, 'உங்களை அடித்துத் துரத்துவது நியாயமா?, ஐயப்பன் கோயிலை தமிழகத்தில் உருவாக்கு வோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த போஸ்டர் ஐயப்ப பக்தர்களிடையே மகிழ்ச்சியையும், எல்லைப் பகுதி மலையாளிகளிடம் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. (வ)

# தேசிய கணித ஆண்டாக 2012ஐக் கடைப்பிடிப்போம்

### பிரதமர் அறிவிப்பு

சென்னை, டிச.26:

2012ஆம் ஆண்டு தேசிய கணித ஆண்டாகப் போற்றப்படும் என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார்.

சென்னை பல்கலைக்கழக மண்டபத்தில் கணிதமேதை ராமானுஜத்தின் 125ஆவது பிறந்த நாள் விழா நேற்று ஆரம்பமாகியது. இந்த விழாவில் பிரதமர் சிறப்புரை ஆற்றினார். அப்போது 2012 ஆம் ஆண்டைக் கணித ஆண்டு என்று அவர் அறிவித்தார்.

மேலும் அவர் பேசியதாவது:

கணிதத்துறையில் இந்தியாவின் பங்களிப்பு மிகவும் போற்றத்தக்கது. ராமானுஜம் பிறந்த நாளான டிசெம்பர் 22 ஆம் திகதி தேசிய கணித நாளாகக் கடைப்பிடிக்கப்படும். கணித வல்லுநர்களை ஊக்குவிப்பது மிகவும் அவசியம் - என்றார்.

இந்த விழாவில் ராமானுஜம் உருவம் பொறித்த நினைவுத் தபால்தலையையும், ராமானுஜம் எழுதிய புத்தகத்தின் புதிய பதிப்பையும் பிரதமர் மன்மோகன் சிங் வெளியிட்டார். (வ)

# மீனவர் மீதான தாக்குதல் குறித்து இலங்கையுடன் பேச வேண்டும்

### தமிழக முதல்வர் மன்மோகன்சிங்கிடம் வலியுறுத்து

சென்னை, டிசெ.27

இலங்கையுடன் அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் பேச்சு நடத்தும்போது, தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் நடத்தும் தாக்குதல் குறித்து இலங்கை அரசுடன் இந்திய அரசு கடுமையாகப் பேச வேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெய லலிதா மன்மோகன்சிங்கிடம் வலியுறுத்தினார்.

மேலும் தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையின் தாக்குதலை இந்தியாவுக்கு எதிரான தாக்குதலாகக் கருத வேண்டும் என்றும் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு சென்னைக்கு வந்த பிரதமரை, ஆளுநர் மாளிகையில் சந்தித்த முதல்வர் ஜெயலலிதா, சுமார் 40 நிமிடங்கள் பல் வேறு விடயங்கள் குறித்துப் பேசினார். இந்த சந்திப்பின்போதே மேற்கண்ட விடயம் குறித்துத் தெரிவித்தார்.

சந்திப்பின்போது முதல்வர் மேலும் தெரிவித்ததாவது:



தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற் படையினர் அல்லது விஷமிகள் தாக்குவதை தேசிய பிரச்சினையாகக் கருத வேண்டும் என்று ஏற்கனவே வலியுறுத்தியிருக்கிறேன். இந்தியாவுக்கு எதிரான தாக்குதலாக இதைக் கருத வேண்டும் என்று மேலும் வலியுறுத்தியுள்ளார்.

அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் இலங்கையுடன் பேச்சு நடத்தும்போது, இது குறித்து இலங்கை அரசுடன் இந்திய அரசு கடுமையாகப் பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

பாக்கு நீரிணைப் பகுதியில் பாரம்பரியமாக உள்ள மீன்பிடி உரிமையைப் பாதுகாக்கவும், மீனவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கவும் அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டும் - என்றார்.

அப்போது 16 பக்கங்கள் கொண்ட இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை கோரிக்கை மனு ஒன்றையும் பிரதமரிடம் வழங்கினார். (வ)

# கிறிஸ்மஸ் தின சுற்றுலா சென்ற படகு கவிழ்ந்து; 21 பேர் சாவு



சென்னை, டிசெ27

தமிழகத்தில் பழவேற்காடு ஏரியில் உல்லாச சவாரி சென்ற படகு, கடல் முகத்துவாரம் அருகே கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில், படகில் பயணித்த, 21 பேர் மூழ்கிப் பலியாகினர். 3 சிறுவர்கள் மீட்கப்பட்டனர்.

கிறிஸ்மஸ் பண்டிகையையொட்டி நெசப்பாக்கம், கும்மிடிப்பூண்டி மற்றும் பழவேற்காடு பகுதிகளைச் சேர்ந்த 7 குடும்பங்களைச் சேர்ந்த 25 பேர், சென்னையை அடுத்துள்ள பழகவேற்காடு ஏரியில் படகு ஒன்றில் சுற்றுலா சென்றனர்.

அப்போது படகு திடீரெனக் கவிழ்ந்ததில், அனைவரும் நீரில் மூழ்கித் தத்தளித்தனர். இதில் 4 பேர் மட்டும் நீந்திக் கரை சேர்ந்த நிலையில், எஞ்சியுள்ள 21 பேரும் பரிதாபமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

ஏரியில் விபத்து நடந்த இடம் சுற்றுலா செல்லத் தடைவிதிக்கப்பட்ட இடம் என்றும், அளவுக்கு அதிகமானோரை ஏற்றி சென்றதாலேயே படகு நிலை தடுமாறிக் கவிழ்ந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பலியானோரில் 8 பேர் பெண்கள், 2 பேர் பெண் குழந்தைகள் ஆவர். (வ)

# பாடசாலை பஸ் கவிழ்ந்து மாணவர்கள் உயிரிழப்பு

தர், டிசெ.27

மத்திய பிரதேசத்தில் பாடசாலை பஸ் ஒன்று, மலைப்பாதைப் பள்ளத்தில் கவிழ்ந்ததில், ஐந்து மாணவர்கள் உயிரிழந்தனர். 45 மாணவர்கள் காயம் அடைந்தனர்.

மத்திய பிரதேச மாநிலம் உஜ்ஜயினி மாவட் டத்தில் கச்ராடு என்ற இடத்தில் பாடசாலை ஒன்று உள்ளது.

இந்தப் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள், நேற்று முன்தினம் இரவு சுற்றுலா நகரமான மாண்டுவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.



இவர்கள் சென்ற பஸ், நேற்று முன்தினம் அதிகாலை 5.30 மணி அளவில், தர் என்ற இடம் அருகே மலைப்பாதைப் பள்ளத்தில் கவிழ்ந்ததில்,மாணவர்கள்5பேர் உயிரிழந்தனர். மேலும் 45 மாணவர்கள் காயம் அடைந் தனர். சாரதியின் கட்டுப்பாட்டை இழந்ததால், பஸ் பள்ளத்தில் கவிழ்ந்தது. காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில், எட்டுப் பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. (வ)

# மருதானையில் இளைஞர் வெட்டிக் கொலை

கொழும்பு, டிச.27

மருதானை டி.பி.ஜாயா மாவத்தையில் இரு தரப்பினருக்கு இடையில் இடம்பெற்ற மோதலில் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதோடு மேலும் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த மோதல் சம்பவம் நேற்றுமுன்தினமிரவு 9.40 அளவில் இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். மோதலில் மாளிகாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய மொஹமட் சிராஸ் என்ற இளைஞரே பலியாகியுள்ளார்.

குறித்த இளைஞன் வெட்டுக் காயங்களுக்கு உள்ளான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இந்த மோதலில் காயமடைந்த மேலும் நால்வர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். சந்தேகநபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. மருதானை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை திருமதி சாரதாதேவி சிவராஜா அவர்களின் அன்புக் கணவர்.

**தம்பிஜயா சிவராஜா**

(ஓய்வு பெற்ற அதிபர் யா/ முத்துத்தம்பி வித்தியாலயம்)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்ப துடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள் யாழ்/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

(சி/7203) (3.6.7)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியர் விஜயகுமார் அவர்களின் அன்புத் தாய் திருமதி பொன்னம்பலம் கனகபூரணம் அவர்களின் மறைவால் துயருற்றிருக் கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

(C/7204)

## மணல் விற்பனைக்குண்டு

நாற்பது வருடங்களாக பூச்சு வேலைகளுக்கு சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற மண்கும்பான் மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப் பாணத்தில் .

4 - ரக்டர் ரூபா 24000
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு
(ஒரு கல் -38 ரூபா)
தொடர்பு: கண்ணா
0776766499, 0771106371

(சி/7203) (3.6.7)

## காணி விற்பனைக்கு

நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியில் (யா/ அமிர்தாம்பிகை வித்தியாசாலைக்கு அருகில்) நல்ல நீர்க்கிணற்றுடன் வீடு கட்டுவதற்கு உகந்த காணி 4 பரப்பு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0779422914

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி தையல்நாயகம் தியாகராசா



தோற்றம் 10.08.1923 மறைவு 29.11.2011

கடந்த 29.11.2011 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியையில் நேரடியாக பங்குபற்றியோருக்கும் தொலைபேசி மூலமும், தந்திமூலமும், கடித மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும், சகல வழிகளிலும் உதவிகள் செய்தோருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.
29.12.2011 வியாழக்கிழமை அன்று முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மணிமங்கலம்,
சரசாலை

குடும்பத்தினர்.

(12133)(6.7.8)


# குடிதண்ணீரின்றி கந்தப்பளை மக்கள் அவதி

கொழும்பு , டிச.27

நுவரெவியா கந்தப்பளை கடை வீதிக்கும் அதனை அண்மித்த குடியிருப்புகளுக்கும் கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக குடிதண்ணீர் விநியோகிக்கப் படாமையால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர்.

சுமார் 175 வீடுகளையும் 55 கடைகளையும் கொண்ட இப் பிரதேசத்துக்கு நுவரெலியா பிரதேசசபை குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொண்டு வந்த நிலையில் கடந்த ஒரு வாரமாக குடிதண்ணீர் விநியோகம் முற்றாக தடைப்பட்டுள்ளதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஒருவாரமாக தாம் குடிதண்ணீருக்காக பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டதுடன் நீரைப் பெற்றுக்கொள்வதற்காக சிறிய ஓடைகளையும் அருவிகளையும் தேடி தினமும் அலைந்து திரிவதாக தெரிவிக்கும் இப் பிரதேச மக்கள் இவ்விடயம் தொடர்பாக நுவரெலியா பிரதேச சபையின் கவனத்திற்கு கொண்டு வந்தபோதும் தமக்கு இது வரை குடிநீர் விநியோகம் கிடைக்கப் பெறவில்லை என கவலை தெரிவிக்கின்றனர்.

# அரச வைத்தியசாலைகளில் நிலவும் கையுறை தட்டுப்பாடு பற்றி விசாரணை

கொழும்ா, டிச.27

அரசாங்க வைத்தியசாலைகளுக்கு 2011 ஆம் வருடத்திற்குத் தேவையான கையுறைகள் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிடுகின்றது.

நாட்டின் பெரும்பாலான வைத்தியசாலைகளில் கையுறைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அமைச்சு தெரிவிக்கின்றது.

அரசாங்க வைத்தியசாலைகளுக்கு வருடாந்தம் 40 மில்லியன் கையுறைகள் தேவைப்படுவதுடன் கடந்த வருட இறுதியில் கொள்வனவுக்கான கட்டளை பிறப்பிக்கப்படாமையே தட்டுப்பாடு நிலவுவதற்கு காரணமாகியுள்ளது எனவும் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

விலைமனுக்கள் கோரப்படாமையினால் ஏற்படுகின்ற தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக உள்ளூரில் கையுறைகளை கொள்வனவு செய்ய நேரிட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிடுகின்றது.

இத்தகைய செயற்பாட்டின்போது சாதாரண விலையைவிட பத்து மடங்கு அதிகமான தொகையை செலுத்த நேரிடுவதாக சுகாதார அமைச்சு கூறுகின்றது.

இதன் போது நிதிமோசடி இடம்பெறலாம் என சந்தேகிப்பதாகவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறாயினும் பிரச்சினை தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்போது தவறிழைத்தவர்களுக்கு தராதரம் பாராது நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சு மேலும் குறிப்பிடுகின்றது.


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மாட்டீன் ஒழுங்கையில் இலக்கம் 10 இல் அமைந்துள்ள ஒரு பரட்டக்காணி விற்பனைக்குண்டு. சுற்றுமதில், கிணறு, மலசலகூடம், அத்திபாரம் உண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு: 0779414256


# ஹிட்லருக்கு வணக்கம் கூறிய நபர் கைது

ஜேர்மனியில் உள்ள காசெல் என்ற நகரத்தில் நவீன நாஜி இயக்கத்தைச் சேர்ந்த நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.32 வயதான இந்த இளைஞன் இடதுசாரி கட்சியினரின் தேர்தல் பிரச்சாரத்தை எதிர்த்து ஹிட்லருக்கு வணக்கம் செலுத்தியுள்ளார். இவர் தீவிர வலதுசாரி இயக்கத்தைச் சேர்ந்தவர்.

இடதுசாரிகள் தனது தேர்தல் பிரச்சாரத்தின் போது அறிக்கையை அனைவருக்கும் கொடுத்தனர். அதனை வாங்கிப் படித்த இந்த இளைஞன் அவர்கள் மீது கோபம் கொண்டு வலது சாரிக்கு ஆதரவாக நாஜிகளை வாழ்த்தி ஹிட்லருக்கு வணக்கம் செலுத்தினான். இதனால் இவரைப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றத் தில் ஆஜர்படுத்தினர். இந்த வழக்கில் நீதிபதி இவனுக்கு 600 யூரோ அபராதம் விதித்தார். இந்த அபராதத்தை நாள் ஒன்றுக்கு பத்து யூரோ வீதம் அறுபது நாளைக்கு செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டார். இந்த நிலையில் இந்த இளைஞர் ஹிட்லர் பாணியில் வணக்கம் தெரிவித்தது சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கையாகக் கருதப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.


## ESOFT Computer Studies ( Pvt) Ltd.
The Leader in Professional ICT Education

O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.



02-01-2012
காலை 9.00
மாலை 3.00

DITEC Diploma in Information Technology
DISE Diploma in Software Engineering
DIBM Diploma in Business Management
DIWE Diploma in Web Engineering
DIE Diploma in English

SPECIAL OFFERS BEFORE 15TH JANUARY

ESOFT COMPUTER STUDIES
17/1, Brown Road Jaffna.
TP:021-222 4142 077 3099308

## அறிவித்தல்

**சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்**

2012 ஆம் ஆண்டுக்கான சாவகச்சேரி பிரதேச சபையின் நிகழ்ச்சித் திட்ட வரவு - செலவுத் திட்டம் 1987 ஆம் ஆண்டு பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் 15 ஆம் இலக்க 168 ஆம் பிரிவுக்கமைய தயாரிக்கப்பட்டு 27.12.2011 தொடக்கம் 31.12.2011 வரை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

சிற்றம்பலம் துரைராஜா,
தவிசாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை.

(சி/2897)(3.6.9)

## ஓராண்டு நினைவும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும்

### அமரர் வைரவன் நாகலிங்கம்



தோற்றம் : 02.02.1951
மறைவு : 08.12.2010

கடந்த 08.12.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவன் அமரர் வைரவன் நாகலிங்கம் அவர்களின் ஆண்டுத் திவச நிகழ்வுகள் இன்று (27.12.2011) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.00 மணி யளவில் அன்னாரின் இல்லத் தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்த னையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத் திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

விடற்தற்பளை றோட்,
உசன், மிருசுவில்.

குடும்பத்தினர்.

(12138) (10.7.6)

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை சந்திரசேகரம்

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)



ஆவரங்கால்கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சந்திரசேகரம் கடந்த 24.12.2011 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பராசக்தி, சிவசக்தி (கனடா) மற்றும் தணிகைநாதன் (ஜேர்மனி), யோகேஸ்வரி (ஹொலண்ட்), சிவகௌரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்சன் (கனடா), தணிகைச்செல்வி, முருகதாஸ் (ஹொலண்ட்), மணிவண்ணன் ஆகியோரின் அன்பு மாமனும் முத்தம்மா, காலஞ்சென்ற குலசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சிவாணந்தம் மற்றும் தவமணி (வவுனியா) ஆகியோரின் மைத்துனரும், நந்தகுமாரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2011) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கருதடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆவரங்கால் கிழக்கு புத்தூர்.

தகவல்:
கண்ணன் (மகன்).

## ஹெரோயின் கடத்தல் தமிழகவாசி கைது

இலங்கைக்கு ஹெரோயின் கடத்த முயன்ற சந்தேகநபர் ஒருவரை இராமநாதபுரம் பஸ் நிலையத்தில் வைத்து தமிழக 'கியூ' பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இராமேஸ்வரம் தங்கச்சிமடம் பகுதியைச் சேர்ந்த தன்ராஜ் என்னும் புஷ்பா தன்ராஜ் இலங்கைக்கு ஒன்றரை கிலோ ஹெரோயினை கடத்த முயன்றபோது 'கியூ' பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன் மதிப்பு இந்திய ரூபா ஒன்றரைக் கோடி என கணிப்பிடப்பட்டுள்ளது.

தன்ராஜ் மீது ஏற்கனவே போதைப்பொருள் கடத்திய பல்வேறு வழக்குகள் உள்ளன என தமிழக பொலிஸாரை மேற்கோள் காட்டி இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன

## தவறிவிட்டது

சங்கானையில் இருந்து சாவகச்சேரிக்கு செல் லும் வழியில் பஜாஜ் மோட்டார் சைக்கிள் பின் நம்பர் பிளேற் NPWY 4073 இலக்கத்தகடு தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் N. நாகேஸ்வரன், இலகடி, சங்கானை என்னும் விலாசத் துக்கு அல்லது TP. 0771644046 நம்பருக்கு தொட ர்பு கொள்ளவும்.

N. நாகேஸ்வரன், இலகடி, சங்கானை

## மரண அறிவித்தல்

### செல்வநாயகம் புனிதவதி



கோம்பசிட்டி, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் புனிதவதி நேற்றுமுன்தினம் 25.12.2011 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா பூதாத்தப்பிள்ளை தம்பதியரின் மகளும், இளையதம்பி- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், இளையதம்பி செல்வநாயகம் அவர்களின் அன்பு மனைவியும், பகவதியின் அன்புச் சகோதரியும், விக்னேஸ்வரன், ஸ்கந்தவரோதயன் (முகாமைத்துவ உதவியாளர், மாவட்ட செயலகம்), திருட்செல்வி, அருட்செல்வி (முகாமைத்துவ உதவியாளர், தெல்லிப்பளை பிரதேச செயலகம்), காலஞ்சென்ற குகனேசன் (யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்- திருநெல்வேலி) மற்றும் ஜெயச்செல்வி (ஆசிரியர், ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்), சிவனேசன் (Holand) ஆகியோரின் அன்புத் தாயும், விஜயராணி, வசந்தமலர், சுப்பிரமணியம், திரிலோகநாதன், காலஞ்சென்ற மாலினி மற்றும் மகேந்திரன், பிரகாமி ஆகியோரின் மாமியும், பகவதி, இளமாறன், சுகிர்தா, பவித்திரா, பிரணவன், சஞ்சீவன், மணிவர்மன், பிரவீனா, மணிமோகன், பார்த்தீபன், தர்சிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (30.12.2011) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணியளவில் பலாலி வீதி, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம் எனும் முகவரியிலுள்ள அவரது மகன் (விக்னேஸ்வரன்) இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் விலங்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி கணபதிப்பிள்ளை அன்னமுத்து

(ஓய்வு பெற்ற ஆசிரியை, அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை) (புஸ்பராணி -பேபி ரீச்சர்)



அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை அன்னமுத்து அவர்கள் (ஓய்வுபெற்ற ஆசிரியை, அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை) நேற்று திங்கட்கிழமை (26.12.2011) இறைபதம் எய்தினார்.

அன்னார் வில்லிசைப் புலவர் கலாவிநோதன் கே.என். கணபதிப்பிள்ளை (சின்னமணி) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம்- செல்லம்மா தம்பதியரின் மகளும், மாதனையைச் சேர்ந்த நாகலிங்கம்- இராசம்மா தம்பதியரின் மருமகளும், கலைச்செல்வன்(கனடா), கலைமதி (கனடா), கலைரூபன் (கனடா), கண்ணகி (ஆசிரியை, கஜமுகன் பாலர் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயும், விமலலோஜினி (கனடா), பரமேஸ்வரன் (கனடா), ஜெயந்தினி (கனடா), புவனேந்திரன் (புருசோத்மன் மரத் தொழிலகம், அச்சுவேலி) ஆகியோரின் அன்பு மாமியும், கார்த்திகா (கனடா), லோஜன் (கனடா), மைதிலி (கனடா), விசாகன் (கனடா), அபிநயா(கனடா), கலைமேனன், கலைமாறன், புருஷோத்மன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"கலையகம்"
உலவிக்குளம் பிள்ளையார்
கோயிலடி, அச்சுவேலி வடக்கு.

தகவல்: கணவர்
க.நா.கணபதிப்பிள்ளை
(சின்னமணி)

## தவறிவிட்டது

செல்லத்துரை தெய்வநாதன் என்பவரது N.I.C, சாரதி அனுமதிப் பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் யாழ்ப்பாணத்துக்கும் பளைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே-
0776501073,
0770665755

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 16.12.1959 | உதிர்வு 28.11.2011

*அமரர்*

### சுப்பிரமணியம் திவாகரன்

*கடந்த 28.11.2011 ஆம் திகதி அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் பிரிவை அறிந்தவுடன் ஓடோடி வந்து அத் தருணத்தில் செய்ய வேண்டிய கருமங்களை செவ்வனே செய்து உதவிய அன்புள்ளங்களுக்கும் மற்றும் உள்நாட்டிலும் வெளிநாடுகளில் இருந்தும் நேரில் வந்து கலந்து கொண்டோருக்கும் ஆறுதல் கூறி பல வழிகளில் உதவிகள் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் இறுதி வரை உதவிகள் புரிந்த உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மலர் வளையம் வைத்தும், கண்ணீர் அஞ்சலி அச்சிட்டு வெளியிட்டு அஞ்சலி செலுத்தியோருக்கும், தொலைபேசி, மின்னஞ்சல் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் நயினாதீவு கங்காதரணி தீர்த்தக் கரையில் நடைபெற்ற அந்தியேட்டி நிகழ்விலும் கொழும்பில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்ற வீட்டுக் கிருத்தியம், ஆத்ம சாந்திப் பிரார்த்தனை, மதிய போசனம் ஆகிய நிகழ்வுகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு-*

*நாளை [28.12.2011] புதன்கிழமை 3ஆம் வட்டாரம், நயினாதீவில் உள்ள எமது இல்லத்தில் அன்னாரின் நினைவாக நடைபெறும் மதிய போசன நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

27, ஜெயாறோட், பம்பலப்பிட்டி கொழும்பு-4,
3ஆம் வட்டாரம் நயினாதீவு.

குடும்பத்தினர்.

இதோ! Special Offer Special Offer Special Offer Special Offer

27.12.2011 - 31.12.2011 ஆகிய காலப்பகுதியில் பொருள்களைக் கொள்வனவு செய்வோர்க்கு விசேட சலுகையுடன் மாதாந்த இலகுதவணைக் கட்டண முறையிலும் பெற்றுக்கொள்ள உடனே நாடுகள்....

இப்போது 2 வருட உத்தரவாதத்துடன்...

EPSON
EXCEED YOUR VISION

நீங்கள் கொள்வனவு செய்யும் EPSON உற்பத்திபொருளை வாங்கி ஓல்ட் ட்ரபோட்டில் நடைபெறும் மான்செஸ்ரர் யுனைரெட் விளையாட்டுப் போட்டியை பார்ப்பதற்கான அனைத்து செலவையும் பெற்று அதிஷ்டசாலி ஆகுங்கள்

D-Link
3 வருட உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளுங்கள்

DCP
DCP UPS ஐ
2 வருட உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளுங்கள்



திருமுருகன் கொம் நெற்
இல. 259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 222 7835

Debug Computer Peripherals Authorized Distributor

கிளைகள்: இல.18, பிரதான வீதி, நெல்லியடி. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு - 2. இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. இல. 05, திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.

# சதுரங்க விழா ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.27

யாழ்ப்பாணம் சதுரங்கச் சம்மேளனம் நடத்தும் யாழ்.சதுரங்க விழா நேற்றுத் திங்கட்கிழமை காலை யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஆரம்பமானது.



நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பமான யாழ்.சதுரங்க விழா எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை வரை இடம்பெறவுள்ளது.

நேற்றுச் சர்வதேச தரப்படுத்தலில் இடம்பெறுவதற்காக நடத்தப்படும் சர்வதேச தரப்படுத்துதல் சதுரங்கப் போட்டி மற்றும் 9 வயது பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான ருவென்ரி 20 சதுரங்கப் போட்டி என்பன இடம்பெற்றன.

இதில் சர்வதேச தரப்படுத்தலுக்கான சதுரங்கப் போட்டியின் முதலாவது சுற்றினை நல்லூர் பிரதேச சபை செயலாளர் எஸ்.சாந்தசீலன், யாழ்ப்பாணச் சதுரங்கச் சம்மேளனத்தின் செயலாளர் ரி.ராஜசிங்கம் ஆகியோர் காய்களை நகர்த்தி ஆரம்பித்து வைத்தனர். (த-23)



தென்னிந்தியத் திருச்சபையின் வரணி பகல் பராமரிப்பு நிலைய சிறார்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டியின் போது மாணவர்கள் அணிவகுப்பு மரியாதை செய்கின்றனர். பாடசாலை ஆசிரியர் திருமதி.ந.லலிதா அருகில் காணப்படுகிறார். (த-122)

## மத்தியஸ்தர் பரீட்சை

உதைபந்தாட்ட மத்தியஸ்தர் தரம் I, II, III பரீட்சை ஜனவரி மாதம் 7 ஆம் திகதி யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

ஜனவரி மாதம் 6 ஆம் திகதி செயன் முறை விளக்கமும், 7 ஆம் திகதி உடற் தகுதிகாண் பரீட்சை, எழுத்துப் பரீட்சை என்பனவும் இடம்பெறவுள்ளன.

இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் இந்தப் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர். (த-23)

# யாழ்.மத்தியஸ்தர் அணி வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ.27

யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் அணிக்கும், விளையாட்டு அமைச்சின் யாழ். விளையாட்டு உத்தியோகத்தர் அணிக்கும் இடையில் இடம்பெற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போடியில் யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் அணி வெற்றியீட்டியுள்ளது.



யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த உதைபந்தாட்டப் போட்டியினை யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஜே.எவ்.ஏ.ரூசிங்கம் ஆரம்பித்து வைத்தார்.

போட்டி ஆரம்பமாகிய போது யாழ்.உதைபந்தாட்ட அணியும் யாழ்.விளையாட்டு உத்தியோகத்தர் அணியும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தின.

இந்த வேளையில் யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் அணி ஒரு கோலைப் போட்டு ஆட்டத்தை விறுவிறுப்படையச் செய்தது. இதன் பின்னர் மத்தியஸ்தர் அணி மேலும் மூன்று கோல்களை அடுத்தடுத்துப் போட்டது.

பதிலுக்கு யாழ்.விளையாட்டு உத்தியோகத்தர்கள் அணியும் மூன்று கோல்களைப் போட்டது. ஆட்ட முடிவில் மத்தியஸ்தர் அணி 4:3 எனும் கோல் கணக்கில் யாழ்.விளை யாட்டு உத்தியோகத்தர் அணியை வென்றது. (த-23-313)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.27

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவையொட்டி 11பேர் பங்குகொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட் டித் தொடர் வவுனியா வைரப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்று வருகின்றது.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் சீர்திருத்தம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஈஸ்வரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)



யாழ்.சதுரங்கச் சம்மேளனம் நடத்தும் யாழ்.சதுரங்க விழா நேற்று திங்கட்கிழமை யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஆரம்பமானது.

இதில் சர்வதேச தரப்படுத்தலுக்கான சதுரங்கப் போட்டியில் யாழ்ப்பாணச் சதுரங்கச் சம்மேளனம் சார்பாக பங்கு கொள்ளும் வீரர்கள், வீராங்கனைகள் இவர்கள். (த-23)

## பயிற்றுநர்களின் விவரம்

வலி. வடக்கு, டிசெ. 27

மஹிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழ் பாடசாலை மட்டத்தில் விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்யும் முகமாக தெரிவு செய்யப்பட்ட ஆறு விளையாட்டுக்களுக்கான பயிற்றுநர்களை வலய மட்டத்தில் தெரிவு செய்யும் செயல் திட்டத்தின் கீழ் முல்லைத் தீவு கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட உடற்பயிற்சி ஆசிரியர்களின் விவரம் வருமாறு:

றக்பீ - எஸ்.ஸ்ரீதரன் - முல்லைத்தீவு பாரதி வித்தியாலயம், உதைபந்தாட்டம் - பி.பாலசங்கர் - முல்லைத்தீவு குமிழமுனை மகா வித்தியாலயம், ஜிம்னாஸ்ரிக் - வி.சசிகரன் - முல்லைத்தீவு கள்ளப்பாடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. கரப்பந்தாட்டம் - எஸ்.ஜெயசீலன் - உடையார்கட்டு மகா வித்தியாலயம், வலைப்பந்தாட்டம் - திருமதி எ.பகீரதன் - வற்றாப்பளை மகா வித்தியாலயம், மெய்வன்மை - எம.கேசவன் - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி(ம-86)

# லண்டன் ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்வதே எமது இலக்கு- பூபதி

லண்டன் ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்வதே இலக்கு எனஇந்தியாவின் மகேஷ் பூபதி ரோகன் போபண்ணா ஜோடி தெரிவித்துள்ளது.

ரெனிஸ் இரட்டையர் பிரிவு போட்டிகளில் இந்தியாவின் லியாண்டர் பயஸ்-மகேஷ் பூபதி இணைந்து விளையாடினர். சமீபத்தில் இவர்கள் இருவரும் பிரிந்தனர். இதனால் அடுத்த மாதம் நடக்கவுள்ள சென்னை ஓபன் தொடரில் பயஸ் செர்பியாவின் ஜான்கோ டிப்சரிவிச்சுடன் இணைந்தார். பூபதி சகவீரர் ரோகன் போபண்ணாவுடன் ஜோடி சேர்ந்தார்.

இதுகுறித்து மகேஷ் பூபதி கூறியதாவது: இனிவரும் தொடர்களில் சகவீரர் ரோகன் போபண்ணாவுடன் இணைந்து விளையாட இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. அடுத்த ஆண்டு லண்டனில் நடக்கவுள்ள ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வெல்வதே எங்களது இலக்கு. இதற்கு இன்னும் நிறைய நாள்கள் இருப்பதால் அதற்கு முன் நடக்கவுள்ள போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும்.

ஓர் அணியாக இணைந்து ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டு விளையாடுவதன் மூலம் இரட்டையர் பிரிவு போட்டியில் சாதிக்க முடியும். ஏற்கனவே டேவிஸ் கிண்ணம் போட்டியில், போபண்ணாவுடன்சேர்ந்து விளையாடி இருப்பதால் எங்களின் பலம்பலவீனம் குறித்து நன்குஅறிந்திருக்கிறோம். எனவே லண்டன் ஒலிம்பிக் போட்டியை கருத்தில் கொண்டு, போதுமான பயிற்சி மேற்கொள்ள உள்ளோம்.

முன்னதாக பயசுக்கு எதிராக 20 போட்டியில் விளையாடி உள்ளேன். எனவேஅடுத்து வரவுள்ள சென்னை ஓபனில் பயசுக்கு எதிராக விளையாட இருப்பதில் ஆச்சர்யம் ஒன்றும் இல்லை என்றார்.

## 10000 ஓட்டங்களை கடந்து மஹேல சாதனை



ரெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் பத்தாயிரம் ஓட்டங்களைக் கடந்தமுதல் இலங்கை வீரர்என்ற சாதனையை மஹேல ஜயவர்த்தன நேற்று நிகழ்த்தினார்.

இலங்கை தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் டேர்பன் நகரில் இடம் பெற்று வரும் ரெஸ்ட் கிரிக்கெட் தொடரின் இரண்டாவது போட்டியின் போதே அவர் இந்தச் சாதனையை நிலைநாட்டினார்.

உலகிலேயே 10 ஆயிரம் ரெஸ்ட் ஓட்டங்களைக் கடந்த 9ஆவது வீரர் மஹேல ஜயவர்த்தன என்பது குறிப்பிடத்தக்கது. அசைக்க முடியாத முதலிடத்தில் இந்திய அணி வீரர் சச்சின் டெண்டுல்கார் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# பாகிஸ்தான் ஹொக்கியில் வென்றது

நட்பு ஹொக்கி போட்டியில், பாகிஸ்தான் அணி, சீனாவை 2-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

பாகிஸ்தான் சென்ற சீன ஹொக்கி அணி, நான்கு போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்றது. முதல் மூன்று போட்டியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி, ஏற்கனவே தொடரை கைப்பற்றியது. நான்காவது மற்றும் கடைசி ஆட்டம், லாகூரில் நேற்று முன் தினம் நடந்தது.

இதில் அபாரமாக ஆடிய பாகிஸ்தான் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. பாகிஸ்தான் சார்பில் ஷகீல் அபாசி, பரீத் அகமது தலா ஒரு கோல் அடித்தனர். சீன அணிக்கு டாங் யங் ஆறுதல் தந்தார். இந்த வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி 4-0 என தொடரை முழுமையாக கைப்பற்றி, கிண்ணத்தை வென்றது. (த-23)

# தோற்றது இந்தியா

உலக செஸ் சம்பியன்ஷிப் தொடரின், ஆறாவது சுற்றில் இந்திய அணி 1 - 3 என்ற கணக்கில் ரஷ்யாவிடம் தோல்வி அடைந்தது.

துருக்கியில் உள்ள மார்டின் நக ரில் பெண்களுக்கான உலக செஸ் சம்பியன்ஷிப் தொடர் நடக்கிறது. இதில் இந்தியா சீனா, ஆர்மினியா உள்ளிட்ட பத்து அணிகள் பங்கேற்கின்றன. இதன் ஆறாவது சுற்று போட்டியில் இந்திய அணி ரஷ்யாவை எதிர்கொண்டது.

இந்தியா சார்பில் கொனேரு ஹம்பி ஹரிகா துரோணவள்ளி தங்களது ஆட்டத்தைச் சமன் செய்தனர். சவுமியா சுவாமிநாதன்-தனியா சச்தேவ் ஆகியோர் தோல்வி அடைந்தனர். இதன் மூலம் இந்திய அணி 1 - 3 என்ற கணக்கில் தோல்வி அடைந்தது. (த)

# சர்ச்சைகளுடன் ஆரம்பமானது ஆட்டம்

**இந்திய அணியுடனான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத் தின் முதல்நாள் ஆட்டமுடிவில் ஆஸ்திரேலிய அணி 6 இலக்குகள் இழப்பற்கு 277 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. உமேஷ் யாதவ், சகீர்கான் உள்ளிட்ட இந்திய வேகங்கள் கைகொடுக்க ஆஸ்திரேலிய அணியை ஓரளவுக்கு கட்டுப்படுத்தியது.**

சர்ச்சைகள் இல்லாத தொடராக இந்தத் தொடர் அமைய வேண்டும் என்று விரும்புவதாக இந்திய அணித்தலைவர் மஹேந்திர சிங் டோனி கூறியிருந்தார். எனினும் தீர்ப்பு மீளாய்வு முறைமையை (யு.டி.ஆர்.எஸ்.) பயன்படுத்துவதற்கு இந்திய அணி மறுப்பு தெரிவித்தமை தொடரின் முதலாவது சர்ச்சையாக அமைந்தது.

மெல்பேர்னில் நேற்று ஆரம்பமான இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் குறிப்படத்தக்களவு சிறப்பாக விளையாடின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணித்தலைவர் மைக்கல் கிளார்க் முதலில் துடுப்பாடத் தீர்மானித்தார்.

ஆஸ்திரேலிய அணிக்கு டேவிட் வோர்னர், கோவன் ஜோடி சுமாரான தொடக்கம் கொடுத்தது. ஆஸ்திரேலிய அணி 46 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது வோர்னரையும் (37) ஷோன் மார்ஷையும் (0) அடுத்தடுத்து இழந்து நெருக்கடிக்குள்ளானது. 3 ஆவ்து இலக்குக்காக இணைப்பாட்டமாக ரிக்கி பொண்டிங்கும் அறிமுக வீரரான எட் கோவனும் 113 ஓட்டங்கைளப் பெற்றனர். டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தனது இடத்தை தக்கவைத்துக் கொள்ள பாடுபடும் ரிக்கி பொண்டிங் 62 ஓட்டங்களைப் பெற்றார். நான்காவது இலக்குக்காக கோவனுடன் இணைந்த அணித்தலைவர் மைக்கல் கிளார்க் நிதானமாக ஓட்டங்களைச் சேர்த்தார். சகீர்கான் வீசிய ஆட்டத்தின் 65 ஆவது பந்து பரிமாற்றத்தின் 2 ஆவது பந்தில், கிளார்க் 31 ஓட்டங்களுடன் நேரடியாக இலக்கு சரிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார். அடுத்த பந்தில் டெஸ்ட் கிரிக்கெட்டின் தனது இருப்புக்காக போராடும் மைக்கல் ஹஸி முதல் பந்துவீச்சிலேயே ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார். தொடர்ச்சியாக இரண்டு இலக்குகளை சரித்த சகீர் ஹற்றிக் வாய்ப்புக்காக காத்திருந்தார். இருப்பினும் நான்காவது பந்தை சமர்த்தியமாக எதிர்கொண்ட ஹடின், ஒரு ஓட்டம் எடுத்தார். இதனால் சகிர்கானின் 'ஹற்றிக்' வாய்ப்பு பறிபோனது. பொறுப்பாக ஆடிய தொடக்க வீரர் எட் கோவன் (68) அஷ்வின் சுழலில் சிக்கினார்.

எட் கோவன் 68 ஓட்டங் களைப் பெற்றார். 1983 இல் வெய்ன் பலிப் தனது முதல் டெஸ்ட் ஆட்டத்தில் ஆரம்பத்துடுப்பாட்ட வீரராக களமிறங்கி 159 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். அதன்பின் முதல் டெஸ்ட் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கி அதிக ஓட்டங்களைப் பெற்ற ஆஸ்திரேலிய வீரர் எட் கோவன் ஆகும்.

ஒரு கட்டத்தில் 3 இலக்குகள் இழப்பற்கு 205 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஆஸ்ரேலிய அணி அடுத்த 18 பந்துகளில் மேலதிக 9 ஓட்டங்களுக்கு மேலும் 3 இலக்குகளை இழந்து, 214 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்திருந்தது.


இறுதியில் ஹடின், பீற்றர் சிடில் இணைந்து மேலதிக இலக்கு இழக்கப்பாடமல் தவிர்த்து சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினர். நேற்றைய ஆட்ட நேர நிறைவில் ஆஸ்திரேலிய அணி 6 இலக்குகளை இழந்து 277 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் ஹடின் 21 ஓட்டங்களுடனும் சிடில் 34 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர். இந்திய பந்துவீச்சாளர்களில் உமேஸ் யாதவ் 96 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் சகீர்கான் 49 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் ரவிச்சந்திரன் அஸ்வின் 71 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் கைப் பற்றினர்.


பரிதாப நிலையிலுள்ள மைக்கல் ஹஸியை நோக்கி சகீர்கான் வீசிய பந்து ஹஸியை கடந்து இலக்குக் காப்பாளர் டோனியின் கைகளுக்குள் சென்றது. இந்திய அணி முறையீடு செய்தபோது நடுவர் விரலை உயர்த்தி, ஹஸி ஆட்டமிழந்தாக அறிவித்தார்.

ஆனால் அந்தப் பந்து ஹஸியின் துடுப்பிலோ கையுறையிலோ படவில்லை என்பதை தொலைக்காட்சி மீள் ஒளிபரப்புகள் காட்டின. இதேபோல் அறிமுக வீரர் எட் கோவனும் கள நடுவரின் தவறான தீர்ப்பனால் ஆட்டமிழந்தார்.

இவற்றை சமப்படுத்துவதுபோல் ஆஸ்திரேலிய வீரர் பரட் ஹடின் 20 ஓட்டங்களைப் பெற்றபோது அவர் எல்.ப.டபிள்யு முறையில் ஆட்டமிழந்ததாக அறிவிக்கப்படும் சாத்தியம் ஏற்பட்டது. ஆனால் நடுவர் அந்த முறையீட்டை நிராகரித்தார்.

தீர்ப்பு மீளாய்வு முறைமை (யு.டி.ஆர்.எஸ்.) அமுலில் இல்லாததால் இந்தத் தீர்ப்புகள் குறித்து மூன்றாவது நடுவரின் தீர்ப்பை கோரும் வாய்ப்பு வீரர்களுக்கு கிட்டவில்லை. இரு அணிகளும் சம்மதித்தால் மாத்திரமே யு.டி.ஆர்.எஸ். முறைமை அமுல்படுத்தப்பட முடியும். ஆனால் இந்திய அணி இதற்கு சம்மதிக்க மறுத்தது. (15)







ஒற்றை ஆளாக அணியைத் தாக்கி நிறுத்தப் போராடும் திலான் சமரவீர.

**இலங்கை அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் டேர்பனில் நேற்று ஆரம்பமானது. முதலாவது டெஸ்ட் ஆட்டத்தை தென்னாபிரிக்க அணி கைப்பற்றிய நிலையில் இரண்டாவது ஆட்டம் தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணியின் தலைவர் ரி.எம்.டில்ஷான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.**

# முட்டுக் கொடுக்கிறார் சமரவீர

*சமரவீர, சந்திமாலிடையேயான புதிய சாதனை இணைப்பாட்டத்தின் உதவியுடன் இலங்கை அணி, தென்னாபரிக்காவுக்கு எதிராக நேற்றைய ஆட்ட நேர முடிவில் 7 இலக்குகள் நஷ்டத்துக்கு 289 ஓட்டங்களைப் பெற்றது.*

இலங்கை அணியில் டினேஸ் சந்திமால் அறிமுக வீரராக இணைக்கப்பட்டதுடன் தென்னாபிரிக்க அணியின் வேகப் பந்து வீச்சாளர் பிளென்டர் காயம் காரணமாக நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக அறிமுக வீரராக டீ லாங்கே இணைக்கப்பட்டிருந்தார்.

இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக பரணவிதாரன, டில்ஷான் களமிறங்கினர். வழமை போன்று அணிக்கு சுமாரான தொடக்கத்தையே இந்த ஜோடி வழங்கியது. அணி 35 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது பரணவிதாரன 12 ஓட்டங்களுடன் அறிமுகப் பந்து வீச்சாளர் டீ லாங்கேயின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த சங்ககார மூன்று பந்துகளை மட்டும் சந்தித்து ஓட்டமெதனையும் பெறாத நிலையில் ஆட்டமிழந்து மீண்டும் ஏமாற்றினார்.

அதன்பின்னர் இணைந்த டில்ஷான், மஹேல அணியின் ஓட்ட எண்ணிக்கையை 50 ஓட்டங்களைத் தாண்ட வைத்தனர். இவர்கள் இருவரிடையே 37 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் டில்ஷான் 47 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து அரைச்சத வாய்ப்பை தவறவிட்டார். தொடர்ந்து சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த மஹேல ஜெயவர்தனவும் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

117 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்த நிலையில் இணைப்பாட்டத்தை தொடங்கிய சமரவீர, மத்தியூஸ் ஜோடி தென்னாபிரிக்காவின் பந்து வீச்சை சமாளித்து ஓட்டங்களைச் சேர்த்தது. இணைப்பாட்டமாக 45 ஓட்டங்கள் பகிரப்பட்ட போது மத்தியூஸ் 30 ஓட்டங்களுடன் டீ லாங்கேயின் பந்து வீச்சில் அவரிடமே பிடி கொடுத்து ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதன் பின்னர் இணைப்பாட்டத்தை தொடங்கிய சமரவீர, சந்திமால் ஜோடி தென்னாபிரிக்காவுக்கு தலையிடி கொடுத்தது. இலங்கையை 200 ஓட்டங்களுக்குள் சுருட்ட நினைத்த தென்னாபிரிக்காவின் எண்ணத்துக்கு மண் அள்ளிப் போட்டது. சிறப்பான இணைப்பாட்டத்தை இந்த ஜோடி பகிர்ந்தது. சமரவீர 28 ஆவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.

மறுமுனையில் அறிமுக வீரராகக் களமிறங்கி துடுப்பெடுத்தாடிய டினேஸ் சந்திமாலும் பதிலுக்கு தனது முதலாவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். இந்த ஜோடி 2006 ஆம் ஆண்டு இலங்கையில் வைத்து தென்னாபிரிக்காவுக்கு எதிராக மஹேல, கப்புக்கெதர 6 ஆவது இலக்குக்காக பகிர்ந்த 105 ஓட்டங்களை முறியடித்து தென்னாபிரிக்காவுக்கு எதிராக புதிய ஆறாவது இலக்குச் சாதனையை படைத்தது.

சிறப்பாக 111 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் சந்திமால் 58 ஓட்டங்களுடன் மோர்கலின் பந்து வீச்சில் தேவையற்ற 'ஷொட்' அடிக்க முற்பட்டு வீணாக ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த பெரேரா நேற்றைய ஆட்டத்தின் இறுதிவரையில் களத்திலிருந்து 12 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். மறுமுனையில் சமரவீர ஆட்டமிழக்காமல் 86 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

நேற்றைய ஆட்ட நேர முடிவில் இலங்கை அணி 89.3 பந்து பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 289 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. பந்து வீச்சில் ஆபிரிக்க அணியின் அறிமுக வீரராக விளையாடி வரும் டீ லாங்கே 60 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், மோர்கல் 55 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், இம்ரான் தகீர் 87 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினையும் கைப்பற்றினார். (15)

**SAAMSON ENGLISH** 3 மாத சனி, ஞாயிறு பயிற்சி நெறி

புத்தகம், CD எதுவுமின்றி மாணவர்களை நேரடியாக ஆங்கில உரையாடற் பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலம் மூன்று மாதங்களில் எவரையும் சரளமாக தமிழைப் போல ஆங்கிலத்திலும் பேசப் பயிற்சியளிக்கும் Saamson அவர்களின்...

**புதிய பயிற்சிப் பட்டறை ஆரம்பம்**

சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு (I) 8-10 பிரிவு (III) 01-03
பிரிவு (II) 10-12 பிரிவு (IV) 03-05

★ 02/01/2012 இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.
★ ஒவ்வொரு பிரிவிலும் மிகச் சில இடங்களே இன்னும் உள்ளன.

ஒரு பிரிவில் 20 பேருக்கு மட்டுமே அனுமதி

**SAAMSON ENGLISH** 279, மணிக்கூட்டு வீதி, யாழ். (ஆஸ்பத்திரி பின்புறம்). தொ.பே-0776214567

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# சபீண்டிகரண அழைப்பு



கடந்த 27.11.2011
ஞாயிற்றுக்கிழமை அன்று
சிவபதமடைந்த எங்கள் குடும்பத்
தலைவர்
அமரர்
**திருநாவுக்கரசு ஜெகதீஸ்வரன்**
(ஈசன்)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (27.12.2011) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அமரரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

579, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார்
கோயிலடி, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

**வங்கிகளுக்கான வேலை வாய்ப்பு விண்ணப்பம்**

வங்கி பயலுனர் பதவிக்கான விண்ணப்பங்களை Online மூலம் அனுப்பிக் கொள்ளலாம்.

ABRUL GLOBAL EXPRESS
T.P : 0212226113
01, பிறவுண் வீதி
நாவலர் வீதி சந்தி,
யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்கள்

## ஜீவானந்தன் துஷாரி



கொழும்பு, பொரளையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Livry Gargan ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ஜீவானந்தன் துஷாரி கடந்த (23.12.2011) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பிரபாகரன் மற்றும் காலஞ் சென்ற லலிதா தம்பதிகளின் அருமை மகளும் ஜீவானந்தனின் (ஜீவன், Khagi Super March'e Maxdormoy, நல்லூர் ஸ்தான கழக ஆரம்பகால உறுப்பினர்) அன்பு மனைவியும் ஆகாஷ், அனித், அனுஸ் ஆகியோரின் பாசமிகு தாயும் சுமனின் (பிரான்ஸ்) சகோதரியும் திரு,திருமதி கந்தசாமியின் (Post-master) மருமகளும் ஜெயந்தி (பிரான்ஸ்), சாந்தி (பிரான்ஸ்), வித்தியரூபன் (லண்டன்) ஆகி யோரின் மைத்துனியும் ஜெகதீஸ்வரன் (பிரான்ஸ்), ஏஞ்சல் (பிரான்ஸ்), செந்தமிழ்ச் செல்வி (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிரான்ஸ்.*
*0033141538578*
*0033665146768*

*தகவல்:*
**க.இராசலிங்கம்**
**ஜீவன் -(கணவர்)**

## திருமதி தர்மலிங்கம் ருக்மிணி



திருப்பூர் மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் ருக்மிணி நேற்று (26.12.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் ச.தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும் அருந்தவராணி, தனராசா, தேவகுமார் ஆகியோரின் அன்புத் தாயும் புஸ்பராசா, செல்வராணி, கமலி ஆகியோரின் அன்பு மாமியும் சிவரூபன், சிவதர்சன், அபிஷேக், சிரேரா ஆகியோரின் அன் புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.12.2011) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 3 மணியளவில் ஊறணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிரந்தர முகவரி: திருப்பூர், மயிலிட்டி
தற்காலிக முகவரி : ஆதிகோயிலடி,
வல்வெட்டித்துறை.

*தகவல்:*
**த.தனராசா** *(மகன்)*

# கூரிய ஆயுதங்களால் தாக்கியே பிரிட்டிஷ் பிரஜை படுகொலை

தங்காலை மெடில்ல பகுதியிலுள்ள ஹோட்டலில் உயிரிழந்த பிரிட்டிஷ் பிரஜையின் கொலைக்குக் கூரிய ஆயுதங்களே பயன்படுத்தப்பட்டிருப்பதாக மாத்தறை பெரியாஸ்பத்திரியின் நீதிமன்ற மருத்துவ அதிகாரி டாக்டர் எச்.கே.கே. விஜேவீர தெரிவித்திருக்கிறார்.

பிரிட்டிஷ் பிரஜையின் தலையில் துப்பாக்கிச்சூட்டுக் காயம் இருந்தாலும் அது ரி-56 ரக துப்பாக்கிச்சூட்டால் ஏற்பட்டதல்லவென்று மருத்துவர் தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

மேற்படி துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் நடைபெற்ற இடத்தில் ரி-56 ரக துப்பாக்கிகளின் வெற்றுத்தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டபோதும், குறிப்பிட்ட வெளிநாட்டவரைச் சுடுவதற்கு வேறு ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டிருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

இந்தக் கொலைச் சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள் பயன்படுத்திய வாகனம் மீட்கப்பட்டுள்ளது. அதன் உரிமையாளரும் வித்தாரந்தெனிய பகுதியில் வைத்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும், கொழும்பிலிருந்து தங்காலை சென்றுள்ள சிஐடியினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண நேற்றுத் தெரிவித்தார்.

# குழப்பமான பெறுபேற்றுக்கு கண்டனம்

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை ஏற்றுக் கொள்ளாதீர்கள் - என்று மக்களிடம் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இப்பரீட்சைப் பெறுபேறுகளை அரசு மீளவும் மதிப்பீடு செய்யவேண்டும் என்றும் மாணவர் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

களனிப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சஞ்ஜீவ பண்டார மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

ஞாயிற்றுக்கிழமை வெளியான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் தரவரிசையில் பிழைகள் காணப்படுகின்றன என சுமார் 100 மாணவர்கள் தமக்கு தெரிவித்தனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை -இந்த முறை உயர்தரப் பெறுபேறுகள் தாமதாக வெளி வந்த போதும் அவை குளறுபடிகளுடன் வெளியாகியிருப்பது கண்டிக்கத்தக்கது என்று இலங்கை ஆசிரியர் சங்கம், வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழு என்பனவும் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளன. அத்தோடு மாணவர்களைத் தொடர்ந்தும் குழப்பத்தில் ஆழ்த்தாது தவறான பெறுபேற்றை இரத்துச் செய்து சீரான பெறுபேற்றை உடனடியாக வெளியிடுமாறும் அவை கோரியுள்ளன.

(ங-சி)

**மண மகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம், வயது 32, மணமகனுக்கு மணமகள் தேவை. போரில் கணவனை இழந்தவர்களும் விரும்பினால் ஏனையோரும் தொடர்பு கொள்ளவும்.0776688242

**THE SCINCE POINT**
KANNATHIDDY ROAD, JAFFNA.

**DAY CLASS**
**CHEMISTRY**
பிரிவு II ஆரம்பம்
இன்று முதல் தொடர் கருத்தரங்கு நேர அட்டவணை அலுவலகத்தில்
BY: அன்பு

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு
**விசேட விலைக் கழிவுடன்**
**கிற்றார் (Guitars) விற்பனைக்கு**
**Electric Guitars & Box Guitars**
7000/= ரூபாவிலிருந்து
**Kumar Agent**
133/3, Power House Road, Jaffna.
தொடர்பு: 0212220867/0777917568

# திருமுருகன்

**திருமண மண்டபமும் பல்பொருள் அங்காடியும்**

கரந்தன் வீதி (கந்தசாமி கோயில் வடக்கு வீதி), நீர்வேலி.

**தைப் பொங்கல், புத்தாண்டை முன்னிட்டு மண்டபத்துக்கு ரூபா 25,000/= அறவிடப்படும். (மேளம், கிரியைப் பொருள், பொக்ஸ் யாவும் உள்ளடங்கலாக)**

மண்டபத்தில் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, பிறந்த நாள் விழா, சமய நிகழ்வு, பொதுநிகழ்வுகள் யாவும் நடத்தி மகிழலாம். உணவு, சிற்றுண்டி, சோடா, ஐஸ்கிறீம், குளிர்பானம் யாவும் ஒழுங்கு செய்து தரப்படும். சகல பொருள்களையும் குறித்த விலையில் எந்நேரமும் பெற்றுக்கொள்ளலாம்.

கோயில் அபிஷேகப் பொருள்கள் யாவும் கிடைக்கும். மேலும் முத்துத் திருவாசி, ரெடிமெற் நாகபடம் யாவும் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்.

சேவை நேரம்: காலை 7 மணிமுதல் பி.ப.6 மணிவரை
திருமுருகன்
*நீர்வேலி.*

# மரண அறிவித்தல்கள்



"கலைஞானகேசரி"
## S.K.தங்கவடிவேல்(J.P)

இளைப்பாறிய விலைமதிப்புப் பரிசோதகர்,
பதிவு செய்யப்பட்ட மதிப்பீட்டாளர்

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட S.K.தங்கவடிவேல் கடந்த (24.12.2011) சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - செல்லம்மாள் தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான தசரதர்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும், சுதந்தரி (ஓமான்), Drநாரணி (கொழும்பு தேசிய வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான ஆனந்த வடிவேல், தங்கராணி, கனகராணி மற்றும் இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுரேஷ்குமார் (கணக்காளர்), Dr.அரவிந்தன் (கொழும்பு தேசிய வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனும், லீலலோசினி, வர்ஷன், அவனிஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2011) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

மணிபல்லவம் பழைய வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
தகவல்:
குடும்பத்தினர்.



## *தம்பிஜயா சிவராஜா*

இளைப்பாறிய அதிபர் யா/ திருநெல்வேலி
முத்துத்தம்பி மகாவித்தியாலயம்

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், கோயில் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா சிவராஜா 25.12.2011 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஜயா- செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும், சுப்பிரமணியம்- நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சாரதா தேவி (ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி) பாசமிகு கணவரும், நிருஜா, ஹம்சாயி, உமாராஜி ஆகியோரின் பாசமிகு தந்தையும், மயூரனின் (கனடா) அன்பு மாமனும், காலஞ்சென்ற தங்கவேலின் சகோதரனும், தேவகி, மகேந்திரன் (கனடா), சகுந்தலாதேவி(கனடா), மனோகரன் (கனடா), சக்திதேவி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
கோயில் வீதி, நல்லூர்.
குடும்பத்தினர்.

## இராமநாதன் நல்லையா



சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும், நவக்கிரி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் நல்லையா நேற்று (26.12.2011) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன் - நாகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் செல்வராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சுகிர்தம் தம்பதியரின் மருமகனும் சுரேஷ்குமாரின் அன்புத் தந்தையும் கைலாசபிள்ளை, பாலசுப்பிரமணியம், யோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற வரதராஜா மற்றும் விமலராணி, யமுனாராணி, தெய்வேந்திராஜா ஆகியோரது அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2011) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 9.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக நிலாவரை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நவக்கிரி வடக்கு,*
*அச்சுவேலி.*
*தகவல்:*
**குடும்பத்தினர்.**

## 3 'ஏ' சித்தியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை நேற்றிரவு வெளியிடப்பட்ட - திருத்தப்பட்ட - தரநிலைப் பட்டியல்களின் அடிப்படையில் கலைப்பிரிவில் யாழ்.மாவட்டத்தில் முதல்தர நிலையை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மாணவி சத்தியா ஸ்ரீசோதிநாதன் பெற்றுள்ளார். இவர் 3 'ஏ' சித்திகளுடன் - 2.2798 'இசட்' புள்ளிகளையும் பெற்று யாழ்.மாவட்டத்தில் முதல் நிலையையும் தேசிய ரீதியில் 22ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.

நேற்றுமுன்தினம் வெளியாகிய உயர்தரப் பெறுபேற்றின் ஏற்பட்ட குழப்பம் காரணமாக மாணவர்களின் பெறுபேறுகளின் சரியான விவரங்களை அறிந்துகொள்ள முடியாமல் இருந்தது. மாணவர்களும் பெரும் குழப்பத்தில் மூழ்கியிருந்தனர். எனினும் நேற்றிரவு சீரான தரநிலைப் பட்டியல் வெளியாகி உள்ளதால் உறுதிப்படுத்தப்பட்ட பல முன்னணி பெறுபேறுகள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (பாடசாலைகள் சிலவற்றின் முன்னணிப் பெறுபேறுகள் மூன்றாம் பக்கத்தில்)

(ங-15-14-319-313)

## மரண அறிவித்தல்கள்

### மாணிக்கம் யோகம்மா

சரசாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கம் யோகம்மா நேற்று (26.12.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னர் - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மாணிக்கத்தின் அன்பு மனைவியும் தேவகாந்தம் (ராணி), ஸ்ரீசந்திரபோஸ் (வடபிராந்திய போக்குவரத்து சபை), தேன்மொழி (மல்லாவி வைத்தியசாலை), புஸ்பராசா (மெக்கானிக்), மலர்விழி (ஆசிரியை, சாவகச்சேரி மகளிர் கல்லூரி), தேவகாந்தன் (ஆசிரிய ஆலோசகர் துணுக்காய் கல்வி வலயம்) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2011) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

சரசாலை மத்தி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

### அருட்சோதி தனலட்சுமி

கிழானை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் கீரிமலையை வசிப்பிடமாகவும் கொண்ட அருட்சோதி தனலட்சுமி நேற்று (26.12.2011) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அருட்சோதியின் (காவடி) அன்புத் துணைவியும் சரவணை தியாகராஜாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற வடிவேலு சிவசுந்தரம் மற்றும் சுந்தரம் - அன்னம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற மோகன்ராஜ் மற்றும் அருட்ராஜ், பால்ராஜ், மதுஷா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2011) செவ்வாய்க்கிழமை கீரிமலையில் இருக்கும் அவரது இல்லத்தில் நடைபெற்று உடல் தகனக்கிரியைக்காக கிராயிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

நகுலேஸ்வர வீதி,
கீரிமலை

தகவல்:
அருட்சோதி
(கணவர்).

### சின்னத்தம்பி செல்லம்மா



புங்குடுதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்லம்மா நேற்று (26.12.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் கற்பகம் தம்பதி யரின் அன்பு மகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2011) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*884/1, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.*

*தகவல்:
சி.சுந்தரலிங்கம் (மகன்)
பிள்ளையார் ஸ்ரோர்ஸ் பங்காளர்,
பரமேஸ்வராச் சந்தி.*

## டில்லி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. முதலாவதாக, மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நம்பகத்தன்மையான - வெளிப்படையான விசாரணைகள் தேவையென அவர்கள் கூறியிருக்கின்றனர். இது மிகவும் அவசியமானது. அதனை நாங்கள் வரவேற்கிறோம்.

இரண்டாவதாக, அர்த்தபுஷ்டியான அரசியல் அதிகாரப்பகிர்வு நடைபெற வேண்டுமெனக் கூறியுள்ளது. அவ்விதமான சாத்தியப்பாடான அதிகாரப்பகிர்வு இடம்பெறும்போதே நிதர்சனமான ஒரு நல்லிணக்கம் ஏற்படும். அதையும் நாம் வரவேற்கிறோம்.

மூன்றாவதாக, இலங்கை அரசின் வாக்குறுதிகள் குறிப்பாக, இடம்பெயர்ந்த மக்களின் வாழ்வில் இயல்புநிலை திரும்புவதற்கும், யுத்தமற்ற சூழலில் அவற்றை நிறைவேற்ற அளித்த வாக்குறுதிகள் இலங்கை அரசால் நிறைவேற்றப்படவேண்டும். இதனையும் நாங்கள் வரவேற்கின்றோம்.

இந்தியாவின் இந்த அறிக்கையைப் பொறுத்தளவில் தமிழ் மக்களின் முக்கியமானதும், அத்தியாவசியமானதுமான தேவைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்தியா எமது விடயத்தில் நீண்டகாலமாக முக்கிய பங்கு வகிக்கும் ஒரு தரப்பாகும். தீர்வு முயற்சியில் இந்தியாவின் ஒத்துழைப்பு, அரசுக்கும் தமிழர்களுக்கும் தேவை. அந்த முயற்சியினூடாக நியாயமான - விசுவாசமான ஒரு தீர்வையே நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இந்தியாவின் இந்தக் கருத்தைச் சாதாரண ஒரு விடயமாக எடுத்துக்கொள்ளாமல் இலங்கை அரசு சாதகமாகப் பரிசீலிக்கவேண்டும். நிரந்தரமான அரசியல் தீர்வை எட்டும் முயற்சிகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்பு நிச்சயம் கிடைக்கும்.- என்று குறிப்பிட்டார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். (த-சி)

## உயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாகக் கேட்டபோதே பரீட்சைத்திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர்மேலும் தெரிவிக்கையில்,

ஜி.சீ.ஈ. உயர்தரப் பெறுபேறு 'இசற் ஸ்கோர்' ஆகியவற்றில் எந்தவிதமான தவறுகளோ மாற்றங்களோ இடம்பெறவில்லை. மாவட்ட மற்றும் தேசிய ரீதியிலான தர நிலைகளிலேயே சிறு தவறுகள் இடம்பெற்றுவிட்டன. பெறுபேறுகளைக் கணினி பதிவேற்றம் செய்யும்போதே இந்தத் தவறுகள் இடம்பெற்றுவிட்டன.

இவற்றைத் திருத்துவதற்கான நடவடிக்கைகளைப் பரீட்சைத் திணைக்களம் துரித கதியில் மேற்கொண்டு நேற்றிரவே புதிய தர நிலைகள் வெளியிட்டுவிட்டது - என்றார்.

(த-11-86)

## வட, கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாணம், முல்லைத்தீவு முதல் மட்டக்களப்பு வரையிலான கரையோரப் பிரதேசங்களில் மற்றும் மாவட்டங்களில் ஏனைய இடங்களிலும் கடும் மழை மற்றும் கடும் காற்றும் வீசும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்தொழிலுக்கு உகந்த காலநிலை இல்லாததன் காரணமாக மீனவர்களைத் தொழிலுக்கு செல்ல வேண்டாம் என்றும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-15)

## மன்னார் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்ட அகழ்வைத் தொடக்கி உள்ளோம்.

இலங்கை அரசின் பெற்றோலிய வளக் கனவை இந்த அகழ்வின் மூலம் பூர்த்தி செய்வோம் என நம்புகிறோம்.

-இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ங-சி)

## குற்றச்சாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடிய அரசியல் தீர்வை வழங்குவதில் எமது அரசு உறுதியாக இருக்கின்றது. எமது இந்த நிலைப்பாட்டை இந்தியாவும் மதிக்கின்றது. அனைத்து அரசியல் கட்சிகளுடனும் பேச்சு நடத்தி நாம் நிச்சயமாகத் தீர்வொன்றைக் காண்போம். எமது செயற்பாடுகள் குறித்து நாம் இந்தியாவுக்கு அவ்வப்போது தெளிவுபடுத்திவருகிறோம்.

மனித உரிமை மீறல்கள், இறுதிப்போரின்போது இடம்பெற்றிருக்குமானால், அது குறித்து விசாரணை நடத்த எப்போதுமே தயாராகவே இருக்கின்றோம். கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக எமது நிலைப்பாடு தெளிவானது.

யாராவது தவறிழைத்திருந்தால் அவர்களுக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்படும். இலங்கையில் அமைதித் தீர்வு ஏற்படுவது தொடர்பாக இந்தியா காட்டும் அக்கறையை நாம் மதிக்கின்றோம் - இவ்வாறு பிரதி வெளிவிவகார அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

## தீப்பற்றின...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரு மோட்டார் சைக்கிள்களும் தீப்பற்றிக்கொண்டன. மோட்டார் சைக்கிள்கள் இரண்டும் அந்த இடத்திலேயே எரிந்து நாசமாகின. அவற்றைச் செலுத்திச் சென்ற இருவரும் எரிகாயங்களுக்கு உள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதன்போது கைதடி நாவற்குழியைச் சேர்ந்த கந்தையா மனோகரன் (வயது 62), கரணவாய் கரவெட்டியைச் சேர்ந்த பொன்னையா பழனிமலை (வயது 60) ஆகிய இருவருமே எரிகாயங்களுக்கு உள்ளாகினர்.

சம்பவத்தின் போது பெற்றோல் நிலையத்தில் நெருப்பு கொளுந்து விட்டு எரிந்த போதும், அங்கிருந்த தீயணைப்புக் கருவியின் உதவியுடன் உடனடியாக அது அணைக்கப்பட்டது. காயமடைந்தவர்கள் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இவர்களின் கைத்தொலைபேசி உள்ளிட்ட முக்கிய ஆவணங்களும் விபத்தில் சிக்கி நாசமானதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்துக்கு விரைந்த கோப்பாய் பொலிஸாரும், யாழ். பொலிஸ் நிலைய தடயவியல் நிபுணர்களும் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்த தீ விபத்துச் சம்பவத்தால் கல்வியங்காட்டுச் சந்தியில் நேற்று பரபரப்பான சூழல் காணப்பட்டதுடன், எரிந்த மோட்டார் சைக்கிள்களை பார்ப்பதற்கு பெருமளவானோர் கூடி நின்றதையும் அவதானிக்க முடிந்தது. (ங-4-15-86-26)


வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்)
சந்தைக் கடைத்தொகுதிகள் குத்தகைக்கு/வாடகைக்கு விடுவதற்கான

## கேள்வி அறிவித்தல் 2012

கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி - 30.12.2011 வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி -30.12.2011 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி வரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி - 30.12.2011 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி வரை

| இல | குத்தகை விவரம் | மாத வாடகை | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| மல்லாகம் உப அலுவலகம் | | | | | |
| 1 | மல்லாகம் சந்தை கோழிக்கடை | 500.00 | 100,000.00 | 1000.00 | 500.00 |
| 2 | அளவெட்டி மலைவேம்படி கோழிக்கடை இல.06 | 500.00 | 100,000.00 | 1000.00 | 500.00 |
| 3 | அளவெட்டி மலைவேம்படி கோழிக்கடை இல.07 | 500.00 | 100,000.00 | 1000.00 | 500.00 |

குறிப்பு
- மாத வாடகை யாவும் விலை மதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் அறவிடப்படும்.
- கேள்விப் பத்திரப் பணம், கேள்வித்தொகை, மாத வாடகை ஆகியவற்றிற்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT 12%) தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT2%) யும் மேலதிகமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
- கேள்விப்பத்திரம் கோருபவர்கள் ஆள் அடையாள அட்டையுடன் அதன் போட்டோப் பிரதியையும் கொண்டு வருதல் வேண்டும்.
- இறைச்சிக்கடை விண்ணப்பம் பெறுபவர்கள் முன்பு கடை நடத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என்பதை உறுதிப்படுத்திய கடிதம் சமர்ப்பிக்க வேண்டும்.
- போதிய காரணங்களால் கேள்வியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.
- கேள்விப் படிவம் பூரணப்படுத்தப்பட்டு அரக்கு முத்திரையிட்ட கடித உறையில் குறித்த தினத்துக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ சேர்ப்பதுடன் கேள்விப் படிவத்தின் ஒரு பிரதியை பிராந்திய 'உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்' அவர்களுக்கும் அனுப்புதல் வேண்டும்.
- ஏனைய மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்திலும் மல்லாகம், தெல்லிப்பழை உப அலுவலகங்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை (மல்லாகம்), 26.12.2011

சோமசுந்தரம் சுகிர்தன், தவிசாளர்
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை (மல்லாகம்)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

ஸ்தோத்திர ஆராதனை கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது.

சங்கீதம் 116:15



### திருமதி மாணிக்கம் தங்கம்மா

பிறப்பு 10-01-1937 இறப்பு 27-11-2011

தாயாரின் வாழ்வுக்காக இன்று(27.12.2011) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஸ்தோத்திர ஆராதனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இராச வீதி, திருநெல்வேலி

மா.கணேசலிங்கம் (மகன்)
உரிமையாளர் (ராகவி வெல்டிங் வேர்க்ஸ்)

**NEW SCIENCE CENTRE**
Clock Tower Road, Jaffna
A/L 2014
**இரசாயனவியல்**
சு.சுரேஸ்குமார்
ஆரம்பம் : 28.12.2011 (வியாழன் 9.30 மணி)

**NEW SCIENCE CENTRE**
Clock Tower Road, Jaffna.
A/L 2014
**கணித விஞ்ஞானப் பிரிவு**
ஆரம்பம்: 28.12.2011
(புதன் மாலை 3.00 மணி)

| இரசாயனவியல் | பௌதீகவியல் |
|---|---|
| அன்பு G. Beno | G. பிரபா |
| இணை.கணிதம் | உயிரியல் |
| S. ரமேஸ் | A. தங்கராசா |

அனுமதிகளை முற்கூட்டியே பதிவு செய்யவும்

**A/L - 2014**
(கலை வர்த்தகப் பிரிவுகள்)
ஆரம்பம்:
ஜனவரி - 7
காலை 9.00 மணி
**DMI**
Jaffna
(C/7166(5)

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ். கிளையில் ஜேர்மன்-Deutsch, நெதர்லாந்து-Dutch மற்றும் பிரெஞ்சு புதிய பிரிவுகள் புத்தாண்டை முன்னிட்டு 01/01/2012 ஆரம்பமாகின்றன.

| நேர விவரம் | | |
|---|---|---|
| 8-10 | French | (புதிய பிரிவு) |
| 10-1 | Deutsch | (புதிய பிரிவு) |
| 2-4 | Netherland Dutch | (புதிய பிரிவு) |

தொடர்புகளுக்கு:
**Vivekananda Academy**
(Centre for International Language Studies)
Gov.Reg.No-W/A 76795
No-221/1, Power House Road, Jaffna.
(ஆஸ்பத்திரி பின் வீதி)
Tel: 021-222-0393 / 021-321-6928 / 077-484 2464.

- கனடா செல்ல வேண்டுமா?
- பிரான்ஸ், சுவிஸ், நோர்வே செல்ல விருப்பமா?
- IELTS இல்லாமல் லண்டன் பல்கலைக்கழகத்தில் கல்வி பயில வேண்டுமா?
- அவுஸ்திரேலியா குடும்பத்துடன் செல்ல விளைகின்றீர்களா?
- அனைத்து நாடுகளுக்கும் உரிய விசா ஆலோசனைகள்

வாருங்கள் தினமும் 8.30 - 4.30
உங்கள் முன்மாதிரியான ஆலோசனை நிறுவனத்துக்கு
விசா வியலம் விளம்பும் பிரிவு
**திசை காட்டி (பிறைவேற்) லிமிட்டெட்**
முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
0212219016, 0214914527
web: www.thisaikaddi.lk
e-mail: thisaikaddi@sltnet.lk
(யாழ். நகரிலிருந்து கஸ்தூரியார் வீதி ஊடாக வருகையில் யாழ். இந்துக்கல்லூரி மைதானம் கடந்த உடன் வலது புறமாக வரும் ஒழுங்கை)



புத்தாண்டை முன்னிட்டு மாபெரும் OFFER
4700/= பெறுமதிமிக்க பரிசுப்பொதி ஒன்று இலவசம்

| | |
|---|---|
| Intel 3.0 GHz | (3 Year) |
| Intel Chip Mother Board | (3 Year) |
| 2 GB DDR3 RAM | (3 Year) |
| 80 GB Sata HDD | (1 Year) |
| DVD Writer Lite on | (1 Year) |
| ATX Casing | (1 Year) |
| 19" LCD | (3 Year) |
| Keyboard | (1 Year) |
| Mouse | (1 Year) |
| UPS DCP | (2 Year) |

36,500/-

இச்சலுகை 26. 27. 28. 29. 30 ஆம் திகதி வரை மட்டும்
WinTech,
187/1, Parameswara Junction,
Palaly Road,
Thirunelvely
T.P: 021 569 9418

**CHEMISTRY CENTRE**
33, அரசலி வீதி
ஓட்டுமடம்
சந்தியிலிருந்து 20 m
30.12 வெள்ளி
ஆரம்பமாகும்
அனேக அலகுகள்
INORGANIC
Mon, Tue, Fri 6-7 p.m
ORGANIC
Mon, Tue, Fri 7-8 p.m.
BASIC
Tue 5-6p.m, Fri 3-4p.m.
GENERAL
Fri 4-6 p.m.
CHEMISTRY CENTRE BRANCH இல
(300, பலாலி வீதி, கந்தர்மடம்)
A/L 2014
ஆரம்பம்
தமிழ் மொழிமூலம்
31.12 சனி 4.30
ஆங்கில மொழிமூலம்
31.12 சனி 5.30
By: அன்பு
தொடர்பு:
0779037351

வன்னியில் 'உதயன்' பகுதி அலுவலகச் சேவையைப் பெற வருகிறது வன்னிப் பணிமனை. உங்கள் விளம்பரங்கள், செய்திகள் என்பவற்றைப் பிரசுரிக்க நாடுங்கள்...
**'உதயன்'**
வன்னிப் பணிமனை
(புனித தெரேசா பாடசாலை முன்பாக)
கரடிப்போக்கு சந்தி,
கிளிநொச்சி.

**NEW SCIENCE COLLEGE**
கன்னாதிட்டி - யாழ்ப்பாணம்
**2014 A/L**
(தமிழ், ஆங்கில மூலம்)
**பௌதிகவியல்**
By: M. கருணாநிதி B.Sc. (Spl)
ஆரம்பம் : 01.01.2012 ஞாயிறு 9.00 A.M
**இணைந்த கணிதம்**
By: P. விமலநாதன் B.Sc. (Spl)
ஆரம்பம் : 01.01.2012 ஞாயிறு 10.00 A.M
2012 DAY, 2012 A/L, 2013 A/L வகுப்புகள் நடைபெறுகின்றன.
(12153)

**பாடசாலை பிரயாண சேவை**
**SCHOOL VAN SERVICE**
◈ உங்கள் வீடுகளிலிருந்து யாழ். நகரின் அனைத்துப் பிரபல பாடசாலைகளுக்கும்
◈ முற்றிலும் குளிரூட்டப்பட்ட, சொகுசு இருக்கை வசதிகளுடன் கூடிய பாதுகாப்பான பிரயாண சேவைக்கு...
உடன் அழையுங்கள்
**0779591100 / 0778594178**
(பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டவை)

**பிரயாண வழி:**
பண்டத்தரிப்பு → சித்தன்கேணி → சங்கானை → சீரணி → மானிப்பாய் → உடுவில் → மருதனார் மடம் → கே.கே.எஸ். வீதி வழியாக → யாழ் நகரப் பாடசாலைகள்.

நேற்று இன்று அல்ல என்றென்றும்
வலி. மேற்கில் தனக்கென்று தனித்துவமான கல்வி நிறுவனம்
**2014 A/L** **SUBRA 14**
சித்தன்கேணி-வட்டுக்கோட்டை
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பம்
05.01.2012 வியாழன் மாலை 4 மணி (சுப வேளையில்)
தரமானதும் தகுதியானதுமான ஆசிரியரின் வழிகாட்டலில்

| பாடம் | சித்தன்கேணி | வட்டுக்கோட்டை |
|---|---|---|
| **கலைப்பிரிவு** | | |
| தமிழ் | யசிந்தன் | காந்தன் |
| அளவையியல் | ES.பவன் | ES. பவன் |
| நாடகம் | கனேஷ் | வினோ |
| இந்துநாகரிகம் | சந்திரன் , சிறிஸ் | சிறிஸ் |
| அரசியல் | சுகாஷ் | இளங்கோ |
| வரலாறு | ஆனந்தன் | பத்மன் |
| புவியியல் | ஐங்கரன் | பாபு |
| மனைப்பொருளியல் | மஜீபன் | மஜீபன் |
| விவசாயம் | சசி | சசி |
| Git | சசிகரன் | அம்பி |
| **வர்த்தகப்பிரிவு** | | |
| வணிகக் கல்வி | நந்தீஸ் | உங்கள் ஆசிரியர் |
| கணக்கீடு | சபேசன் | D. Sam |
| பொருளியல் | ஜெயக்குமார் | S.S.சிறி |
| **கணித /விஞ்ஞான பிரிவு** | | |
| இணைந்த கணிதம் | சிவகரன் | தவசேகர் |
| பௌதிகவியல் | மதி | தில்லை |
| இரசாயனவியல் | வர்ணன் | G. பெனோ |
| உயிரியல் | ஜெல்கா | தயாபரன் |

(C/7191)(6,7,8)
A/L Day Class 02.01.2012 இல் ஆரம்பம்

**THE SCIENCE CORNER**
Clock Tower Lane, Jaffna.
**A/L 2014**
ஆரம்பம் : 28.12.2011
புதன் மதியம் 12.00

| PHYSICS | BIOLOGY | CHEMISTRY | C.MATHS |
|---|---|---|---|
| செல்வன் | பொன்திவாகரன் | ராஜா | சிவகரன் |
| செந்தில் | குகானந்தன் | அன்பு | |

தமிழ், ஆங்கில மொழி மூல கணித உயிரியல் வகுப்புகள்

க.பொ.த உயர்தர பெறுபேற்றுக்கமைய 100% வரை Scholorship
After A/L O/L
**Engineering-USA**
Rs.20,000 Scholorship
**BIT** University of Colombo
Only Rs 15,000 1 year course fee
**CIMA-UK**
Only Rs 14,400 Per Level
University A/L Students } 50% Off
மாணவர்கள் BCS - UK , IELTS, TOEFL, CCNA, Java, ICDL, கற்கைநெறிகளையும் கற்கைநெறிக்கட்டணமின்றி கற்கலாம்.
UK, USA பல்கலைக்கழகங்களில் Master Degree
Qualified Lectures Panel, Passing Guarantee,12 Years Experience
Listed college-CIMA UK, Silver Award-Microsoft-USA, Best performance Award-University of colombo

**MCS**
Supported By UNDP/JRRP
324, Palaly Road, Parameswara Junction
தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.
**Free5** Course fee*
Diploma Courses..
*MsOffice, AutoCAD, *Web Designing
*Hardware *Accounting *DTP *English
SMS Your name & Course to 772395895 & Get Scholorship

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 29 | 07 |
| * | * |
| 08 | 01 |
| * | * |
| 1950 | 2011 |



அமரர் சங்கரலிங்கம் சிவலிங்கம்
( உரிமையாளர்- கமலா கபே, மன்னார்)
திதி-திரிதிதியை 27.12.2011

ஓராண்டு ஆனபோதும்
ஒவ்வொரு நிமிடமும் உங்கள்
நினைவுகள் தான்-- அப்பா!
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அப்பா என அழைப்பதற்கு
நீங்கள் இல்லையே-- அப்பா!
எத்தனை ஆண்டுகள் சென்றிடினும்
எமக்கு நீங்கள் அணையாத தீபம்தான்-- அப்பா!

நீங்காத நினைவுகளுடன்,
குடும்பத்தினர்

தகவல்- மகள் சுபா,
(சட்டத்தரணி, மன்னார்)

பொறித்த விலையைவிடக் குறைவான விலையில்....
**கபிலா காலணியகம்**
24, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(27.12.2011 முதல் 01.01.2012 வரை)
பாடசாலை மாணவர்களுக்கான Bata DSI பாதணிகளைப் பெற்றுக்கொள்ள
**கபிலா பாதணியகம்**
13,நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.